Vol. 7. No. 36. 4th October 1936. Price 2 As. Regd. No. 2514

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY



காந்தி ஜெயந்தி.



மூன்று தலைமுறைகளாக
தாய் தன் மகளுக்கு
வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்
எப்படி குழந்தைக்கு
சுகம் தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

மணமகன் மணமகளின் கையைப் பிடித்துக்கொண்டு, "பஞ்சபூதங்களின் சாக்ஷியாக......உன்னைக் கைவிடுகிறதில்லை" என்றுரைத்தான். உடனே அனைவரும் அதிர்ச்சிகொள்ளும்படியாய், "அசத்தியனே! உனக்குமா பஞ்சபூதம் சாக்ஷி" என்று உரத்த குரலுடன் தலை முக்காடிட்டு முகமூடியணிந்திருந்த ஓர் யுவதி பந்தலுக்குள் வந்து மணமகன் அருகே நின்றாள்.

க. அலமேலு.

சிறு கதை

மல்லிகா

வி. சீதாராம்

இரவு சுமார் மணி 8 இருக்கலாம். தவறி தரையில் விழுந்துவிட்ட தாமிரக் காசையும் தட்டு தடங்கலில்லாமல் கண்டு எடுத்துக்கொள்ளும் படியான வெண்ணிலவு வீசுகின்றது.

இளங்காதலர் இருவர் ஒருவருக்கொருவர் இடையில் கைபோட்டு அணைத்தவண்ணம் கால்பேஸ் மைதானத்தில் உலாவிவந்தனர்.

மங்கை.—அன்பரே! என் பாக்கியமே பாக்கியம். தாங்கள் எனக்குக்காதலராக அமையப்பெற்றது நான் முன் ஜன்மத்தில் செய்த பூஜாபலன் என்றே அறிகின்றேன். எனக்குப் புருஷார்த்தத்தைக் கொடுக்க வந்த புண்ணியனே! தங்களை, "நாதா" என்றழைக்க என் தயங்கவேண்டும்?

வாலிபன்:—என் கண்ணே! மல்லிகா! நீ சொல்வதெல்லாம் என்மேல் உள்ள அன்பினாலென்பதை உணர்ந்தேன். அன்று முதல் தடவையாக உன்னைக் கண்டபொழுதே, அதுவரை இல்லாத ஒரு புத்துணர்ச்சி என்னை உன் வயமாக்கிவிட்டது. நேற்று உன்னுடன் சந்தித்துப் பேசும்வரை, எனக்கு இது பூவுலகம் என்றே தோனறவில்லை. என் அன்பே! நேற்று வெகுநேரம் சென்று வீடு சென்றனையே! உன் பெற்றோர்கள் ஏதேனும் சந்தேகம் கொண்டார்களோ!

மல்லிகா!—நாதா! அதொன்றும் இல்லை. கேட்டார்கள். நான் தங்களைக் குறித்துச் சொன்னேன். அதற்கு அவர்கள் தங்களின்உண்மைக் காதல் நிலையை அறிந்து தங்களுடன் நட்புக் கொள்ளும்படி எச்சரித்தார்கள். ஆருயிரே! நம் காதலை ஒருவராலும் பிரிக்க முடியாது.

யுவன்.—ஆம். பெரியோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு புத்திசொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாமும் என்ன? வயதுவராத இளம்பச்சைக்குழவிகளல்லவே? என்கண்ணே! உனக்கும் வயது பதினெட்டாகின்றது என்று சொன்னாய். உன்னை இனி யாரால்தான் என்னுடன் காதல் கொண்டு பழகுவதைத் தடுத்துக்கொள்ள முடியும்? மல்லிகா! உனக்கு என்மேல் சந்தேகமுண்டோ? தெய்வசாக்ஷியாக உன்னையே மணப்பேன் என்பது சத்தியம்.

மல்லிகா:—நாதா! என்ன சொன்னீர்கள். நானா! தங்கள் பேரிலா! சந்தேகமா! நன்றாயிருக்கு! இனி அவ்விதம் சொல்லாதீர்கள்! துக்கம்

கின்றது! வாருங்கள் காருக்குச் சென்று இருப்போம்.

* * * *

மாதங்கள் நான்கு சென்றன. இளங் காதலர் இருவரும் கால்பேஸ் மைதானத்தில் சமுத்திரத்தை நோக்கியவாறு நின்றிருந்து உரையாடினர்.

யுவன்:—நாதலி! உன்னிடம் சிறிது நாட்களுக்கு ரஜா கேட்க எண்ணுகினறேன். அதுவும் நமது நன்மையைக் கோரியேதான்.

மல்லிகா:—என்ன? பீடிகை போட்டுப் பேசுகின்றீர்களே! எனக்சொன்றும் விளங்கவில்லையே. ரஜாவா? என்னை விட்டு விட்டுப் போகவா? அதற்கொன்றும் நான் சம்மதிக்க மாட்டேன். அதிருக்கட்டும்; தங்கள் தகப்பனருக்கு நம் விவாக விஷயமாய் எழுதினதாகச் சொன்னீர்களே! அதற்கு என்ன பதில் எழுதினார்கள். விஷயத்தை மட்டும் மறந்து விடுகின்றீர்கள். வேறு என்ன எல்லாமோ பேசுகின்றீர்கள்.

யுவன்:—என் ஆருயிரே! கவலைகொள்ளாதே. அது விஷயத்தைத் தான் உன்னிடம் சொல்ல ஆரம்பித்தேன். எனக்சப் பரீக்ஷையும் முடிவாய் விட்டதல்லவா! என் தகப்பனார் என்னை நேரில் கலந்து விவாக விஷயமாய் முடிவு செய்யப் புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கின்றார். ஆகையால் நான் நாளையே சென்று விவாக முகூர்த்த நாளையும் குறிப்பிட்டுக்கொண்டு 4-தினங்களில் திரும்ப வந்து விடுகின்றேன்.

மல்லிகாவின் மனம் வருத்த முற்றதை முகம் காட்டிற்று. கண்கள் கலங்கின. நெடுமூச்சு விட்டாள். "நாதா! விவாக தினத்தை இங்கிருந்தே முடிவு செய்துவிடலாம் என்றுரைத்தீர்களே! நான் அபலை: இப்பொழுது நான் 'குளித்து' 3 மாதத்துக்கு மேலாய் விட்டதென்பதும் தாங்கள் அறிந்ததே. என்பெற்றோர்கள் சந்தேசத்தை ஊர்ஜிதம் செய்து விடாதேயுங்கள். அன்றுசெய்த சத்தியத்தை மறந்து விடாதீர்கள் இச்சமுத்திரத்தின் அலைகள் கரையில் வந்து மோதி, மோதி அழிவதுபோல் என் வாழ்நாளை அழித்து விடாதீர்கள். என் ஆருயிரே! எனக்குத் தாங்கள்தான் கதி. தாங்களே என் ஜீவன்! தாங்களே என் உடல், தாங்களே எனக்கு எல்லாம்.

யுவன்:—கண்ணே மல்லிகா! என்னுடன் நான்கு மாதமாக நெருங்கிப்பழகிய நீயுமா என்

பெண்புத்தி பேதமை என்பதைக் காண்பிக்கின்றனையே. நன்றாய் கல்விகற்ற நீயும் நம் நாட்டுமக்களின் சஞ்சலபுத்தியை ஒழிக்கவில்லையே. வருத்தமுறாதே இரண்டு தினங்களில் திரும்பவந்து விடுகின்றேன். உயிரை விட்டு உடல்பிரிந்து நிற்குமா? உன்னையே சாஸ்வதப்பொருளாக எண்ணியிருக்கின்றேன். நீ வருந்துவதைக்காண என்னால் சகிக்க இயலாது நேரம் செல்லுகின்றது வீடுசெல்வோம்.

* * * *

ஒன்றொன்றாக தினங்கள் சென்றுகொண்டே இருக்கின்றன. ஊணையும் மறந்தாள்! உறக்கத்தையும் மறந்தாள்! நல்லுடையையும் மறந்தாள்; உல்லாஸ கால்பேஸ் 'வாக்'கையும் மறந்தாள். உத்தமன் என நம்பி உடலை ஒப்புவித்த காதலன் வருகையை எதிர் நோக்கியவாறிருந்தாள் மல்லிகா.

அருமை மகளின் அரிய நிலையை அறிந்தனர் அவளது பெற்றோர். மல்லிகா ஒருவாறு அவர்களால் தேற்றப்பட்டாள். மாதமும் ஒன்று கழிந்தது. காதலனிடமிருந்து ஒரு தகவலும் கிடைக்காததால் கொடுந் துயரடைந்தாள்.

ஒரு நாள் மல்லிகா சோர்வுற்றிருக்கையில் அவள் விலாசம் வைத்து தபால்காரனால் ஒரு கடிதம் கொடுக்கப் பெற்றாள். கவரின் மேற்புறத்தில் புங்குடுத் தீவு என்றுள்ள பெயரை வாசித்தாள். சிறிது சந்தோஷம் கொண்டாள். கவரை உடைத்தாள். உள்ளிருந்த கடிதத்தைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தாள்.

என் அருமைத் தோழி மல்லிகா,

ஆண்டவன் கிருபையால் நான சௌக்கியமே. உன் சௌக்கியத்தையும் அறிய அவாவுடையவளாய் இருக்கின்றேன். நம் கல்வி முடிந்து உன்னை விட்டுப் பிரிந்து வந்தபின் அநேகந் தடவைகள் உன்னைப் பார்த்து வர எண்ணியும் முடியாமற் போய் விட்டது. எனக்கு இபபொழுது என் மனத்திற்கு விருப்பமில்லாத விவாகம் என் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. பெற்றோர்களுக்கு வருத்த முண்டுபண்ணலாகாது என்ற எண்ணம் கொண்டு

விட்டேன். எனக்குக் கணவனாக நிச்சயிக்கப்பட்டிருப்பவருக்கும் இவ்வூர்தான். அவர் பெயர் நீலகண்டன். அவர் தகப்பனார் பெயர் வேணுநாதர். என் கணவனும் கொழும்பில் சட்டப் பரீக்ஷைக்கு வாசித்து,பரீக்ஷை முடிந்து சுமார் ஒரு மாதத்துக்கு முன்தான் இவ்வூர் வந்தாராம். பிரிய சகி, விவாகம் —ந்தேதி வைத்திருக்கின்றது. நீ உன் பெற்றோர்களையும் அழைத்துக்கொண்டு அவசியம் வரவேண்டும். நீ வந்து என் பக்கலில் இருந்தால் நான் சமாதானமடைவேன். இத்துடன் விவாக அழைப்புக் கடிதமும் இருக்கின்றது. மற்றும் நேரில் பேசிக்கொள்ள விருப்பமுடையவளாயிருக்கின்றேன்.

இங்ஙனம்,

உனது அன்புள்ள,

வனஜா.

மல்லிகா கடிதத்தை வாசித்து வரும்பொழுது நீலகண்டன், வேணுநாதர், என்ற பெயர்களைப்பார்த்ததும் மனத்துள் சந்தேகமுற்றாள். திரும்பத் திரும்ப 2, 3 முறை கடிதத்தை வாசித்தாள். நீலகண்டன் தன் காதலனே என்பதை உணர்ந்தாள். மெய் சிலிர்த்தாள். உடலெங்கும் வியர்வை கப்பிக்கொண்டது. நாவறண்டது. கண்கள் பஞ்சடைந்தன. ராமா என்ற சப்தத்துடன் சோர்ந்து தரையில் வீழ்ந்தாள்.

அவளது பெற்றோரால் மூர்ச்சை தெளிவிக்கப்பட்டாள். தாயாரின் முகத்தைப் பார்க்கவும் கூசினாள். கண்ணீர் வடிந்தவாறிருந்தாள். 'அம்மா நான் வஞ்சிக்கப்பட்டேன். நான் காதலித்த அக்காதலன் நீலகண்டன் என் சிநேகிதி ஒருத்தியை மணக்க ஏற்பாடு செய்திருக்கின்றான். இக்கடிதத்தைப் பார். தந்தையின் சொல் மிக்க மந்திரமில்லை என்ற தமிழ் மூதாட்டியின் வார்த்தையையும் மறந்தேனே! மூத்தோர்சொல் அமிர்தம் என்றதையும் உதறித் தள்ளினேனே! என் அருமை அன்னையே! உங்கள் வார்த்தையை உதாசீனம் செய்த பலனை அனுபவிக்கின்றேன். நான் அழிந்ததோடு மல்லாது உங்களுக்கும் அழியா அபகீர்த்



சேலம் ஜில்லா கல்வி அதிகாரி மிஸ்டர் வர்க்கிஸ் சமீபத்தில் தர்மபுரி உயர்தரப் பாடசாலைச் சாரணச் சிறுவர்களைப் பார்வையிட்டார்.

சண்டாளி ஏனோ பெண்ணாய்ப் பிறந்தேன். ஹா, ஆண்கள் கொடிய வஞ்சகர்கள்'' என்று புலம்பினாள். தரையில் புரண்டாள்.

மல்லிகாவின் தாயாரும் மகளின் நிலையை யறிந்து வாய் விட்டுக் கதறினாள். மல்லிகாவின் தந்தை துக்கத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு இருவரையும் ஆற்றிக்கொண்டிருந்தார்.

ஆவேசம் வந்தவள்போல் திடீரென மல்லிகா எழுந்துட்கார்ந்தாள். பெற்றோரை விரைத்து நோக்கினாள். "தந்தையே! நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளேன். என் தோழி உங்களையும் அழைத்துக் கொண்டு விவாகத்துக்கு வரும்படி எழுதியிருக்கின்றாள். அதன்படியே நீங்களும் என்னுடன் விவாகத்துக்கு வரவேண்டும். பின் நடப்பதை நீங்கள் நேரில் பார்ப்பீர்கள்'' என்றுரைத்தாள். அவளது பெற்றோர்களும் மகள் மேல் உள்ள பாசத்தால் சம்மதித்தனர்.

புங்குடித் தீவில் வனஜாவின் வீட்டில் பந்தலில் அமைக்கப் பட்டுள்ள மண வறையில் சிநேகிதர்களாலும், பந்துக்களாலும் சூழப்பட்டு நீலகண்டனும் வனஜாவும் கலியாண கோலத்தில் அமர்ந்திருக்கின்றனர். பூர்வாங்கச் சடங்குகளெல்லாம் நடந்தேறின. மணமகன் மணமகளின் கையைப் பிடித்துக்கொண்டு, பஞ்சபூதங்களின் சாக்ஷியாகவும் இச்சபையோர் சாக்ஷியாகவும் என் ஆயுள் காலம் உள்ள வரை நான் உன்னைக் கைவிடுவதில்லை'' என்றுரைத்தான்.

பந்தலில் உள்ளவர்கள் அதிர்ச்சி கொள்ளும்படியாய் "அசத்தியனே! உனக்குமா பஞ்சபூதம் சாக்ஷி'' என்று உரத்த குரலுடன் தலை முக்காடிட்டு முக மூடியணிந்திருந்த ஓர் யுவதி பந்தலுக்குள் வந்து மணமகன் அருகே சென்றாள்.

அவள் வந்த வேகத்தில் அவளைத் தடுப்பார் அங்கு யாரும் இல்லை. வந்த யுவதி தலை முக்காட்டையும் நீக்கி, முக மூடியையும் விலக்கினாள். மணமகன் நீலகண்டன் ஏறெடுத்துப் பார்த்தான். மூர்ச்சித்து ஒருபுறமாகச் சாய்ந்தான். மணமகள் பிரமித்துப் போய் கண்கள் இமையாது பார்த்தவாறிருந்தாள்.

மல்லிகா:—என் அருமை தோழி வனஜா; எழுந்திரு; உனக்கு சகலமும் விளங்கச் சொல்லுகின்றேன்?'' என்று கூறிக்கொண்டே அவளை கை கொடுத்துத் தூக்கி, கூட்டம் வழிவிட வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள்.

மணமகனை அவன் விழுந்த இடத்தினின்றும் எடுத்துப் போய் மூர்ச்சை தெளிவித்தனர். தாலிகட்டும் முகூர்த்தம் தடைபட்டது. பெண்கள் கூட்டத்துள் மல்லிகா, நீலகண்டனுக்கும் தனக்கும் நடந்த விருத்தாந்தம் ஒன்றையும் விடாது உரைத்தாள். பெண்கள் எல்லாரும் அவளது நிலையை அறிந்ததும் துக்கித்தனர். மணமகனைத் தூஷிக்கவும் தொடங்கினர்.

ஆடவர்களுள்ளும் விஷயம் பரவலாயிற்று. சிலர் மணமகனையும், அவனின் தந்தையையும் வெறுத்துப் பேச ஆரம்பித்தனர்.

பெண்கள் தூஷணையையும் ஆடவர்கொடுஞ் சொற்களையும் கேட்டான் நீலகண்டன். மனத்துள் வருந்தம் கொண்டான். கழிவிரக்கம் கொண்டான். பக்கத்திலிருப்போரை ஏறெடுத்துப்பார்க்கவும் நாணினான்! தந்தையின் காலில்சாஷ்டாங்கமாய் விழுந்தான். "தந்தையே! என்னை மன்னியுங்கள். நான் அறியாத்தனத்தால் மல்லிகாவை வஞ்சித்து விட்டேன். உங்கள் முன்பாகத் தோன்றி என்னை அவமானம் செய்து, எனக்குநற்புத்தியைப் புகட்டினாள். என் பிழையை உணர்ந்தேன் என் அருமை மல்லிகாவையே எனக்கு மணம் செய்து வையுங்கள். வனஜாவும் வேறொருவன்பால் காதல் கொண்டிருக்கின்றாளென்பது உண்மையே'' என்று கேட்பவர் மனம் உருகும்படி கெஞ்சி வேண்டிக் கொண்டான்.

சவிர, எழுந்து பெண்கள் கூட்டத்திற்குள் புகுந்து மல்லிகாவின் காலடியில் மண்டியிட்டான் அவனைப் பார்க்கவும் வெறுத்து மறுபக்கமாக முகத்

(37-ம் பக்கம் பார்க்க)

"குப்த மந்திரம்''

ரூபா 100 இனாம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை ஏழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனாம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No. 33/6 P.O. Katrisarai (Gaya

கெற்ப சஞ்சீவி எண்ணை.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெற்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெற்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டுடன் வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. செலவு வேற

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,

146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை

தலைமை ஆபீஸ், பழனி



நீங்கள்

"கல்கத்தா

தொண்டை''

என்னும் வியாதியால் கஷ்டப்பட்டால் ஒரு சில துளி விட்டால்

Mistol

நிவர்த்தி நிச்சயம்

தென்னிந்தியப் பிரமுகர்கள்

திவான் பஹதூர்

எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்

(1872—1918)

(கே. எஸ். ஆர்.)

மக்களுக்கு உதவுவதில் நாட்டுக் கோட்டை செட்டிமார்களின் அக்கரை

நம் தென்னிந்தியாவில் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் வெகு காலமாகவே மிகப் பிரயோஜனகரமாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது பிரசித்தமான விஷயம். இவர்கள் அநேகம் முக்கிய விஷயங்களில் ஏராளமாகச் செலவழித்து வந்தவர்கள். இத்தேசத்திய மக்களுக்கு வேண்டுமானவற்றை உதவுவதிலேயே இவர்கள் அக்கரைகொண்டு வாழ்ந்துவந்தவர்கள். இவர்களில் பலர் கல்வி வசதியை விருத்தி செய்வதிலும், திருப்பணிகளை மேற்கொள்வதிலும் தங்களது வாழ்நாளைக் கடத்தியவர்கள். அநேகம் பழையதும் இடிந்துபோனதுமான நம் உயர்ந்த தேவாலயங்கள் சீர் குலைந்துவிடாமல் இவர்களில் பலர் காப்பாற்றியுள்ளனர்; தேவாலயங்களைச் சீர்படுத்த இவர்கள் ஏராளமாகச் செலவழித்தவர்கள்; இவர்கள் முனைந்து முயற்சிக்காவிடில் எவ்வளவோ கோவில்கள் இடிந்து இருந்தவிடம் தெரியாமல் போயிருக்கக் கூடும்! இம்மாதிரியாக அநேகம் சிறந்த துறைகளில் இக்கோஷ்டியினரில் பலர் உத்ஸாஹத்துடன் உழைத்துள்ளனர். இவர்கள் விஷயமாகக் குறிப்பிடவேண்டிய முக்கிய விஷயம் ஒன்று இருக்கின்றது. செட்டிமார்கள் மிகச் செல்வவந்தர்கள். ஆனால் இவர்கள்போல் இதரர்களில் சிலர் செல்வ வந்தர்களாக இருப்பினும், அவர்களுக்கு இவர்களிடம் சதா காணப்படும் தாராள குணம் கிடையாது இவர்கள் [illegible]ம் தாம் சேகரித்திருக்கும் நிதியைக் கூடியமட்டும் பலரும் அனுபவிக்கும் விதமாக வாழ்ந்து வந்தவர்கள். எந்தக் காரியம் அவசியமாகவிருப்பினும் அதை இவர்கள் பூர்த்தி செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது வெகு காலம் சகஜமாகவிருந்து வந்ததாகும். நாட்டுக்கோட்டை செட்டிகள் குடும்பங்களுள் ஒன்று மிகவும் பிரதானமானது; பிரசித்தியும் மிகவாய்ந்தது. பொதுவாழ்வின் முன்னணியில் இருந்து வந்தது. இக்குடும்பத்தில் தோன்றியவர்தான் காலஞ்சென்ற திவான் பஹதூர் ராமசாமி செட்டியார். இவரது குடும்பத்தினரும் பிராபல்யம் பெற்றவர்கள். திவான் பஹதூர் ராமசாமி செட்டியார் நம் தென்னிந்தியாவில் பிரதான புருஷர்களுள் ஒருவராக விளங்கி வந்தார். இவர் பல துறைகளிலும் ஈடுபட்டு, பலவழியாக நம் மக்களின் நலனை உத்தேசித்து உழைத்து வந்தவர். இவரது உழைப்பின் மஹிமை பலகாலமும் நிலைத்து நிற்கவல்லது. இவர்தாம் வாழ்ந்து வந்த சிதம்பரம் நகரத்திற்காக அரிய சேவை செய்தவர்.

வித்யா கைங்கர்யம்

திவான்பஹதூர் எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார் 1872-ம் வருஷத்தில் ஒரு சிறந்த நாட்டுக்கோட்டை செட்டியார் குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் கானாடுகாத்தான் என்னுமிடத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் செட்டியார்களுள்பிரதான புருஷர்களாகவும், மிக்க தனவான்களாகவும் விளங்கி வந்தவர்கள். இவருடைய வித்தியாப்யாஸம் சிறிது காலம் சிதம்பரம் பச்சையப்பன் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது; அங்கு இவர் ஆங்கிலபாஷையில் மிகுந்த தேர்ச்சி பெற்றார்; இவர் அப்பாஷையில் சமர்த்தராகவும் பிற்காலத்தில் திகழ்ந்தார். இவர் தமது வாழ்க்கை முழுவதையும் சிதம்பர க்ஷேத்திரத்திலேயே கழித்து வந்தார். இவருடைய சகோதரர் தான் செட்டிநாட்டு ராஜா டாக்டர் ஸர் அண்ணாமலை செட்டியார்; இப்பெரியாருடைய பெருந்தகையைப் பலரும் அறிவார்கள். சிதம்பரத்தில் பிரகாசிக்கும் அண்ணாமலை சர்வ கலாசாலையை ஸ்தாபிக்க முப்பது லக்ஷம் ரூபாய்கள் உத்ஸாஹத்துடன் உதவிய உத்தம புருஷர் அவர். இந்த வித்யா கைங்கர்யம் ஒன்றே இவரது பெருமைக்கு எக்காலத்திற்கும் போதுமானது; இது தவிர செட்டிநாட்டு ராஜா தமது அசாதாரணமான தாராள குணத்தை வேறு இதர வழிகளிலும் நமக்குக் காண்பித்துள்ளார். இந்த வம்சத்தில் தோன்றியவர்கள் காலஞ்சென்ற ஸர் எம். ஸி. டி. முத்தையா செட்டியரும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியாரும் ஆவார்கள். ஸர் முத்தையா செட்டியாரும் மற்றவர்கள் போலவே பொது நன்மைக்காக உழைத்தவர்; மக்களின் வித்தியாபிவிருத்தியில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர். இப்போது வேப்பேரியில் இவரது பெயரால் நிலவிவரும் பள்ளிக்கூடம் வித்யா விஷயமாக இவருக்கு இருந்துவந்த சிரத்தா பக்திக்குப் போதுமான சாக்ஷியமாகும் ஆண்டிப்பட்டி ஜமீன்தாரான பெத்தாச்சி செட்டியார் தமது தனம் பூராவையும் தான தர்மங்களை சலியாமல் வழங்குவதிலேயே செலவழித்தவர். கேட்போருக்கு இல்லையென்று சொல்லாத ஆச்சரிய குணம் இவரிடம் இருந்ததை அநேகர் அறிவார்கள். இவரும் வித்யாபிவிருத்திக்காக மிகவும் உதவியவர். இவரிடமிருந்து திரவிய ஸஹாயம் பெற்றுப் படித்த மாணவர்களின் எண் கணக்கிட முடியாது. இது தவிர இவர் பல கலைகளிலும் அபிருசியுள்ளவராகி, அவைகளை வளர்ப்பதில் பின்வாங்காமல் இருந்துவந்தவர்.

ஸ்ரீமான் ராமசாமி செட்டியாரின் தர்ம சிந்தனை

இத்தகைய பெருமை வாய்ந்த குடும்பத்தில் திவான் பஹதூர் ராமசாமிசெட்டியார் தோன்றினர். இவர் சிதம்பரத்தில் வாழ்ந்துவந்து, அங்குள்ள முனிசிபல் சபை முதலியவற்றில் விசேஷ சிரத்தை பூண்டார். இவருக்கு இயற்கையாகவே பரமபக்தி உண்டு; இவர் மதாபிமானம் மிகக் கொண்டவர். மதானுஷ்டானங்களை வழுவாது அனுசரிப்பதில் ஆர்வம் கொண்டவர். இவர் சிதம்பரத்தில் வாழ்ந்து வந்ததற்கு அந்த க்ஷேத்திரத்தில் இருக்கும் தேவாலயமும் முக்கியகாரணமாகும். ஆரம்பத்திலிருந்தே வித்யாவிஷயத்தில் இவருக்கு விசேஷ அக்கறை இருந்து வந்தது. ஆகையால் இவர் சிதம்பரத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து நடத்தி வந்தார். தமது அந்தியத்திற்குச் சிறிது காலத்திற்கு முன்பு இப்பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஹாஸ்டலையும் (மாணவர் தங்கவசதியையும்) ஏற்படுத்தி நடத்திவந்தார். சிதம்பரத்தில் இவரது குடும்பத்தார் நடத்திவரும் சத்திரமும் மிகப்பிரசித்தமானது. இந்த சத்திரத்தில் ஏராளமாக அன்னதானம் வழங்கப்படும். இவை தவிர இவர் சிதம்பரம் ஜலவசதிக்காக ஒரு லக்ஷ ரூபாய்கள் உதவினார். இந்த வசதியைப் பொதுஜனங்களின் உபயோகத்திற்காக அப்போது சென்னை மாகாண கவர்னராகவிருந்த ஸர் ஆர்தர் லாலி திறந்து வைத்தார். அச்சமயம் கவர்னர் பிரபு ராமசாமி செட்டியாரின் தாராள குணத்தைச் சிலாகித்து, இவரது முயற்சிகள் பொது சேவையில் ஈடுபட அபிலாஷையுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகும் எனவும் பஹிரங்கமாகச் சொன்னார். சென்னை மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் விடுதிக்காகவும் இவர் ஏராளமான நன்கொடைகள் அளித்தார்; தவிரவும் மாணவர் இல்லம் விஷயமாக இவர் தமது மரணகாலம் வரையில் சிரத்தையும் கொண்டிருந்தார். இவருக்கு முன்பு வரை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் தர்மத்திற்கு ஏராளமாகக் கொடுத்து வந்தபோதிலும், அவர்களுடைய மனப்போக்கு

பழைய கால வழியையே பின்பற்றியதாக் கிருந்து வந்தது. இவர்களுள் முதன் முதலாக தர்மநிதிகளை, தற்காலத்திற் கேற்றபடி, நவீன ரீதியில் எல்லோருக்கும் பிரயோஜனகரமாக, உபயோகிக்க முன் வந்தவர் திவான்பஹதூர் ராமசாமி செட்டியார்தான்.

திரவியத்தைப் பயன்படுமாறு செலவழிக்கும் விஷயத்தில் நாம் நாட்டுக்கோட்டை செட்டியார்களை, பம்பாய் மாகாணத்தில் இருந்துவரும் பார்ஸி ஜாதியினருக்கு ஒப்பிடலாம். பார்ஸி ஜாதியினர் போல் செட்டியார்களும் இத் தேசத்தில் ஏராளமான திரவியம் கொண்டவர்கள். அவர்கள் போலவே இவர்களும் சில காலமாக வித்தியாபிவிருத்தி, மாணவர் வசதி, உயர்தரக் கல்வி, ஆகிய விஷயங்களுக்காக உதவ முன் வந்தவர்கள்.

சிதம்பரம் நகர நிர்வாக சபையில் ஈடுபடுதல்

இவர் வெகு காலம் சிதம்பரம் முனிசிபல் சபையின் சேர்மனாக விருந்தார். இந்த அந்தஸ்திற்கு இவர் மற்ற அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது குறிப்பிற்குரியது. 1911-ம் வருஷத்தைய கவர்ன்மெண்டு அறிக்கையில், "சிதம்பரம் முனிசிபல் சபையின் நிர்வாகம் சிறந்த வழியில் நடைபெற்று வந்தது. இவ்விஷயமாக சேர்மன் அவர்கள் எடுத்துக்கொண்டு வந்த ஊக்கத்தைப்பற்றி கலெக்டர் எழுதி யனுப்பும் பாராட்டு மொழிகளைக் குறித்து சர்க்கார் மிகுந்த சந்தோஷப்படுகின்றனர்" என்று எழுதப்பட்டிருந்தது. ஆகையால் மேற் குறிப்பிக்கப்பட்ட வாக்கியங்களிலிருந்து இவர் நகர நிர்வாக சேவையில் எவ்வளவு ஈடுபட்டிருந்தார் என்பது ஸ்பஷ்டமாகத் தெரியவரும். இவர் சில காலம் சிதம்பரம் தாலூகா போர்டின் பிரஸிடெண்டாகவும் இருந்து வந்தார்.

மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களை அனுசரித்து இத்தேசத்திய மாகாணங்களில் புதிய சட்டசபைகள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, இவரை அரசாங்கத்தார் ஒரு நியமன மெம்பராக சட்டசபைக்கு அனுப்பினர். இத்தகைய கௌரவத்தை இவருடைய வகுப்பினருள் முதன் முதல் நிர்வஹித்தவர் இவர்தான். சட்டசபை மெம்பராக இவர் தமக்குக் குறிப்பிக்கப்பட்ட காலம் முழுமையும் இருந்தார். இக்காலம் எல்லாம் இவர் பொதுஜனப் பிரதிநிதிகளுடன் சேர்ந்துகொண்டு, அவர்களுடைய பிரேரணைகளை ஆதரித்தும், பின்பற்றிப் பேசியும் வந்தார்.

உங்களுக்கு புதிய ஆரோக்யம் இதோ இருக்கிறது

நீங்கள் இதுவரை இருந்ததைவிட அதிக வலிவுடனிருக்க ஸனடோஜன் இருக்கையில், பலமின்மையால் ஏன் கஷ்டப்படவேண்டும்? தசைகளுக்கும் நரம்புகளுக்கும் சக்தியூட்டும் தன்மை ஒவ்வொரு துளி ஸனடோஜனிலுமிருக்கிறது. தவிர தேகத்திற்குத் தேவையான ஏராளமான இரத்தத்தையும் கொடுக்கிறது. வலுவின்மை, வயிற்றுக்கோளாறுகள், தூக்கமின்மை முதலிய எவ்வித வியாதிகளால் அவதிப்பட்டாலும் இன்றே ஸனடோஜன் சாப்பிட ஆரம்பியுங்கள். எவ்வளவுக் கெவ்வளவு இச்சிறந்த ஆகாரத்தை உட்கொள்ளுகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு உண்மையான சரீர ஆரோக்யம், பலம் இவற்றுடன் விளங்குவீர்கள்.

டாக்டர் ஸ்டேரனி என்னும் பிரபல ஜெர்மன் வைத்யர் எழுதுகிறார்:—

"நபும்ஸகத்வத்துடன் கூடிய நரம்புகளுக்கேற்பட்டுள்ள மெலிவுக்கு நான் ஸனடோஜனை சிபார்சு செய்கிறேன். இதனால் சிறந்த அனுகூலங்களுண்டாகின்றன. புருஷ சக்தியை வளர்ப்பதில் வேறெந்த தயாரிப்பும் ஸனடோஜனுக்கு இணையாக இல்லை."

இப்பொழுதே ஸனடோஜனை பரீக்ஷித்துப்பாருங்கள். இச்சிறந்த ஆகாரத்தை உட்கொள்ள ஆரம்பித்த சில வாரங்களிலேயே, இருமடங்கு பலமும், தேக ஆரோக்யமும் பெற்று விளங்குவீர்கள்.

புத்துயிரூட்டும் இச்சிறந்த ஆகாரத்தை 25,000 வைத்யர்களுக்குமேல் சிபார்சு செய்கின்றனர். இன்றே நீங்கள் சாப்பிட ஆரம்பியுங்கள்.

ஸனடோஜன் கைபடாமல் தயாரிக்கப்படுவது. எந்த ஜாதி அல்லது மதத்தினருக்கும் ஆக்ஷேபகரமான எந்த சரக்கும் இதில் இல்லை.

SANATOGEN

உண்மையான டானிக் ஆகாரம்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், கடைகளிலும் கிடைக்கும்.

இந்தியன் பாங்கி ஸ்தாபிதம்

சுமார் 1906-ல் அர்பத்நெட்டு பாங்கி முறிந்துவிட்டபோது, நம் தேசத்தினர் பலர் (முக்கியமாக ஏழைமக்கள்) தாங்கள் வாழ்நாள் முழுதும் உழைத்து சேகரித்து வைத்திருந்த நிதியைப் பாங்கியில் வைத்திருந்ததனால், அதை இழந்தனர். இதனால் பலருக்கு மிகுந்த கஷ்டம் விளைந்தது. இந்த சமயத்தில் மேனாட்டு ஸ்தாபனங்களில் நம்பிக்கையும் சிறிது குறையலாயிற்று. இந்த சமயத்தில் ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தலைமையில் இந்நகரத்தின் பிரமுகர்கள் பலர் ஒன்றுகூடி, இத்தேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு இத்தேசத்தினருக்காக விருக்கும் ஒரு பாங்கியை ஏற்படுத்த வேண்டி யோசித்து 'இந்தியன் பாங்கி" என்ற பெயரு

(28-ம் பக்கம் பார்க்க)

“ராயபுரத்தில் நடந்த அந்தப் பெரிய தீவிபத்து மயிலாப்பூரிலிருக்கும் கிருஷ்ணனுக்குத் தெரிந்தது.”

“முடியாது.”

“இல்லை, கிருஷ்ணன் அன்று ராயபுரத்திற்குச் சென்றிருந்தான்.”

ஒரு பிச்சைக்காரன் கதவைத் தட்டினான். வீட்டுக்காரி கதவைத்திறந்தாள் பிச்சைக்காரன் ஏதாவது பிச்சை போடும்படிக் கேட்டான்.

வீட்டுக்காரி:— அதெல்லாம் கிடையாது. வெளியே போய் விடு. இல்லாவிட்டால் என் கணவனைக் கூப்பிடுவேன்.

பிச்சைக்காரன்:—உங்கள் கணவன்தான் வீட்டிலில்லையே.

“அது உனக்கு எப்படித் தெரியும்?

“இப்படிப்பட்ட மனைவிகளை விவாகம் செய்துகொண்டவர்கள் சாப்பிடும் சமயத்திற்கு வருவதுகூட துர்லபம்தான்”

“இந்தக் கோட்டு எவ்வளவு அழகாகவிருக்கிறது. இதைப் பற்றி ஒரு பெரியகதை இருக்கிறது”

“இந்தத் துணி சாதாரணமானதுதானே! இதற்கும் மற்றவைகளுக்கும் என்ன வித்தியாஸம்?”

“அதைத்தானே நான் சொல்லவந்தேன். பருத்தி இந்தியாவில் எடுக்கப்பட்டது. துணி இங்கிலாந்தில் செய்யப்பட்டது. தைக்கப்பட்டது சென்னையில்

“அதனால் என்ன?”

“இதற்கு இன்னும் பணம் கொடுக்கவில்லை இது எவ்வளவு பெயர்களுக்குத் தெரியப்போகிறது. இது ஒரு பெரிய கதையில்லையா?”

“நேற்று நீ கொடுத்த பால் திரிந்து போய்விட்டது”

“அப்படிப் போகுமென்று நான் நினைக்கவில்லை.”

“சரி, அதற்கு இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?”

“சர்க்கரை வாங்கி வரட்டுமா?”

மாணாக்கன்:—கணக்குப் பரீக்ஷை தவிர மற்ற எல்லாவற்றிலும் நான் தேறவில்லை.

தகப்பன்:—அது எப்படி?

“கணக்குப் பரீக்ஷைக்கே போகவில்லை.”

பட டைரக்டர்:—உம்முடைய கதை இன்னும் இயற்கையாக விருக்க வேண்டும்.

கதை எழுதுபவர்:—ஏன்?

“இங்கு ஒரு ஸீன் இருக்கிறது. இதில் புதிதாக விவாகம் செய்துகொண்ட தம்பதிகள் குடித்தனம் ஆரம்பித்திருக்கின்றனர். அடுத்த ஸீன் ஆறு மாதம் கழித்து நடப்பதாகவிருக்கிறது. அதில் சாமான்கள் எல்லாம் வைத்தது வைத்த இடத்திலேயே இருப்பதாக எழுதியிருக்கிறீர்களே!”

அமெரிக்கப் பாதிரியான மிஸ். ஜி. ப்ரன்னரும் சந்திரலீலா என்ற 7 வயதுப் பெண்ணும் சென்னையிலிருந்து இங்கிலாந்துக்கு வந்திருக்கின்றனர். லண்டனில் அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஓடும் ரயிலில் ஒரு ரூபாயைக் கீழே போட்டுவிட்டதற்காக ஒரு பிரயாணி அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்திவிட்டார்.

“பாக்கி ரூ 49-யும் ரயில்வே ஆபீஸில் கொடுத்துவிட்டார்?”

“ஒரு வக்கீல் வீட்டில் ஒரு திருடன் கைது செய்யப்பட்டான”.

“ஆனால் அந்த வக்கில் அவனுக்காகப் பேச வக்காலத்து வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார.”

உயர்ந்த
வைரங்கள்

T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

மியூச்சுவல்
அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான, தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை. குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,
செக்ரிடரி.

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

எல்லா மருந்து ஷாப்புகளிலும்

த்யாகராஜ கீர்த்தனம்.

[காபிரைட்.]

ஸங்கீதவித்வான் காஞ்சி பி. பி. ஸ்ரீநிவாஸய்யங்கார், பி. ஏ. எழுதியது

I

பல்லவி

பருல வேடலேனு பதிதபாவனுடா (பருல)

அனுபல்லவி

கரிவரத! நீவே கடாக்ஷமுதோ ப்ரோவுமு (பருல)

சரணம்

அமரவர! நீது நாமாதிசயம்பே ஜீவ—
னமணி யுன்னனு ஸ்ரீத்யாகராஜவிநுத (பருல)

II

பதித பாவனுடா	—ஸ்வதர்மங்களைச் செய்யத் தவறினவர்களையும் காப்பாற்றுபவரே!
கரிவரதா	—கஜேந்திராழ்வானுக்கு வரத்தையருளியவரே!
அமரவர	—தேவச்ரேஷ்டரே [தேவராஜப் பெருமானே!]
ஸ்ரீ த்யாகராஜ விநுத	—ஸ்ரீ த்யாகராஜனால் கொண்டாடப்பட்டவரே!
பருல வேடலேனு	—நான் இதர தைவங்களைத் தொழமாட்டேன்.
நீது நாமாதி சயம்பே	—உம்முடைய திருநாம விசேஷங்களை
ஜீவனமணி	—ஜீவாதாரமென்று,
உன்னனு	—இருக்கிறேன். [ஆதலால்,]
நீவே கடாக்ஷமுதோ ப்ரோவுமு	—தயையோடு (கடைக்கண்ணோக்கத்துடன்) காப்பாற்றும்.

III

இந்தக் கீர்த்தனமும் த்யாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனைப் புத்தகங்களிற் காணப்படவில்லை. ஆனால் பட்டணம் ஸுப்ரமண்ய ஐயருடைய சிஷ்யர்களிலொருவரான காலஞ்சென்ற சி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயரியற்றிய "த்யாகராஜ சத கீர்த்தன ஸ்வராவளி," என்ற நூலில் இது சில பிழைகளுடன் காணப்படுகின்றது. இதுபோலவே கல்யாணி ராகத்தில் உள்ள "ஸந்தேஹமு எலா" என்ற கீர்த்தனமும் ஷை நூலில் காணப்படுகின்றது. [இதுமட்டும் கிராமபோன் ரிகார்டு ஒன்றில் பாடப்பட்டிருக்கிறது]. இது வரதராஜப்பெருமானைப்பற்றிய கீர்த்தனைகளில் ஒன்றாகும். (மற்றவைகளுக்கு 'வரதராஜபாஹி' என்ற கீர்த்தனத்தின் குறிப்பைப் பார்க்க)

பருலவேடலேனு:—"நின்னே பஜன" என்ற நாட்டை ராகக் கீர்த்தனத்திலும் இதே ப்ரயோகம் காணப்படுகிறது. C. S. கிருஷ்ணஸ்வாமி ஐயர் பதிப்பில் 'பருலனு வேடனு' என்று பாடம்.

பதிதபாவனுடா:—"அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம்மம," என்று பகவானே சொல்லியிருக்கிறார். ஸ்ரீராம சந்த்ரமூர்த்தியைச் சரணமடைந்த விபீஷணன் தோஷமுள்ளவனென்றும், அவனைக் காப்பாற்றக்கூடாதென்றும் வானர வீரர்கள் சொல்ல, ஹனுமான்மட்டும், 'இவன் தோஷமற்றவன் காப்பாற்றவேண்டும்' என்றார். பகவான் மற்றையோருடைய கூற்றைக் கண்டித்து, ஹனுமான் கூறியது ஸரியென்றும்; ஆனால் விபீஷணன் தோஷமற்றவனென்பதற்காக அவனைக் காப்பாற்ற வேண்டியதில்லையென்றும்; அவனிடத்தில் தோஷமிருப்பினும் அவனைக் காப்பாற்ற வேண்டியதவசியமென்றும்; தோஷமற்றவனுயின் தன் க்ருபை அவசியமில்லையென்றும், ஸாதுக்கள் தாம் அபயமளிப்பதை நிந்திக்கமாட்டார்களென்றும் கூறினார். 'பதிதுல ப்ரோசே பட்டாதிகாரி நி' என்று த்யாகராஜ ஸ்வாமிகளே வேறோரிடத்தில் பாடியிருக்கிறார்.

கரிவரதா:—கரிவரதன் என்பது காஞ்சி வரதராஜப் பெருமானுடைய சிறப்புத் திருநாமங்களில் ஒன்றாம்.

நீவே...ப்ரோவுமு.—இது மார்ஜார கிசோர ந்யாய முறை: அதாவது, பகவானிடத்தில் அநன்ய பக்தி பண்ணுவோர்களை, பூனை (மார்ஜாரம்) தன் குட்டியை வாயினால் கௌவித் தூக்கிக் கொண்டு ஸஞ்சரிப்பதுபோல, அவர் கடாக்ஷித்துக் காப்பாற்றுகிறார் என்பது [மற்றொரு முறை, மர்க்கட கிசோர ந்யாய மென்பது. அதாவது, பகவான் எத்தகைய கஷ்டங்களையுந் தொல்லைகளையும் பக்தர்களுக்கு ஏற்படுத்தினாலும், பக்தர்கள் அவருடைய சரணாரவிந்தமே கதி யென்றிருந்து அவருடைய க்ருபைக்குப் பாத்திரராவதாம்] கிசோரம்—குழந்தை, அல்லது குட்டி. அநந்யாஸ் சிந்தயந்தோமாம் யேஜனா: பர்யுபாஸதே தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்" என்ற கீதாசார்யன் திருவாக்கைக் கவனிக்கவும்.

(8-ம் பக்கம் பார்க்க)

வெகு நேரம் பாடும் Broadcast வெகு அருமையாகப் பாடும்

எங்கள் அக்டோபர் வெளியீடு

எஸ். வி. சுப்பய்யா பாகவதர் & எம். எஸ். விஜயாள்

இவர்களது தர்க்கம் கேட்க கேட்க ரஸமாயிருக்கும்

B. T. 2333 { ஞானசௌந்தரி பாகம் 1 & 2 —பிலேந்திரன் தர்க்கம்

சுந்தரகாமாக்ஷி

B. 2382 { துள்ளுமதவேட்கை —மாண்டு; ஜெகத்குருபரஷண்முகா —சாரங்கா

பபூன் ஷண்முகம்

R. 2344 { ஓட்டுக்குக்கையெழுத்து —காமிக்

அனசூயா - காகிடா

B. E 2370 { அன்னதே வஸ்தநந்தி —விராகம்; க்ஷிவரால் பாட்டு —பதம்

தி மியூஸிகல் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்,

167, மவுண்ட் ரோட், மதராஸ்.

ஏஜன்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை. ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பிணங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்.

ஆவேசம்

(காசினி எழுதியது.)

* * நோய் நொடி வந்தால் சுவாமிக்குப் பிரார்த்தித்துக் கொள்ளுவதும், பிரார்த்தனை செலுத்துவதும் நம்மவருள் சகஜம் தானே. அதுவும், பிரார்த்தனை செலுத்தத் தவறினால் தெய்வ குற்றம் ஏற்படும். மேல்நாட்டுப் படிப்பைப் படித்துவிட்டு, நம்முடைய குழந்தைகள் 'இதென்ன முட்டாள் தனம்! என் குழந்தைக்கு வியாதி சுகமாகட்டும், உன் சந்நிதிக்கு வந்து முடி கொடுக்கிறேன் என்று வேண்டிக் கொள்ளுவது சுவாமியுடன் பேரம் செய்வதுதானே? இப்படி சுவாமியுடன் பேரம் செய்யலாமா? இதில் செலவு செய்யும் பொருளையும், நேரத்தையும் நல்ல உணவுகளிலும், சுகாதார வாழ்க்கை வாழ்வதிலும், வேண்டிய வைத்தியம் செய்வதிலும் செலவு செய்தால், நோயற்று வாழலாமே? இதற்கெல்லாம் சுவாமி என்ன செய்வார் மூட நம்பிக்கைகள்!' என்றெல்லாம் வாதாடுகிறார்களே? எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது'' என்று நீ எழுதி இருக்கிறாய்.

விஷயம் வெகு சிக்கலானது. போனவாரம் இதே விஷயத்தைப்பற்றி லேடி சின்னையா வீட்டில் பிரமாதமாகத் தர்க்கம் நடந்தது. அவர்கள் வீட்டுத் தோட்டக்காரன் தன் பிள்ளைக்கு இரண்டு நாட்களாக ஜுரம் என்று குழந்தையைப் பார்க்கப் போனான். மத்தியான வேளை; நாங்கள் வராந்தாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம் சாப்பாட்டிற்கு அப்புறம், அத்தையும் நானும் ஏதோ காரியமாக அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தோம். லேடி சின்னையா, அவருடைய மகன், மாட்டுப் பெண், பெண், அத்தை, நான் எல்லாருமாகப் பேசிக்கொண்டிருந்தோம் அப்பொழுது, மாட்டுப்பெண் தோட்டக்காரனைக் கூப்பிட்டாள்; அதற்குத் தான் லேடி சின்னையா, அவன் குழந்தையைப் பார்க்கப் போயிருப்பதாகச் சொல்லி, 'இரண்டு நாளாக நந்நீர் முழுங்கவில்லை என்று சொன்னான். ஊரிலே டிப்தீரியாவாக இருக்கே என்று ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப் போகச் சொன்னேன்.

(33-ம் பக்கம் பார்க்க)

பிரபல ஸங்கீத வித்வான் எழுதியது.

மூசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர், 6, ஆலிவர் ரோடு
மயிலாப்பூர், 2-5-35.

என் குடும்பத்தினர் நெடுநாளாகக் கேசவர்த்தினியை உபயோகித்து வருகின்றனர். கூந்தலை உதிராமல் தடுத்து, நன்றாக வளரச்செய்வதை அனுபவத்தில் கண்டு, இதைப் புகழ்ந்து சிபார்சு செய்து வருகின்றனர். ஸகல கேச உபாதிகளையும் இது தீர்க்கவல்லது என்பதைத் தெரிவிப்பதில் எனக்குப் பரம திருப்தி.

(கையொப்பம்) மூசிரி-ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

மாத உபயோகத்துக்குப் போதிய கேசவர்த்தினி விலை அணு 12;
கேசவர்த்தினி ஷாம்பு விலை அணு 12; மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

அமரவர:—வரதராஜப் பெருமானுடைய திருநாமங்களில் தேவராஜன், தேவதேவன், தேவாதிராஜன் என்று வருவனவற்றைக் கவனிக்க. இவ்வாறு பத்யத்தின் யதிப்ராஸங்களுக்கேற்றவாறு சொற்களையமைப்பதில் ஸ்வாமிகள் பெயர்களை மாற்றவேண்டியிருப்பதற்கு ந்யாயம் 'இந்த்ரநீலமணி' என்று கூறவேண்டியவிடத்தில் 'ஸுரபதி நீலமணி' என்றும் 'சத்ருக்னன்' என்று கூறவேண்டியவிடத்தில் 'ரிபுமர்த்தன' என்றும் கூறியிருக்கும் மாதிரியேயாம்.

ஜீவனமணி:—'நன்னு பாலிம்ப' என்ற கீர்த்தனத்தில் "நீமோமுனு ஜூசுட ஜீவனமணி கெனருன மனஸு மர்மமு தெலிஸி...வச்சிதிவோ"? என்று ஸ்வாமிகள் கூறியிருப்பதைக் கவனிக்கவும்.

IV

பலஹம்ஸ — ஆதி

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறைப்படி 28 வது ஹரிகாம்போஜியில் ஜன்யம், ஸரிமபதஸ்—ஸ்நிதப மரிமகஸ—என்ற நடை. ஆரோஹணத்தில் தைவதத்தைத் தீர்க்கமாகப் பிடிக்க வேண்டும். இந்த ராகத்தில் சவுக்கமான கமக ஸஞ்சாரங்களே அதிக ரஞ்சகமானவைகளாம்.

பல்லவி

;;;*	ரீ மா பா தா ; ஸ்ா	;;; நிதபமரீ ;	;;;	ரீ மா கா ஸா ;	ரீ ;;; மகரீ	மகஸா
;;;*	பரு ல வே ; ட	;;; லே னு ;	;;;	ப தி த பா ;	;;; வ	னு
நீதா ஸா *	ரீ மா பா தா ; ஸ்ா ;	பதஸ்ா நிதப மரீ ;	;;;	ரீ மா கா ஸா ;	ரீ ;;; மகரீ	மகஸா
ட *	ப ரு ல வே ; ட ;	லே னு ;	;;;	ப தி த பா ;	;;; வ	னு
நீதா ஸா *	ரீ மா பா தா ;	ஸ்ரிம்க்ஸ்ா : நிதப மரீ ;	;;;	ரீ மா கா ஸா ;	ரீ ;;; மகரீ	மகஸா
ட *	ப ரு ல வே ;	ட ; லே னு ;	;;;	ப தி த பா ;	;;; வ	னு
நிதா ஸா *						
ட * (பருலவேடலேனு)						

அனுபல்லவி

;;;*	நீ தா பா மா ; தா	;;;; பாதா	ஸ்ா ;;;	;;;;	;;;;	;;;;
;;;*	க ரி வ ர ; தா	;;;; நீ	வே ;;;	;;;;	;;;;	;;;;
;;;*	நீ தா பா மா ; தா	;;;; பதஸ்ா தா	ஸர் ;;	நீ தா பா மா ;	தா ; தா ;	பதஸ்தா
;;;*	க ரி வ ர ; தா	;;;; நீ வே	;;	க ரி வ ர ;	தா ;;	நீ வே
ஸ்ா ;;*	நீ தா பா மா ;	பதநிதபமா ; பத ஸ்ாதா	ஸ்ா ;;	ஸ்ாரீ ; மாக்ஸ்ா	ரீ ; ஸ்ா ;	நீதாபாமா
;;*	க ரி வ ர ;	த ; நீ வே	;;	க ; டா க்ஷ	மு ; தோ ;	ப்ரோ வு
ரிமகாஸா *						
மி க * (பருலவேடலேனு)						

சரணம்

;;*	பாமா ; பா ரீ ; மாபாதா ;	பாமாபா ;	;; பா ;	தா ஸ்ா ஸ்ா ;	பாதாஸ்ாதா	ஸ்ா ; ஸ்ா ;
;;*	அ ம ; ர வ ; ர நீ ;	து நா ;	;; மா ;	தி சய ம் ;	பே	ஜீ ; வ ;
;;*	பாமா ; பா ரீ ; மாபாதா ;	பதநிதபபம	பா ; பா ;	தா ஸர் ஸர் ;	பாதாஸ்ாதா	ஸ்ா ; ஸ்ா ;
;;*	அ ம ; ர வ ; ர நீ ;	து	நா ; மா ;	தி ச யம் ;	பே	ஜீ ; வ ;
;;*	ஸ்ா ரீ ; ரிஸ் நீதா பாதாஸ்ாரீ	மாக்ஸ்ா ;	;; ஸ்ாரீ ;	மாக்ஸ்ா	ரீ ; ஸ்ா ;	நீதாபாமா
;;*	ந ம ; னே யுங் நா	னு ஸ்ரீ ;	;; த்யா ;	க	ரா ; ஜ ;	வி

நோயற்றவாழ்வு

பிரமேஹமும் மதுமேஹ

(நீரிழிவு ரோகம்—அதன் நிவாரணம்)

—:[o]:—

(வைத்தியரத்ன பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேதபூஷணம் ஆயுர்வேதாசார்ய அவர்கள் எழுதியது.)

இவ்வியாதியால் இந்திய மக்களில் எண்ணிறந்தவர் வருந்துகிறார்கள். இது மற்ற வியாதிகளைப்போல் அசுத்த வாழ்க்கையினாலாவது, துர்நீர்களின் சேர்க்கையாலாவது, துஷ்டக்கிருமி தோஷங்களாலாவது உண்டாவதன்று. சாரீர ஸுகானுபவாதிகளையும், மானஸிக கிலேசாதிகளையும் பெரும்பாலும் காரணமாகக்கொண்டு ஸம்பவிக்கும் தாது வைஷம்யங்களால் உண்டாகும் இவ்வியாதி அநேகருக்கு நிவ்ருத்திக்கக்கூடாத நிம்மதியின்மையையும் பிராணாபாயத்தையும் விளைவிப்பதால், இதைத் தடுக்கவும், வியாதி நேர்ந்த பிறகு அதைப் பரிஹரிக்கவும் அவசியமான விதிகளையும் விஷயங்களையும் அனைவரும் அறிந்திருப்பது இன்றியமையாததாம்.

வியாதியின் வகைகள்

அமிதமாகச் சிறுநீர் இறங்குதல் என்பது 'பிரம்மஹம்' என்பதன் பொருள். சிறுநீர் மிதமிஞ்சி இறங்குவதுதான இவ்வியாதியின் மிகப் பிரதானமான குறியாம். ஆயுர்வேத நூல்களிற கூறியுள்ள பிரமாணங்களையும் அனுபவபூர்வமான பரிசீலனைகளையும் அனுஸரித்து பிரமேஹம் ஒன்றே இலக்ஷண பேதங்களைக் கொண்டு இருபது விதமாகப் பிரிக்கப்படுகிறது. அவையனைத்தும் விவரித்துக் கூற இங்கு இடமில்லை. கற்றறிந்த வைத்தியர்கள் மேனாட்டு முறையினர் உள்பட நீரிழிவு ரோகத்தைப் பொதுவாக பிரமேஹம் (டயபடிஸ் இன்ஸிபிடஸ்) என்றும், மதுமேஹம் (டயபிடிஸ் மெலிடஸ்) என்றும் இரு பெரும் பிரிவாக வழங்கி வருகிறார்கள். இவ்விரண்டில் முந்தியதில் பெருமிதமாக அடிக்கடியும் நீர் இறங்குவதும், பிந்தியதில் அதிக அளவான சர்க்கரை கலந்த நீர் இறங்குவதும் மிகப் பிரதான லக்ஷணபேதங்களாகும். "ஸர்வ ஏவ ப்ரமேஹாஸ் துகாலேநாப்ரதிகாரிண: மதுமேஹத்வ மாயாந்தி" என்று "எந்தப் பிரமேஹமும், ஏற்ற காலத்திற் பரிஹாரம் செய்யப்படாவிடில், காலக்கிரமத்தில் மதுமேஹமாக மாறிவிடும்" என்பதனால் மதுமேஹம் ஏற்படுவதற்கான தாதுக்களின் சீரழிவுக்குப் பிரமேஹம் என்னும் முந்திய நீரிழிவு முகாந்தரமாகுமென்றும், அவ்விதம் கஷ்டஸாத்யமான அல்லது அஸாத்யமான மதுமேஹம் ஏற்படுவதற்கு முன்பே பிரமேஹாவஸ்தையிலேயே பிரசஸ்தமான பரிஹார முறையைச் செய்துவிட வேண்டுமென்றும் சாஸ்திரம் எச்சரிக்கின்றது. மதுமேஹத்திலேயே தாது க்ஷயத்தால் ஏற்படுவது. ஆவரணவாத தோஷத்தினால் ஏற்படுவது என்று வேறிரண்டு பேதங்களும் உண்டு; அவ்விதமான சிக்கலாயுள்ள சாஸ்திரீய விவாத விசேஷங்களிற் புகுவ

முக்கியமான காரண லக்ஷணாதிகளையும், கூடுமான சிகித்ஸாக் கிரமங்களையும் பொதுவாகச் சுருக்கிக் கூறுகிறேன்.

காரணங்கள்

வியாயாமமின்றியே ஆயாஸமறியாமலே பெரும்பாலும் உட்கார்ந்தவாறு ஸுகமாக நிகழ்த்தப்படும் வாழ்க்கை இவ்வியாதியைத் தூண்டும் காரணங்களில் ஒன்று. எப்பொழுதும் நீர் நிரம்பிச் சதுப்பாயுள்ள நிலங்களில் உண்டாகும் சாக-மாம்ஸாதிகளும், பழகிப் பதனடையாத அரிசி முதலிய உணவுப் பொருட்களும், அளவுமீறிய பானங்களும், வெல்லம் அல்லது சர்க்கரை ஸம்பந்தமான பண்டங்களும், பொதுவாக சிலேஷ்மத்தை விருத்தி செய்யக் கூடிய பதார்த்தங்களும் இப்பிணிக்குக் காரணங்களாம். மூத்திரோத்பத்திக்குக் காரணமான அவயவத்தில் கபதோஷம் கோளாறடைவதும், பித்தாசயத்தில் பித்த தோஷமும் ஏககாலத்தில் விகாரமடைந்து அதனாலாக வேண்டிய பாசக வேலை ஒழுங்கீனமடைவதும் நீர் அமிதமாகச் சுரப்பதற்கும் அதில் அளவுமீறி சர்க்கரைப் பொருள் கலந்திருப்பதற்கும் ஹேதுவாவதாகச் சாஸ்திரஜ்ஞர் கூறுவர். இதில் க்ஷீணமாகும் தாதுக்கள் மேதஸ் என்கிற கொழுப்பும், இரத்தத்திலுள்ள நிண நீரும், மாம்ஸமுமேயாம். நீரில் சர்க்கரை கலந்த மதுமேஹத்தைப் போல் அது கலவாத ஸாதாரண பிரமேஹரோகம் அவ்வளவு விசேஷமாக உண்டாவதில்லை.

வியாதி லக்ஷணங்கள்

பலங்குறைந்த தேஹ நிலைமையைப் பெற்றவர்களும், மனக்கவலையால் மிகவும் பாதிக்கப்படும் மனிதர்களும் விசேஷமாக வயது சென்றவர்களும், தாது க்ஷயத்தினால் பாதிக்கப்பட்டவர்களும் இவ்வியாதிக்கு எளிதில் வசப்படுகிறார்கள். பற்களில் அழுக்கு அதிகமாகச் சேர்ந்து அவை அடிக்கடிச் சிதைவுறுவதும், நாக்கில் அழுக்கு சேருவதும், பாதங்களிலும் உள்ளங்கையிலும் எரித்தலுண்டாவதும், எண்ணெய்ப் பசைபோன்ற பிசுபிசுப்பு உடம்பெங்கும் அருவருப்பாகத் தோன்றுவதும் வாய் இனிப்பாவதும், நாவறட்சியுண்டாவதும் நீரிழிவு ஏற்படுவதற்கு முன்பாகத் தோன்றுவது வழக்கம். ஆனால் பெரும்பான்மையான பிரமேஹ ரோகிகள் இவற்றை உள்ளபடி யுணருவதில்லை. இவ்வெச்சரிக்கை ரூபமான வியாதியின் பூர்வ ரூபங்களுக்கு (முற்குறிகளுக்கு) வேறு முகாந்தரங்களைக் கூறிக்கொண்டு வாளாயிருந்து வருமவரே விசேஷம். ஆனால் இந்நோய் வெகு மெதுவாகவும், வெளிப்படையான உடற்கோளாறு ஏதும் பிணியாளியுணருமாறு தோன்றாமலும் உண்டாய், நம் கவன
தைக் கவரும்விதமான ஒழு
கினம் அல்லது ஸங்கடம் தெ
வதற்குப் பலரில் நெடுநா
கள் செல்லும். பிரமேஹிக
வெளியிடும் சிறுநீரில் எறும்பு
ஈயும் மொய்த்தால், அதி
சர்க்கரை விசேஷமாயிருப்
தாகத் தீர்மானிக்கலாம். அடி
கடியும் மிகப் பிரதானமாக,
தொந்தரவளிக்கும் குறிகளு
அடுத்தடுத்துண்டாகும் அப
மிதமான தாஹமே குறி
பிடக்கூடியது; மேலும், தின
தோறும் அவ்வளவு அதி
மான நீர் அருந்தியும், அவ்
வாறு அருந்திய தண்ணீ
வி– வெளியிடும் மூத்திரப்
அளவில் அதிகமாகக் காண
படுவதும் ஒரு விசேஷம். இப்
பிணியாளியில்சிலருக்கு மீதூண்
உண்டும் தணிவடையாத
அடங்காப் பசியெடுப்பதும்
பெரியதோர் குறியாம்; ஆனால்
நீரிழிவு ரோகிகள் அனைவரும்
இந்தப் பஸ்மகாக்னி என்கிற
அடங்காப் பசியால் வருந்துவ
என்பதற்கில்லை. இதன்பிறகு
பலர் மலச்சிக்கலாலும், மந்த
ஜ்வரத்தினாலும், சிரோவேத
னையாலும் துன்புறுவர். சர்மம்
ரூக்ஷமாய் வறட்சி பெறும்
பல்லீறு பலஹீனப்பட்டுப் ப
ருக்குப் பஞ்சுபோல் ஆ
துண்டு. வியாதி பலப்படு
நிலைமையில் உடல் இளைக்கும்
தேஹபலமும் சுறுசுறுப்பு
பெரிதும் க்ஷீணிக்கும்; ஜ்வ
மும் மந்தமாய் அடிக்கும்;



சென்னை டப்டன் காலேஜ் வருஷாந்திரப் போட்டி விளையாட்டுகள் சமீபத்தில் நடைபெற்றன. அதில் ஸ்கிப்பிங் போட்டி.

...ப்
...ம் வாத
...ப்பதையும்
...றைந்திருப்ப
...மாறு துடிப்
...அனுபவமுள்ள
...யலாம்; முதுகி
...ப்பக்கங்களிலும்
...வலி ஏற்படுவதும்
...பொதுவான அசதி
ம், மூத்திர மார்க்கத்தில்
கடுக ஒருவித ஸங்கடமும்
...ணரப்படும்.

உபத்திரவங்கள்

இங்நிலைமையில் பசி மந்தி
து, வியர்வை அதிகரித்து,
*ருதயமும் துர்பலமடைந்து
தாடும். சிலருக்குப் பாதங்க
துகில் நீர்க் கோவைக்கு ஏற்படு
தலைது போன்ற சோபம் என்கிற
ருகைக்கங்காணும். இதற்குமேல்
பிலருக்கு மதுமேஹத்தின்
நிருபத்தி...மாக (ஒரு வியாதி
படுவுத்து அதன்மேல உண்டா
நைம் வேறு நோய்கள் 'உபத்ர
ஙைகள்' என்று வழங்கப்படும்)
மூாண்டு, சோகை, க்ஷயம் முத
லைய வெவ்வேறு க...மயான
உ...நாய்கள் தோ...ன்றி, தகுந்த
செகித்ஸையில்லாத மனிதனது
டியிரை உண்மையில உறிஞ்
ட விடும். ஸ்திரீகளுக்கு
இர்மஸ்தாநத்தில் அரிப்
பொடு கூடிய சிரங்கும், புருட
நெக்கு லிங்கத்தில் உபதம்சம்
னன்னும் விரணமும் உண்டா
வது அவ்வித உபத்திரவங்க
ளில் ஒன்றும். "லிங்கநாச:
க்ஷயச் சாபி ஸங்யாஸ: பிடகாஸ்
ததா, உபத்ரவா: பிராணஹ
ா மதுமேஹே ஸமுத்கடே''
'மதுமேஹம் கடுமையாக
முதிர்ந்துவிட்டால், லிங்க நா
சம் என்கிற கண்ணில் பூவிழும்
நாசரோகமும் (லிங்கமென்றால்
பிம்பக் கிராஹ சக்த; அச்சக்
தியை நசிப்பிப்பதால், காசம்
அல்லது கண்ணில் பூவிழுதல்
என்பது 'லிங்க நாசம்' எனப்
படுகிறது) ச்வாஸாசயத்தைத்
தாக்கி விருத்தியாகும் க்ஷய
ரோகமும், ஸந்நியாஸம் என்
ற மேஹசம்பந்தமான மூர்ச்
சயும் பிரமேஹ பிடகைகள்
ன்கிற மேஹக்கட்டிகளும்
ண்டு பிராணாபாயமான நிலை
ம ஏற்பட்டுவிடும். மதுமே
ஹத்தினால் சீர்கெட்ட தேஹத்
தில் உபத்திரவமாகத் தோன்
றும் பிரமேஹபிடகைகள் என்
கிறமேஹக்கட்டிகள் அவற்றின்
ஸ்வரூபாதிகளைக் கொண்டு
...ந்து விதமென்று விவரிக்கப்
...டிருக்கிறது. அவற்றைப்
...றி விளங்க எழுதுவதென
றால், அவ்விஷயமாக மாத்திரம்
தனித்ததோர் கட்டுரை எழு
தலாம்.

சிகித்ஸை

மற்ற நோய்களுக்குச் செய்
...து போல்மதுமேஹத்திற்குச்
...த்ஸை செய்வது எவ்விதத்
...லும் எளிதல்ல; சிகித்ஸை
...ய்பவர், சிகித்ஸை செய்து
...கொள்பவர் இருவருக்கும்
...பெரிதும் பொறுமையும் நெறி
...யும் வேண்டும். முக்கியமாக
மூத்திரத்திலடங்கிய சாகக
ரையைக் குறைக்கவும் நிவ்ருத்
திக்கவும் ஏற்ற முறையைக்
கையாள வேண்டியதுதான்
இதிலுள்ள கொள்கை. இவ்
வியாதியின் பரிஹாரமுறை
யில் ஔஷதப்பிரயோகத்தி
னால் ஒரு பகுதியும், பத்தியங்
களைப் பாராமரிப்பதால் மூன்று
பகுதிகளும் பலனேற்படுமென்
பதை இவ்வியாதியால் வருந்து
பவர் கருத்தில் வைக்கவேண்
டும.

பத்தியாபத்தியங்கள்

"நவம் ஷஷ்டிகதாங்யஞ்ச
நவகோதூம யவச, ஜாங்கலாச்
சாக கந்தாச்ச கதல்யாம் ரப
லாநிச, நிஷித்தாங்யபி தர்க்
காரீ நாகரங்கபலாநிச, யோ
ஜ்யா: ச்யாமாக கோதூம
அணகோத்ரவ மாஷகா:
மேஹிநாம் திக்தசாகாநி ஹரி
த...ச் சாகபிராங்யசா:''—மது
மேஹமுள்ள பிணியாளிகளு
க்கு புதிதான காரரிசி சம்பா
அரிசிகளும், அன்விதமான
கோதுமையும், கிழங்குகளிற்
பெரும்பான்மையும், ஜாங்கல
புமென்கிற சதுப்பு நிலங்களில்
உற்பத்தியாகும் சாகாதி
களும் (இதில் மத்ஸியாதி
களும் அடங்கும்) வாழை, மா,
தக்காளி, கிச்சிலி முதலிய
கனிகளும் அபத்தியமானவை
என்றால் இவை கெடுதிசெய்ப
வையாம். இவர்களுக்குப் பத்
தியமான பதார்த்தங்களோ
தினை, பழகிய கோதுமை,
கடலை, துவரை, உளுந்து முத
லிய பருப்புகள், கேழ்வரகு,
பாகல் முதலிய கைப்பானகாய்
வகைகள், பசுமையானகீரைகள்
முதலியவையாம். "விசேஷாந்
நஹிதம் ஸர்வம் குடவைக்ரு
தகாதிகம், மதுரம் யச்ச தத்
திரவ்யம் மூத்ரஸம் ஸர்வதா
ஹிதம்''—பொதுவாக முற்
கூறியவற்றைத் தவிர, இனிப்
பான வஸ்து ஒவ்வொன்றும்,
அதிலும் விசேஷமாகச் சர்க்
கரை அல்லது வெல்லமும்
அவற்றாலான தின்பண்டங்க
ளும், மூத்திரத்தை விருத்தி
செய்யுங் குணமுள்ள ஒவ்
வொரு பதார்த்தமும் மது
மேஹ ரோகிக்கு அபத்திய
மானவையென்று வெகு முக்
கியமான விசேஷ விதியொன்
றுண்டு. ஆகவே, பிரமேஹ
ரோகிகள், முக்கியமாக மது
மேஹிகள் தமக்கு அவ்வித
நோய் தோன்றியிருப்பதா
கத் தெரிந்தது முதல் முற்
குறிப்பிட்ட அபத்தியமான
உணவுகளைக் கிரமமாக விலக்கு
வதிலும், பத்தியமானவற்
றைத் தெரிந்து உபயோகிப்ப
திலும் ஊக்கமுள்ளவராயிருந்
தால், வியாதி முதிராமலும்,
விபரீதநிலைமை நிகழாமலும்
இருக்க விவேகத்துடன் வழி
தேடியவராவர். ஆனால்
ஸாத்யமானவற்றை (வழக்
கமான ஆஹார விஹா
ராதிகளை) அவை அபத்தியமா
யிருப்பினும், நினைத்தவுடனே
திடீரென்று முற்றிலும் விலக்கு
வது, அஸாத்யமானவற்றை
(வழக்கத்திலில்லாத ஆஹார-
விஹாராதிகளை) அவை பத்திய
மாயிருப்பினும் ஜடுதியில் உப
யோகிக்க முயல்வது ஆக இர
ண்டும் உசிதமல்ல. அபத்திய
மானவைகளைச் ... சிறுகச் சிறுக
விட வேண்டும்; அவ்விதமே
பத்தியமான...வைகளைக் கிரமக்
கிரமமாக உப...யோகித்து அப்பி
யாஸத்திற்கு...க் கொண்டு வர
வேண்டும். ...மார் இதில் சிறந்த

(31-ம் ப...க்கம் பார்க்க)

இந்தியா கவர்ன்மெண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப்
பட்டம் பெற்றவரும், கவர்ன்மெண்டு இந்திய வைத்திய கவர்னிங்
பாடி & ஸெண்டிரல் போர்டு மெம்பரும், கவர்ன்மெண்டு வைத்
திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான
வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தவாயு, கீல் பிடிப்பு, பித்த
மயக்கம், பலஹீனம், அன்னத்
துவேஷம், அஜீர்ணம், மலச்
சிக்கல் இவைகளைக் கண்டிக்கும்.
1 சேர் கொண்ட டப்பி 1-க்கு
ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவை
களில் இது ஒன்றுதான் மார்க்
கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு
0—2—9 ஒரு டஜன் கொண்ட
பெட்டி 1-க்கு ரூபா 1—14—0.
வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை
ரூபமாக செய்...ப்பட்டிருக்கிறது.
...யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு
எ...கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எக்ஸலேன்ஸி ...ஸர் கே. வி. ரெட்டி நாயுடு
காரு, Kt, சென்னை மாகாண கவர்னர் அ...வர்கள் எழுதுகிறார்:—
" வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத ...சாஸ்திரி, D. V. S. அவர்
களால தயார்செய்யப்படும் மருந்துகளின் அ...ாரமான வீர்யத்தற்கு நான்
நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவ...னாக இருக்கிறேன். இவர்
நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வா...னாக இருக்கிறார். இவர்
ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்...களை நன்றாய் படித்துப்
பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்து...களைத் தயார் செய்வதில்
தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அ...னுபவத்திற்குக் கொண்டு
வந்து இருக்கிறார். அப்பேர்க்கொத்த இவரு...டைய மருந்துகளை நான்
உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் ... வீர்யமுள்ளவ்வகள்
என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்...டேன்.''

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் ...கிடைய...து.
சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். ...கேட்லாக் இனம்.

வைத்தியரத்ன யு. ராமநாத ...சாஸ்திரி,
வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயி...லாப்பூர், மதராஸ்.



10வருஷம்உத்திர...வாதமுள்ள
புது மாதிரி...யான
பஞ்ச வர்ண கல் ... செயின்கள்

(செயின் 1-...க்கு)

ரூபாய் 5-0-0

எங்கள் ரோல்டு... கோல்டு
செயின்கள் ஐந்து...வித நிற
மான செயற்கை ...கற்கள் வைத்
துக் கட்டிய ...இந்த புது
மோஸ்தர் செயின்...களை குழந்
தைகளும், பெ...ரியவர்களும்
அணிந்து ஆன...ந்த மடைய
லாம்.

(கேட்லாக் இல...வசம்)

R.S. பிரகாசம் & Co,
அலாய் கோல்டு ஜு...வல்லர்ஸ்.
187, சைனா பஜார் ரோட், ... ஜி. டி. மதறாஸ்



காசி, தசாஸ்வமேத கட்டம்

திருப்பனந்தாள் காசிமடத்து ரூ. 1000 தமிழ்ப்பரிசை இவ்வருடம் பெற்ற ஸ்ரீமான் சங்குப் புலவர்.

மலைசாயக் கவிபாடிய சங்குப் புலவர்

இப்போது திருப்பனந்தாள் மடத்து ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றவராகிய வித்துவான் பண்டித தி. சங்குப் புலவருடைய மூதாதையர் ஒருவரது பெயரும் சங்குப் புலவர் என்பதே. அவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் இருந்தவர். அன்னவர் சேற்றூர் ஜமீன்தாரொருவர் வேண்டுகோளின்படி தேவதானம் பெற்ற நாயகியம்மை கோவில் முன் மண்டபங் கட்டுவதற்காக அத்தேவதானத்தை யடுத்த ஓர் மலைமீதுள்ள பெரிய கற்பாறை கீழே நகர்ந்து வரும்படி ஓர் காலத்திற் செய்யுள் பாடினர். அச்செய்யுள்கள் அடியிற் குறிக்கப்பட்டிருக்கின்றன.

கலித்துறை.

1. நிலைசாமயானுத தவசே புரிந்து நிறையமுத
கலைசார் தவம்பெற்ற தென்சேறை நாதனைக் கண்டவளே
உலைசாருளிவைத்துக் கற்பணி செய்ய வுனதருளால்
மலைசாய வேண்டுந் தவம்பெற்ற நாயகி மாதங்கியே.

2. புகழவும் வேண்டு முலகமெல் லாமுனைப் போற்றமலை
நகழவும் வேண்டுந் திருப்பணி வேலைக்கு நானுரைத்தேன்
இகழ வொண்ணும லெனைக்காக்க வேண்டு மிமயமலை
மக ளெனவந்து தவம்பெற்ற நாயகி மாதங்கியே.

3. சீக்கிரமேமலை சாயவும் வேண்டுந் திருப்பணிக்கே
ஆக்கமுடன் வந்து சேரவும் வேண்டும் நினன்புறுமென்
வாக்கதனுற் றமிழ் சொன்னேன் றென்சேறை வரதனுக்குப்
பாக்கியமே பெற்ற நாயகியே சிவ பார்வதியே.

அவர் பாடிய அன்றிரவே குறித்த கற்பாறை கீழே நகர்ந்து வந்து அப்பெற்ற நாயகி கோவிலருகிற் கிடக்கக் கண்ட ஜமீன்தார் அப்புலவரவர்களை யரண்மனைக்கு அழைத்துச் சென்று வேண்டிய பரிசில் ஈவேன். நுமது விருப்பம் யாதென வினவ, அப்புலவர், "எமக்கு ஒன்றும் பரிசில் வேண்டுவதில்லை. அப்பெற்ற நாயகி கோவில் அபிஷேக விபூதியே எனக்குப் பரிசிலாகத் தருவீர்" என்றனர். அச்சமயம் அப்புலவருக்கு மாணுக்கராய் அருகிலிருந்த ஒரு மறையவர் சாற்றுக் கவியொன்று பாடினர்.

சாற்றுக கவி.

பெறற நாயகி பொற்சோவிற் பெருந்திருப்பணியின் வேலை
முற்றவே வேண்டி யாறுமுகக் கவிராயன செம்பொற்
சிற்றடி மனத்துள் வைக்குந் திறற் சங்குக் கவிஞன் சேறை
நற்றனி மலையைத் தன்னுல் நகரவே பாடினனே.—என்பது

இக்கவியைக் கேட்ட அப்புலவர் அப்பார்ப்பனரை நோக்கி 'நுமக்கு யாதுவேண்டும்' என வினவ, அவர் தமக்கு விவாக முடிக்கப் பொருள் வேண்டுமென்றனர். அவரது கருத்தை அச்சேறை நகர் ஜமீன்தாரவர்களிடம் தெரிவித்து, விவாக முடித்துக்கொள்வதறகு வேண்டும் பொருள தருமாறு வேண்டினர். அவ்வாறே அன்னவரும் செய்தனர். அவர் காலந் தொடங்கி இற்றை நாளளவும் வித்துவான்களாக அன்னவர் வம்மிச பாரம்பரை நிகழ்ந்து வருகின்றது. இப் பரிசு பெற்ற தி. சங்குப் புலவர் அம்மலை சாயப் பாடிய சங்குப் புலவருக்கு ஐந்தாம் தலைமுறையாகத் தோன்றியவர்.

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில் பஹார் ஸோப்பு சிறந்தசுத்தி கரிப்பைத் தரும் கிருமி நாசினி.

சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும். அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணு. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணு ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2.

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி,

68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

கொனேலா - கொனேலாக்ஸ் - கொனேசல்ப்

கொனேகான்

வெள்ளை, வெட்டைக்கு

பாட்டில், ரூ. 1-8-0. யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதுரை,

201, மோகல் வீதி, ரங்கூன். (மதுரை, பம்பாய், கல்கத்தா.)

MINSARARASAM

நிகரற்ற தேக வலிமை -

புதிய ரத்தோட்டம் -

அபாரமான ஜீவசக்தி -

ஆனந்தமயமான வாழ்வு -

இவைகளை படைப்

மின்சார ரசம்

வேத அருமையான பொக்கிஷம்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்

எல்லா இடங் களிலும் கிடைக்கும்

புட்டி 1-க்கு ரூ. 2.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்.

MINSARARASAM

ஹாஸ்யப்பகுதி

சிவப்பு மிட்டாய்

"பூரி"

சாமாவுக்கு நடுவில் கொட்டாவி வரவே வாயைத் திறந்தான். அவன் துரதிருஷ்டம் பாருங்கள், ஒரு பையன் வீசியெறிந்த சிவப்புமிட்டாய் சரியாக அவன் வாயில் வந்து விழுந்தது.

சங்கோஜப் பிராணி என்று சொல்வார்களே, அந்த இனத்தைச் சேர்ந்தவன் சாமா. யாராவது நாலு பேர் சேர்ந்திருக்குமிடங்களில் போய்விட்டு வருவதற்குள் அவனுக்குப் பிராணன் போய்ப் பிராணன் வந்துவிடும்

இரண்டு மூன்று வருஷங்களுக்கொருதரம் அவன் சங்கீதக் கச்சேரிக்குக்கூடப் போய் வருவதுண்டு. ஆனால் கச்சேரி முடிந்து வெளியே வருவதற்குள் தன்னைத்தானே மனதால் சித்திரவதை செய்துகொள்வான். யாராவது இரண்டு பேர் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது நடுவில் அவனை ஆகஸ்மாத்தாகப் பார்த்துவிட்டால் வந்தது ஆபத்து. அவர்கள் தன்னைப்பற்றித் தான் ஏதோ பேசிப் பரிகாசம் செய்துகொண்டிருக்கிறார்களென்று எண்ணிக் கஷ்டப்படுவான். சில சமயம் சபையிலுள்ள அத்தனை பேரும் சங்கீதம் கேட்பதை விட்டுத் தன்னையே கவனித்துப் பார்த்துக்கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றும்.

பார்க் முதலிய இடங்களுக்குப் போனாலோ அவன் படும் அவஸ்தை சொல்லமுடியாது. பார்க்கிலுள்ளவர்கள் எல்லோரும் அவன் என்ன வேஷ்டி கட்டிக்கொண்டிருக்கிறான், என்ன சட்டை போட்டுக்கொண்டிருக்கிறான், எப்படி நடக்கிறான் என்று பார்த்துக்கொண்டிருப்பதாக எண்ணி மனோவேதனைப் படுவான். தன் சட்டைப் பையிலுள்ள மணி பர்ஸில் நாலணா ஒரு தம்பிடிக்கு மேல் இல்லையெ பன்பது கூடத் தன்னைப் பார்ப்பவர்களுக்குத் தெரிந்துவிடுமோ என்று அஞ்சுவான். சங்கோஜத்தால் இப்படியெல்லாம் பீதியடைந்து கால்கள் நடுங்க, குனிந்த தலை நிமிராது மிக வேகமாக நடந்து செல்வான்.

கூடியவரையில் அவன் கூட்டமான இடங்களுக்குப் போகாதிருக்க முயல்வான். இதனால் பிறகு மனஸ்தாபம் ஏற்படுவதைக் கூட லக்ஷியஞ் செய்யமாட்டான்.

ஒரு சமயம் அவனது தூரபந்து ஒருவர் வீட்டில் கலியாணம் நடந்தது. ஜனங்கள் அதிகமில்லாத சமயம்பார்த்துப் போய்க் கலியாணப் விசாரித்து வந்து விடலாமென்றிருந்தான் ஆனால் அவனைக் கூப்பிட வந்த பந்துக்கள் அவனை வலுக்கட்டாயப்படுத்திப் பின்னோடு அழைத்துச் சென்றுவிட்டனர்.

கலியாண வீட்டின் மாடியில் யாருமில்லாத ஓரிடத்தில் சாமா தெய்வமேயென்று உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு மூன்று சிறுவர்கள் அவன் பக்கத்தில் வந்து விளையாடத் தொடங்கினர். அவர்கள் கையில் நீண்ட குச்சி மிட்டாய்கள் இருந்தன. அவர்கள் மிட்டாய்களை உயர எறிந்து பிடித்து விளையாடினர்.

சாமா அவர்கள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது நடுவில் அவனுக்குக் கொட்டாவி வரவே வாயைத் திறந்தான். அவன் துரதிருஷ்டம் பாருங்கள்; ஒரு பையன் வீசியெறிந்த சிவப்பு மிட்டாய் சரியாக அவன் வாயில் வந்து விழுந்தது. சாமா உடனே பதறிப் போய்விட்டான். மிட்டாய் எறிந்த பையனோ அது எச்சலாய் விட்டதே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

அதேசமயத்தில் மாடியில் ஏறிவந்த ராஜாராமன் சிறுவர்கள் ஏங்கி நிற்பதையும், சாமா வாயில் சிவப்பு மிட்டாய் இருப்பதையும் பார்த்து ஒரு பரிகாசச் சிரிப்புச் சிரித்துவிட்டுப் போய்விட்டான். அவ்வளவு தான், சாமாவுக்குப் பாதிப் பிராணன் போய்விட்டதென்று சொல்லலாம். ராஜாராமன் பெரிய புரளிக்காரன் என்று அவனுக்குத் தெரியும். எங்கே தான் குழந்தைகளிட

For TUBERCULOSIS
BRONCHITIS. PREGNANCY
LACTATION. CALCIUM
DEFICIENCY, HACKING
COUGH, LUNG AND THROAT TROUBLES

DOCTORS RECOMMEND
SIROP
THIO-CALCIN

2 Thio Calcin With A & D Vitamins.

3. Thio Calcin E M H For Irritant Cough & Bronchial Asthma.

SOLD AT ALL CHEMISTS

சிரப் "தியோ கால்ஸின்"

க்ஷயம், காசம், விஷக்காய்ச்சல், இருமல், கால்ஸியம் குறைவு, சுவாஸாசயங்களின் கெடுதல்களையும் நீக்க இது ஒரு கைகண்ட மருந்து. ஒரு பிரபல டாக்டர் எழுதுவதாவது:—

ஆரம்ப க்ஷயம் குணமாகியது.

IN 6 & 16 OZS SIZE

காசம், ஆரம்ப க்ஷயம் போஷாக்கின்மை, கால்ஸியக் குறைவு.

காலஞ்சென்ற டாக்டர் பி. எஸ். மல்லையா, எம். பி. பி. எஸ். 4-10-34.

குழந்தைகளுக்கேற்படும் கடுமையான இருமல், ஆரம்ப க்ஷயம், இவற்றிற்கு நான் ஸிரப் தியோ-கால்ஸின் உபயோகித்து திருப்திகரமான பலனை கண்டுளேன். போஷாக்கின்மை, கால்ஸியக் குறைவுகளுக்கும் நல்லது.

(ஒப்பம்) பி. எஸ். எம்.

2. தியோ கால்ஸின் With வைடமின் A & D பிரத்யேகம். இது சகலவிதமான பலஹீனங்கள், வைடமின் A. D. குறைவுள்ளவர்களுக்கு கைகண்ட டானிக்.

3. தியோ கால்ஸின் E. M. H. அதிக இருமல் கக்குவான் ஆஸ்த்மா இவைகளுக்குக் கைகண்டது. எல்லா மருந்து ஷாப்பிலும் கிடைக்கும்.

Sole Agents:—D A D H A & C O, MADRAS.

மிருந்து மிட்டாயைப் பிடுங்கித் தின்றுகொண்டிருப்பதாக அவன் புரளி பண்ணுகிருனே என்று அவனுக்குத் திகில் பிடித்துக்கொண்டது. கீழே யிருப்பவர்கள் ராஜாராமன் சொல்வதை நம்பினுல் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று சிந்தித்துப் பார்த்தபொழுது அவனுல் மனோ வேதனை சகிக்கவே முடியவில்லை. தான் மிட்டாய்க்கு ஆசைப்பட்டுப் பிடுங்கவில்லை யென்பதை எப்படி யாவது எல்லாருக்கும் தெரிவித்துவிட வேண்டுமென்று விரும்பினுன்.

அப்பொழுது வீட்டுக்காரர் நாகநாதன் வந்தார். அவனுக்கு ஏற்பட்டிருந்த கவலையில் சங்கோஜம் கூடப் பறந்து போய் விட்டது.

சாமா அவரைக் கூப்பிட்டு "ராஜாராமனைப் பார்த்தீர்களா" என்று கேட்டான்.

"ஏன்?" என்ருர் நாகநாதன்

"ஒன்றுமில்லை, அவன் சுத்த புரளிக்காரன்."

"என்ன செய்தான்?"

"எனக்கு முப்பது வயதாகிறதே. மிட்டாயும் கிட்டாயும் எனக்குப் பிடிக்குமா?"

"பிடிக்குமென்று யார் சொன்ஞர்கள்?

"அப்படிப் பிடித்திருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும் குழந்தைகளிடமிருந்து பிடுங்கித் தின்பேனு?"

"சாமா! நீ பிடுங்கித் தின்னு யென்று ஒருவரும் சொல்லவில்லையே!"

'இல்லை. நான் வாயைத் திறந்தபோது ஒரு பையன் வீசி யெறிந்த மிட்டாய் வாயில் விழுந்து விட்டது. அதைத் தான் ராஜாராமன் நான் பிடுங்கித் தின்று விட்டதாக உங்களிடம் சொல்லித் தமாஷ் செய்யப் பார்க்கிருன். நீங்கள் அவன் சொல்வதை நம்பாதேயுங்கள்."

"சரி" என்று சொல்லிவிட்டு நாகநாதன் சிரித்துக் கொண்டே சென்று விட்டார்.

சாமாவின் மனதில் பாதி பாரம் குறைந்தது போலிருந்தது. இப்படியே தான் பார்க்கிற பேரிடமெல்லாம் சொல்லி வைத்தால் ராஜாராமனைத் தான் பரியாசம் பண்ணுவார்களென்று நினைத்தான்.

ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் ஜானகி அம்மாள் வந்தாள். சாதாரணமாக அவளுடன் அதிகம் பேசிப் பழக்கமில்லாத சாமா சங்கோஜத்தை விட்டுத் துணிந்து அவளுடன் பேசத் தொடங்கினுன்.

"நம்ம ராஜாராமனுக்குப் பயித்தியம் தான் பிடித்திருக்கிறது"

"ஏன்?"

"ஏனு" அவன் உன்னிடம் என்னைப்பற்றி ஏதாவது சொன்னுனு?

"ஒன்றும் சொல்லவில்லையே" என்று ஜானகி தலையை யாட்டினுள்.

"குழந்தையாயிருக்கும் போதே எனக்கு மிட்டாய் பிடிக்காது. அதுவும் இப்பொழுதா பிடிக்கப்போகிறது?"

"நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்ருள் ஜானகி.

"இங்கே இரண்டு பையன்கள் விளையாடிக்கொண்டிருந்தார்களே! அவர்களிடமிருந்து நான் மிட்டாயைப் பிடுங்கித் தின்பேனு? ராஜாராமன் ஏதோ வேடிக்கையாக உங்களிடம் சொல்வதாக நினைத்துக்கொண்டு நான் அப்படிச் செய்ததாகச் சொல்வான். அதை நம்பாதே" என்ருன்.

"நன்ருயிருக்கிறது. நான் அவன் சொல்வதை நம்புகிற வழக்கமே இல்லை" என்று சொல்லி அவள் போய்விட்டாள்.

சாமா இதே மாதிரி இன்னும் இரண்டு மூன்று பேரிடம் சொல்லி வைத்தான். பிறகு அவன் சாப்பிடக் கீழே போன போது எல்லாரும் அவனையே விஷமச் சிரிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு போக்கிரிப்பையன் "இன்று இலையில் மிட்டாய் போடுவார்களா?" என்று கேட்டபோது சாமா அப்படியே ஒடுங்கிப்போய் நின்றுவிட்டான். அங்கிருந்த எல்லோருக்கும் விஷயம் தெரிந்துவிட்டதென்று ஊஹித்தான். ராஜாராமன் தன்னை மாடியில் பார்த்த பிறகு நேரே எங்கேயோ அவசரமாகப் போய்விட்டதாகவும் எவருடனும் பேசவில்லை யென்றும் அவனுக்குத் தெரிய வந்தது. அப்படியானுல் வேறு யார்தான் தன்னைப்பற்றிப் புரளி செய்திருப்பார்களென்று அவனுக்குத் தெரியவில்லை.

நாகநாதன், சாமா மிட்டாய் தின்றதைப்பற்றி ஏதோ தம் மாலானவரை புருஷர்களிடையே இரகசியமாகச் சொல்லிவைத்திருந்தார். ஜானகி அம்மாளோ அந்த விஷயத்தைப் பக்கத்துத் தெரு தோழிகளிடம் சொல்லப் போனவள் இன்னும் திரும்பி வரவில்லை

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட (CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைஞபஜார், மதராஸ்.

ஜகத்ரக்ஷக
ஸ்ரீ ஷண்முக யந்திரம
125,6600. ஜனங்கள் போற்றுவது
பரீக்ஷை வெற்றி, ஜீவன விருத்தி, சொற்பன மிரட்சி, சத்துரு அடக்கம், வழக்கு ஜெயம், புத்திர விருத்தி, குடும்ப ஒற்றுமை, நோய்பேய் ஒழிதல், யந்திரம் 1க்கு ரூ 2.
மாந்திரீக மருத்துவ ஆபீஸ்,
வாலாஜாபாத், P.O, S.I.R. சென்னை.

இதர டாம்கோ சரக்குகள்
ஜெய் கூந்தல் தைலம், லோஷன் & பிரிலியண்டைன், வாசனை மிகுந்த கூந்தல் டானிக், ஸோப்ஸ் & கிளிஸரின்

TOMCo

டாம்கோ விற்பனை இலாகா
19 A வாணியர் தெரு, மதராஸ்.

என்ன அழகான கூந்தல்
நீலம்... மிருதுவு......
எமனைனில் ஆரோக்கியமானது
வாசனைத் தேங்கா யெண்ணெய்

தலைமயிர் பிசுக்குத் தட்டாமல் நல்ல பளபளப்புடன் பிரகாசிக்க வாசனைத் தேங்கா யெண்ணெய்.

ஔஷத வாசனை கூந்தல் டானிக்
தலைமயிர் வளர்ச்சி குன்றி அழகுங்குன்றி இருக்கிறதா? அப்படியானுல் இந்த டாம்கோ ஹேர்டானிக்கை தடவி வாரிப் பாருங்கள்; ஓரிரு நாளில் அதில் உயிரும் ஒளியும் பிரகாசிக்கும்.

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்., பம்பாய்.
(T H 410)



பி. ஸி. துரைசாமி,
பம்பாய்.
31-12-34௳ மூன்று வடம் சங்கிலி வந்து சேர்ந்தது. அதன் வேலைப்பாடு அபாரமாகவிருக்கிறது. எல்லோரும் திருப்தியடைந்தோம். அதைத் தாங்கள் ஜரூராகச்செய்து கொடுத்ததற்கு வந்தனம்.

BAPALAL & Co.
216. China Bazaar. MADRAS.

"குஜராத்சமாச்சார்" (தினப் பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]
குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.
குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானுல் இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்.
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.
Manager, Gujarat Samachar & Praja Bhandhu
AHMEDABAD

மதிப்புரை

ஸ்ரீ வேதாந்த தீபிகை

செப்டம்பர் 1936

[ஆசிரியர்கள் ஸ்ரீமான்கள் எஸ் வாஸுதேவாச்சாரியார், வி வி. ஸ்ரீனிவாஸய்யங்கார்; ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்த பிரசார சபையாரால் பிரசுரிக்கப் படுவது; வாணி விலாஸ், பத்ரய்ய கார்டன் தெரு, பார்க் டௌன், சென்னை; வருஷச் சந்தா ரூ 3.]

இந்தமாதப் பத்திரிகையில் சில அரிய விஷயங்கள் காணப்படுகின்றன. எட்வர்ட் கார்ப்பெண்டர் என்பவர் எழுதியுள்ள "அநுராகம் மரணம், இவைகளின் விசித்திர சேஷ்டிதங்கள்" என்ற கிரந்தத்தைப் பற்றி ஆசிரியர்கள் சர்ச்சை செய்திருக்கின்றனர். மேற்படி கார்ப்பெண்டர் மரணத்தைப் பிரியமாகவே எதிர்பார்ப்பது சம்பந்தமாக நிர்ணயித்திருக்கும் விஷயங்களை எடுத்துக் கூறி, இம்மாதிரியான விஷயங்களால் புதிதாக அறிந்துகொள்ளக் கூடிய விஷயங்களில்லாவிடினும் அத்தகைய கிரந்தங்களில் எழுதப்பட்டுள்ளவைகளே பிரதானமென்று பிரமித்துள்ளவர்களுக்கு அஜ்ஞானம் நீங்கவும், கர்ம பரிபாகங்கள் யார் பக்கம் எவ்விதமாக நேரும் என்பதை, யார் அறியக்கூடும் என்பதை எடுத்துக் காட்டியிருப்பது மிகவும் ஆச்சரியகரமாகவும் படிப்போர் மனதைக் கவரத்தக்கதாகவும் இருக்கிறது. "கம்பனும் கண்ணனும்" என்றதொரு வியாஸத்தில் ஸ்ரீமான் திருமலை அய்யங்கார் சில ரஸமான விஷயங்களை எடுத்துரைத்திருக்கிறார். ராமாவதாரத்தைச் சிறப்பித்துக் கூறிய கம்பன் ஆயர்தம் கொழுந்தை அநுபவித்த ஆழ்வார்களின் பிற்காலத்தவராகையாலும் அவர்களை அடியொற்றியவராகையாலும் ராமாயணத்தில் கண்ணனையும் சிறப்பித்து அதில்ஈடுபட்டு அனுபவிக்கிறார் என்பதைத் தக்க மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்த சஞ்சிகைமுதல் "விவாதபாகம்" என்றதொரு பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகப் பத்திரிகைகளில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்றிருப்பதுபோல் இதுவுமாகிறது. ஆகையால், இப்பகுதியில் பிரசுரமாகும் விஷயங்களில் வெளிப்படும் அபிப்பிராயங்கள் ஆசிரியர்களைச் சாரா து. இப்பொழுது முதன் முதலாக ஸ்ரீராமாயணத்தில் பெருமாள் சமுத்திர ராஜனைச் சரணாகதிசெய்ததாகவுள்ள இடத்தில் "அத்யமே மரணம் வாபி தரணம் ஸாகரஸ்யவா" என்றிருப்பதில் 'பெருமாள் மரணம்' என்று பொருள் படும்படியான ஒரு சர்ச்சை பண்டிதர்களுக்குள் நடந்துவருவதை ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாச்சாரியார் ஆராய்ந்திருக்கிறார். மேற்கண்ட விதம் கூறுவது எவ்விதத்தில் அபார்த்தமாகிறது என்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். இது ஒவ்வொருவருடைய கவனத்திற்கும் உரியது. தொடர்ச்சியாக வரும் ஸ்ரீ வரதராஜ பஞ்சாஸத், மீமாம்ஸா ஸங்க்ரஹம் முதலிய விஷயங்களும் இதில் வெளிவந்திருக்கின்றன. ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தாருக்கு அரிய தொண்டாற்றிவரும் இப்பத்திரிகை அச்சமூகத்தாரின் பூரண ஆதரவிற்குப் பாத்திரமானது.



தென் ஆப்பிரிக்கா நல்லுணர்ச்சி தூது கோஷ்டி சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது ஸென்ட்ரல் ஸ்டேஷனில் பல பிரமுகர்களால் வரவேற்கப்பட்டனர்.

கலைமகள்

புரட்டாசி மாதம்

இந்த இதழிலும் வழக்கம் போல் பல முக்கிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. எல்லாவற்றிலும் முக்கியமாக சுப்ரமணிய பாரதியார் தமது தம்பிக்குப் புதுச்சேரியிலிருந்து எழுதிய கடிதமொன்று பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கூறவேண்டும். பாரதி அன்பர்களுக்கு அவர் கையெழுத்தும் கையொப்பமும் கொண்ட இக்கடிதம் பெரிதும் இன்பம் விளைவிக்குமென்பதில் சந்தேகமில்லை. "தர்மம் தலை காக்கும்" என்ற விஷயமாக ஆங்கரை சுப்பையரென்பாரின் வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் குறிப்பிட்டிருக்கிறார். "கலைச் சொல்லாக்க முயற்சிகள்" என்ற ஒரு வியாஸத்தை ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலச்சாரியார் உதவியிருக்கிறார். விஷ விருக்ஷம் என்ற தொடர்கதையும் பாகமும் வெளிவந்திருக்கிறது.

ஜனோபகாரி

ஸ்ரீரங்கம், கீழச் சித்திரை வீதி. ஜனோபகாரி ஆபீஸினால் வெளியிடப்படும் இம்மாதப் பத்திரிகையின் ஆவணி இதழ் வரப்பெற்றோம். ஜ்யோதிஷம், மந்த்ரம், ஆயுர்வேதம் முதலிய விஷயங்களைத் தெளிவுபடுத்தும் பத்திரிகையின் இந்த இதழில் முன் மலர்களில் வெளிவந்துள்ள விஷயங்களின் தொடர்ச்சிகள் பிரசுரமாகியிருக்கின்றன. பத்திரிகையின் வருடச் சந்தா ரூ. 3.

மனோரஞ்சனி

சென்னை எஸ்பிளனேட், எம். எஸ். ராமுலு கம்பெனியாரால் வெளியிடப்படும் இம் மாதப் பத்திரிகையின் ஆகஸ்ட் மாத மலர் வரப்பெற்றோம். இராஜலக்ஷ்மி என்னும் தொடர் கதையின் மற்றொரு பகுதி வெளிவந்திருக்கிறது. இப்பகுதியில் அப்பனையங்கார் ஸ்வீகாரம் (ராஜகோபாலனை) செய்துகொள்ளுவதும், ராஜகோபாலனும் க்ரமமாகப் படித்துச் சென்னையிலும் சட்ட கலாசாலையில் பயின்று வருவதும், கடற்கரை ரஸ்தாவில் ஒரு பெண் மோட்டார் தாக்கிக் காயம்பட்டுப் பிரக்ஞை இழப்பதும், அந்தப் பெண்ணுக்கு ராஜகோபாலன் உதவி செய்ய நேருவதும் விவரிக்கப்படுகிறது.

லோத்ரா
கர்ப்பாசயத்திற்குரிய
பலவிருத்தி ஔஷதம்
ஸ்திரீகளுக்கு
ஒரு வரப்பிரஸாதம் போன்றது
வலியோடும், காலந்தவறியும், குறைவாகவும், அதிகமாகவும், மாதவிடாய் ஆகுதல், வெள்ளை, மலட்டுத்தனம், மூர்ச்சை யடைதல், இடுப்புவலி, தூக்கமின்மை, அஜீர்ணம், மலச்சிக்கல், இருமல், சுவாச காசம், தலைவலி, முதுகுவலி முதலியவைகளைக் குணப்படுத்தும்
தேவ்ஸரி குடீரம், எழும்பூர் :: சென்னை

கண்ணோட்டம் - பிரமுகர்கள்

அஸ்ஸாம் மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் ஆர். என் ரீட், ஐ. ஸி. எஸ்.

தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு அமெரிக்காவில் வசித்து வந்த பிரபல காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் சைலேந்திரநாத் கோஷ் இந்தியா திரும்பி வர அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

பஞ்சாப் சர்வகலாசாலைப் பரீக்ஷையில் கணக்கில் எம். ஏ. பட்டம் பெற்ற முதல் ஸ்திரீயான மிஸ் என். தாகுர்தாஸ் மேல் படிப்பிற்காகச் சமீபத்தில் இங்கிலாந்துக்குச் சென்றார்.

சமீபத்தில் சென்னை சர்வ கலாசாலையால் டாக்டர் பட்டமளிக்கப்பட்ட ஸ்ரீமான் ஏ ஸ்ரீனிவாஸன், எம். ஏ.



எச்லேப்புற மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் ஜார்ஜ் கன்னிங்ஹாம், ஐ. ஸி. எஸ்.



புதுக்கோட்டை ஹைக்கோர்ட்டின் புதிய ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் பி. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.



லண்டனில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் ஒரு கிளையை ஸ்தாபிப்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றுள்ள ஸ்வாமி யோகாநந்தா. லிவர்பூல் ஸ்டேஷனில் எடுத்த படம்.

பீஹார் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் ஹாலட், ஐ. ஸி. எஸ்

சிகாகோ (அமெரிக்கா) சர்வகலாசாலையில் உதவி ஆராய்ச்சி ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் எஸ். சந்திரசேகர்.

மற்ற பக்கங்களில்

மல்லிகா (சிறுகதை)	1
தன்னிர்ச்சய பிரமுகர்கள்	3
விநோதசகோதர	5
ஸங்கீதப்பகுதி	6
வநாகரீகம்	8
பிரமேஹமும் மதுமேஹமும (நோயற்ற வாழ்வு)	9
காசி, தசாஸ்வமேத கட்டம (படம்)	11
மலைசாயக் கவி பாடிய சங்குப் புலவர்	12
சிவப்பு மிட்டாய் (ஹாஸ்யப்பகுதி)	13
மதிப்புரை	15
கண்ணோட்டம் - பிரமுகாகள்	16
பிரபஞ்சவர்த்தமானம	17
இந்தியவர்த்தமானம	23
நாட்டு நடப்ட - சுத்திபூ கண்ணாடி	25
மஹாபாரதம்	27
ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள் (தொடர்கதை)	29
கைரேகை மர்மங்கள்	32
அதிசயம் - ஆனல் உண்மை	34.
வேலையின் கூலி (சிறுவர் கதை)	35



கோவா ஹார்பரின் தோற்றம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

சங்கத்தில் அபிஸீனியாவுக்கு ஸ்தானம்

சர்வதேச சங்கத்தில் அபிஸீனியாவுக்கு ஸ்தானம் அளிக்க வேண்டுமா என்ற பிரச்னை அத்தாக்ஷிப் பரிசிலனைக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கமிட்டி, "இந்தப்பிரச்னை பற்றிய சந்தேக நிலை காரணமாகவுள்ள அநுகூலத்தை எதியோபியர் பெற்று மேலும் பொதுச் சபையில் ஸ்தானம் வஹித்துவரவேண்டும்" என்று முடிவு செய்தது. ஆகையால் இந்தப் பிரச்னையை ஹேக் கோர்ட்டிற்கு அனுப்பவேண்டுமென்று முதலில் இருந்த அபிப்பிராயம் கைவிடப்பட்டது. ஆனல் எதியோபியா ஸ்தானம் வஹிப்பது தற்போதையக் கூட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் தான் செல்லுமென்றும் எதிர்கால முடிவு இதனல் பாதிக்கப்பட மாட்டாதென்றும் கூறப்படுகிறது

* * * *

அபிஸீனிய ஸ்தானிகர் துரோகம்

பாரிஸிலுள்ள அபிஸீனிய ஸ்தானிகரான வால்டி மார்யாம் என்பவர் இத்தாலிய ஸ்தானிகரது காரியாலயத்தில், அபிஸீனியச் சக்ரவர்த்தி என்ற ஹோதாவில் இத்தாலிய மன்னருக்குப் பணிந்து நடப்பதாகப் பிரமாண மெடுத்துக் கொண்டார். அதுகாலை இத்தாலிய ஸ்தானிகரும், இத்தாலிய ராணுவ, கடற்படைப் பிரதிநிதிகளும் பிரசன்னமாயிருந்தார்கள்.

* * * *

"ஜெர்மனி யுத்தம் வேண்டவில்லை"

சமீபத்தில் ஜெர்மனிக்குச் சென்று திரும்பிய மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் பத்திரிகை நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்திருக்கிருர்:—

"ஜெர்மனி யுத்தம் வேண்டவில்லை. ஆனல் அந்நாடு தன்னை ரஷ்யா தாக்குமோவென அஞ்சுகிறது. பிரான்ஸுக்கும், ரஷ்யாவுக்கும் ஒரு ரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமோவென ஜெர்மனி சந்தேகிக்கிறது. ஜெர்மானியரைவிட அதிக சந்தோஷகரமான வாழ்க்கை நடத்தும் ஜனங்களை நான் பார்த்ததில்லை. நான் இதுவரை சந்தித்துள்ள மகா மேதாவிகளில் ஹிட்லர் ஒருவர். ஜெர்மானியர் அனைவரும் பிரிட்டனை மிக்க மரியாதையுடன் மதிக்கின்றனர். இந்நாட்டுடன் நேசமாக வாழ அவர்கள் ஆவல் கொண்டிருக்கிருர்கள்."

* * * *

மீண்டும் சீன-ஜப்பான் தகராறு

சமீபத்தில் ஜப்பானியர் ஒருவர் சீனவில் கொல்லப்பட்டது சம்பந்தமாக அந்த இரு நாடுகளுக்குள்ளும் விரோதமேற்பட்டிருக்கிறது இதன் காரணமாக ஜப்பான் படைகளும் கடற்படைகளும் அங்குஅனுப்பப்பட்டன. இருநாடுகளுக்குமுள்ள ராஜீய உறவு உடனே ரத்தாகிவிடாதென ஜப்பானிய அதிகாரிகள் உறுதி கூறியிருப்பது ஆறுதலளிக்கக் கூடிய செய்தியாகும்.

தகாறுக்குக் காரணமான பிரச்னைகளைச் சமரசமாகத் தீர்க்கத் தாங்கள் முயற்சி செய்யப் போவதாகவும் ஆனல் சீன அதிகாரிகள் அந்த ரங்க சுத்தியுடன் நடந்து கொண்டாலன்றி அம் முயற்சியால் பிரயோசனமில்லையென்றும், ஜப்பானிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சமரச முயற்சி தோல்வியுறுமாயின், தாங்கள் மிக்க உறுதியுடன் வேறுவகையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாகவும் அவர்கள் அறிவித்தார்கள்.

* * * *

ஸ்பெயின் உள் நாட்டுக் கலகம்

ஸ்பெயின் உள் நாட்டுக் கலகம் இன்னும் நடந்துகொண்டு வருகிறது கலகக்காரர்கள் தலைவரான ஜெனரல் வாரிலஸ் கடுமையான போராட்டத்திற்குப் பிறகு தொலிதோ என்னுமிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

இந்தியாவில் ஜெர்மன் ராஜ்யம்

ஜெர்மனி தனக்குக் குடியேற்ற நாடுகள் வேண்டுமென வற்புறுத்துவது சம்பந்தமாக இப்பொழுது ஒரு புதிய யோசனை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவில் போர்ச்சுகலுக்குச் சொந்தமாகவுள்ள சில பிரதேசங்களை ஜெர்மனி விலை கொடுத்து வாங்குவதென்பதே அந்த யோசனை. ஆனல் போர்ச்சுகல் தேசத்தினரில் பெரும்பாலோர் இந்த யோசனையை அங்கிகரிக்கவில்லை.

நரையை ஒழியுங்கள் !

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்துவிடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.

BALA KALA STORES,
P. O. Kansi Simri, (Darbhanga.

திரிகால ரேகை சாஸ்திரம்

சக்திதாசன் எழுதியது.

விலை அணு 10.

'மித்திரன்' ரெயில்வே புத்தகசாலைகளிலெல்லாம் கிடைக்கும்.

இந்தியாவில் போர்ச்சுகலுக்குச் சொந்தமான கோவா, டையு, டாமன் ஆகிய ஸ்தலங்களை ஒரு கோடி பவுனுக்கு விலைக்கு வாங்குவது பற்றியும் ஜெர்மன் சர்க்காரின் பிரதிநிதிகள் போர்ச்சுகல் அதிகாரிகளுடன் கலந்து பேசியதாக இப்பொழுது தெரியவருகிறது. இத்தொகையில் பாதியை ரொக்கமாகவும் இன்னொரு பாதிக்கு ஜெர்மன் சரக்குகள் கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாம்.

இந்த ஸ்தலங்களை நீர் மூழ்கிக் கப்பல்களுக்குப் படைத்தளங்களாகவும், இந்தியாவிலும் கீழ் நாடுகளிலும் நாஸிப் பிரசாரம் நடத்த தலைமை ஸ்தானங்களாகவும் உபயோகிப்பதே ஜெர்மன் சர்க்காரின் நோக்கம்

இவ்விஷயம் கோவாவில் ஆச்சரியத்தை யுண்டாக்கியிருக்கிறது.

* * * *

பிராங்கின் மதிப்புக் குறைவு

பிராங்கின் மதிப்பைக் குறைப்பதென பிரெஞ்சு சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். செலாவணி விஷயமாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இம் மூன்று நாடுகளுக்குள் ஒரு ஒப்பந்தம் எற்பட்டிருக்கிறது. இதன்படி பிரெஞ்சு செலாவணியின் மதிப்பு குறைக்கப்பட்டிருப்பது காரணமாக சர்வதேசியப் பரிவர்த்தனை முறைக்கு விசேஷப் பாதகம் எற்படாமல் செய்ய, தங்களாலான அனைத்தையும் செய்வதாக இம்மூன்று நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. சர்வதேசிய வர்த்தக வளர்ச்சியை முன்னிட்டு தற்போதுள்ள இறக்குமதி அளவு நிர்ணயமுறை, பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகள் முதலியவற்றைச் சிறிது சிறிதாக நீக்கி வரவேண்டியது அவசியமென அம்மூன்று நாடுகளும் கருதுவதாகவும் அவ்வொப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சு சர்க்கார் முடிவின் பலனாக, பொதுவாக உலகச் செலாவணிகள் ஒன்றுடனொன்று இணைக்கப்படுமென்பதற்கான அறிகுறிகள் தோன்றி வருகின்றன.

பிராங்கின் மதிப்பைக் குறைத்து விட்டதால் ஸ்விட்ஜர்லாந்தும் அதனுடைய பிராங்கின் மதிப்பைக் குறைத்துவிட்டது ஹாலந்து மட்டும் தங்க மதிப்பு முறையைக் கைவிடப்போவதில்லையென்று அறிவித்திருக்கிறது.

* * * *

பாலஸ்தீனக் கலக மர்மம்

லண்டனிலுள்ள "டெயிலி ஹெரால்டு" பத்திரிகைக்கு அதன் ஜெரூசலம் நிருபர் பாலஸ்தீனக் கலக மர்மத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்.

அராபியர்கள் பூர்ண சுதந்திரம் பெறும் நோக்கத்துடன் கலகம்செய்ய அவர்களுக்கு இத்தாலியர் ரகசியமாக உதவியளித்து வந்திருக்கின்றனர்.

"அடுத்த யுத்தத்தின் விளைவாக பாலஸ்தீன அராபியர்களும் பூர்ண சுதந்திரம் பெற்றுவிடலாம்" என இத்தாலியர் ஆசை மொழி கூறினர். இத்தாலியர் அராபியருக்கு ரகசியமாக ஆயுதங்களும், வெடிமருந்தும் அனுப்பி உதவி செய்து வருகிறார்கள்.

காட்லிவர் ஆயிலின் வலிவூட்டும் சக்தி-

ஸ்காட்ஸ் எமல்ஷனில்

மூன்று பங்கு அதிகரிக்கிறது

தேக அசௌக்யத்தினால் உங்களுடைய தேக வலிவும் சக்தியும் குறைந்திருக்கும் காலத்தில் காட்லிவர் ஆயிலைவிட அதிகமாகத் தேகத்திற்கு வலிவளிக்கும் இயற்கை டானிக் எதுவுமில்லை என்பதை எல்லா டாக்டர்களும் அறிந்ததே. புஷ்டிக்கான சத்தும் முக்கியமான 'ஏ' 'டி' விடமின்கள் காட்லிவர் ஆயிலில் ஏராளமாக அடங்கியிருக்கின்றன.

ஆனால் தேகத்தில் வலிவு குறைந்திருக்கும் காலத்தில் அப்பட்டமான காட்லிவர் ஆயிலை ஜீர்ணித்து பலன் பெறுவது மிகவும் கஷ்டமாகும். பல நோயாளிகள் அதை உட்கொள்ள முடியாது. ஆகையால் தான் "ஸ்காட்ஸ் எமல்ஷன்" மிகவும் உபயோகமாகவிருக்கிறது. காட்லிவர் ஆயிலின் விடமின் சக்தியை எவ்விதத்திலும் குறைக்காமல் ஒரு பிரத்யேகமுறையில் "ஸ்காட்ஸ் எமல்ஷன்" தயாரிக்கப்படுவதுடன் சுலபமாக ஜீர்ணமாகி ருசியாகவுமிருக்கிறது. அதில் லைம், ஸோடா ஹைபோ பாஸ்பைட்ஸ் டானிக் கலந்திருப்பதால் சாதாரண காட்லிவர் ஆயிலைவிட அது மும்முறை அதிக சக்தி பெற்றிருக்கிறது.

தேக சக்தியை விருத்தி செய்கிறது.

தேக அசௌக்கியத்திற்குப் பிறகு இயற்கையான தேகவலிவையும் ஆரோக்கியத்தையும் திருப்பியளிப்பதுடன் சோர்வடைந்திருக்கும்போதும், எங்கும் வியாதி பரவியிருக்கும் போதும் உட்கொள்ள "ஸ்காட்ஸ் எமல்ஷன்" சிறந்த டானிக்காகும். அது வியாதி பரவுவதைத் தடுக்கும் சக்தியை அதிகரித்து வியாதிக் கிருமிகளைத் தடுக்கிறது. இரத்தத்தை விருத்தி செய்து, நரம்புகளுக்கு வலிவூட்டி, பொதுவாக தேகத்தை ஆரோக்கியமாக வைக்க டாக்டர்கள் சென்ற 60 வருஷ காலமாக "ஸ்காட்ஸ் எமல்ஷனையே" வற்புறுத்துகிறார்கள்.

SCOTT'S Emulsion

சுத்த காட்லிவர் ஆயில் சேர்ந்தது.

மொத்த டிஸ்டிரிபியூட்டர்கள்:—இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் (இந்தியா) லிமிடெட். கல்கத்தா
பம்பாய் - மதராஸ் - லாகூர் - ரங்கூன் - கொழும்பு - கான்பூர் - பாடலீபுரம்
ஆமதாபாத் - கொச்சி - கள்ளிக்கோட்டை - விசாகப்பட்டணம் - கராச்சி - அமிருதசரஸ்.

எந்தப் பல் பசையும், அது எவ்வளவு உயர்ந்ததெனக் கொண்டாடப்படினும் சரி, விலை எவ்வளவாக விருந்தாலும் சரி, நீம் டூத் பேஸ்டைவிட மேன்மையாகவோ அல்லது பத்திரமாகவோ உங்கள் பற்களைச் சுத்திகரிக்க முடியாது. எனவே நீம் டூத் பேஸ்ட் உபயோகித்தால் நீங்கள் சிறந்த பல்பசையை உபயோகிக்கிறீர்கள் என்பது உறுதி.

'Neem'

TOOTH·PASTE

பவுடர் வேண்டுமானால் மார்கோப்ரிஸ் நீம் பல் பவுடரை உபயோகிக்கவும்.
கல்கத்தா கெமிக்கல்

சென்னை யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்பொரேஷனின் ''பால யோகினி'' என்ற படத்தில் நடிக்கும் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி.

கணேஷ் பிலிம்ஸாரின் ''கவிரத்ன காளிதாஸ்'' என்ற படத்திலிருந்து ஒரு காட்சி.



டெலிபோடோ

''டெலிபோடோ'' என்னும் கருவி மூலம் படங்களை ஓரிடத்திலிருந்து ம
விருக்கிறது. இந்த மாதிரியாகப் படமனுப்புவது ஜெர்மன் போலீஸாருக்கும்
படங்களுக்கும் முதலில் எடுக்கப்பட்ட படங்களுக்கும் சிறிதுகூட வித்தியா
பர்லின் தபாலாபீஸிலிருந்து பிரத்தியேகமாகக் கிடைத்திருக்கின்றன. இடத
''டெலிபோடோ'' யந்திரத்தில் வைத்து ஏற்பாடு செய்யப்படும் காட்சி
லண்டன் பிரதம தபால் ஆபீஸ் அதிகாரி படத்தை அனுப்பும்படி பர்லினுக்கு
பெற்றுக்கொள்ளும் மெஷினைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். வலது பக்
பெற்றுக்கொள்ளும் இடத்திற்கு, அனுப்புகிறவர்கள், இதை முன்னதாகச்
களின் காட்சி



மற்ரோரிடத்திற்கு அனுப்புவது இப்பொழுது ஜெர்மனியில் பிரபலமாக
மிகவும் உபயோகமாக விருக்கிறதாம. "டெலிபோடோ" மூலம் அனுப்பிய
லயில்லாமல் இருக்கிறதாம். இப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள படங்கள்
து பக்கம் மேல்படத்தில் மற்ரோரிடத்திற்கு அனுப்பப்படுவதற்காகப் படத்தை
காணப்படுகிறது. கீழ்ப்படத்தில் மேற்படி படத்தைப் பெற்றுக்கொள்ளும்
டெலிபோனில் சொல்லிக்கொண்டிருக்கிருர். மற்ரெருவர் படத்தைப்
க்கம் மேல் படத்தில், அனுப்பப்படும் படம் அளக்கப்படுகிறது. படத்தைப்
சொல்லவேண்டியது அவசியம். கீழ்ப்படத்தில் "டெலிபோடோ" யந்திரங்
காணப்படுகிறது.

[காப்பிரைட்]

யந்திரங்கள்

பிரிட்டிஷ் படையில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் ராணுவத் தலைமை ஸ்தானத்தில் ஒரு அறிக்கையைப் படித்துக்கொண்டிருக்கும் காட்சி.

ஸ்பெயின் அந்நியநாட்டுப் படை ஸ்தாபகரான ஜெனரல் ஆஸ்ட்ரே மிலான் ஸ்பெயின் கலகக்காரர் படையின் ஸ்திரீகள் பகுதியைப் பார்வையிட்டார். மேற்படி படை ஸ்தாபன சம்பந்தமாக ஜெனரல் ஆஸ்ட்ரே தமது வலது கண்ணையும் இடது கையையும் இழந்தவர்.



இங்கிலாண்டு இந்தியா பிரயாணத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும் இம்பீரியல் ஏர்வேஸின் புதிய விமானம் "கானபஸ்"

இந்திய வர்த்தமானம்

—

விவசாயிகள் கடன் பளு

இந்தியா சட்ட சபையில் விவசாயிகள் கடன் பளுவுக்கான காரணங்களைப்பற்றி விசாரிக்கவும் நிவர்த்தி முறைகளைப் பற்றி யோசனை கூறவும் உத்தியோகப் பற்றற்றவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கமிட்டி யொன்று நியமிக்கப்பட வேண்டுமென ஸ்ரீமான் நிர்மல சந்திர தத்தர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதன்பேரில் விவாதம் நடக்கையில் கடன் பளு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதென்றும், இந்திய விவசாயிகள் ஏழ்மையிலேயே பிறந்து வளர்ந்து அதிலேயே இறப்பதாக விருக்கிறதென்றும், இப்படிப்பட்ட கஷ்ட நிலைமையில் புஷ்டி உணவுப் பிரசாரமெல்லாம் பயன்படாதெனவும் அங்கத்தினர்கள் கூறினார்கள். இதில் வேண்டிய விசாரணை நடத்தியாகிவிட்டதென்றும், மாகாண கவர்ன்மெண்டுகள் வெற்றிகரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றனவென்றும் மாகாண சுயவாட்சி வரை பொறுத்திருக்கும்படியும் கவர்ன்மெண்ட் தரப்பில் கூறப்பட்டது. முடிவில் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. தீர்மானத்திற்கு 74 பேர்கள் சாதகமாகவும் 41 பேர்கள் பாதகமாகவும் ஓட்டுக் கொடுக்கவே அது நிறைவேறியது.

* * * *

யானைகள் அட்டஹாசம்

அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள தேஸ்பூர் என்னுமிடத்தில் தேகியாஜுலி என்ற பெயருள்ள தேயிலைத் தோட்டத்தில் ஒரு பெரிய யானைக் கூட்டம் புகுந்து அட்டஹாஸம் செய்து ஆறு பேர்களைக் கொன்றுவிட்டதாயும், ஜுலியா என்ற கூலி ஸ்திரீ தனது குழந்தையுடன் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கையில் அவர்களை மிதித்துக் கொன்றுவிட்டதாயும், ஒரு கூலியை துதிக்கையால் உயரத் தூக்கி ஒரு மரத்தில் மோதிக் கொன்றுவிட்டதாயும் செய்தி கிடைத்திருக்கிறது.

* * * *

ஓர் முஸ்லீமின் ரத்தவெறி

ஜபல்பூர், மாஜிஸ்திரேட் முன்பு சுகதேவி என்ற 17-வயதுள்ள ஒரு ஹிந்துப் பெண் குதுஸ் என்ற டில்லி முஸ்லீமின் மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறாள். அதில் அவள் தனக்கும் தன் குழந்தைக்கும் இழைக்கப்பட்ட கொடுமையைப்பற்றிப் பின்வருமாறு சாட்சியம் கொடுத்திருக்கிறாள்:—

நான் என்னுடைய ஒரு வயதுக் குழந்தையுடன் உஜ்ஜயினிக்குப் போவதற்காக ஜபல்பூர் ஸ்டேஷனில் காலை 10-30

1 & 2 மேலக்கோபுர வீதி
மதுரையில்
நரசுஸ்
சுத்தமான
காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை
தேயிலை
முதலியவைகளை விற்பனை செய்ய
12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.
உயர்ந்த சரக்கு! நயமான விலை!!
நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.
நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
மதுரை, பிராஞ்சு:
H. O. SALEM.
தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—

குமார சஞ்சீவினி
ரிஜிஸ்டர்ட்
குழந்தைகளின்
ஈரல்-குலை-ஜுரக்கட்டி
வியாதிகளுக்கு
நிகரற்ற குணமுடையது
வைத்தியர். அண்ணாமலை முதலியார்
வைத்தியர் அண்ணாமலை தெரு, மயிலாப்பூர், சென்னை

மணிக்கு ரயிலேறினேம். வண்டி ஸ்டேஷனை விட்டுப் புறப்படவிருந்த சமயத்தில் நான் தனியாக இருப்பதைப் பார்த்து எனது வண்டிக்குள் எதிரி ஏறினான். வண்டி வேகமாகப் போக ஆரம்பித்ததும் எதிரி கத்தியை எடுத்துக் காட்டி, தன் இச்சையைத் தீர்ப்பதற்கு உடன்படாவிட்டால் என்னைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினான்.

அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுக்க முயன்றேன். எதிரி என்னைத் தடுத்து எனது ஆட்சேபங்களையும் பொருட்படுத்தாமல் என்னைத் தாக்கிப் பலாத்காரமாகக் கற்பழித்தான். பிறகு எதிரி எனது நகைகளைக் கொடுத்து விடும்படிக் கேட்டான். நான் மறுக்கவே, எதிரி எனது காதணியைப் பறித்தான். அப்போது எனது காது அறுந்துபோயிற்று. நான் தடுக்க முயன்றதன்மேல் எதிரி ரத்த வெறி கொண்டு எனது மூக்கையும் நெற்றியையும், கரங்களையும் கடித்தான். பிறகு எதிரி குழந்தையை எடுத்து அதன் தொண்டையைக் கடித்து அதன் கண்மூடியில் ஒன்றை இழுத்து அதைப் பிய்த்துவிட்டுக் குழந்தையின் கன்னங்களையும் நெற்றியையும் கத்தியால் வெட்டினான். பிறகு நான் குழந்தையைப் பறித்து மடியில் வைத்துக் கொண்டேன். அவன் குழந்தையின் வயிற்றில் மூன்று முறை கடித்தான். பிறகு என்னை நையப் புடைத்தான். இதற்குள் ரயில் சுகோடியா ஸ்டேஷன் வந்து நின்றது. எதிரி பிளாட்பாரத்திற்கு எதிர் புறத்தில் குதித்து ஓடிவிட்டான். பலபிரயாணிகளும் போலீஸாரும் எதிரியைப் பிடித்தனர்.

* * * *

பிரஷ்ட உத்தரவுகள் ரத்து

இந்தியா கவர்ன்மெண்டார் இருவர் மீது விதித்திருந்த பிரஷ்ட உத்தரவுகளை ரத்து செய்திருக்கின்றனர்.

சென்ற இருபது வருஷ காலமாகத் தேசப் பிரஷ்டராக யுனைடெட் ஸ்டேட் ஸில் வசித்து வந்த ஸ்ரீமான் சைலேந்திரநாத் கோஸ் இப்பொழுது இந்தியாவுக்குத் திரும்புவதை அனுமதிக்க இந்திய சர்க்கார் தயாராயிருப்பதாக நியூயார்க்கிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர் அவருக்கு அறிவித்திருக்கிறார். ஸ்ரீமான் கோஸ், மீண்டும் புரட்சி நடவடிக்கைகளிலிறங்காது, சட்டவரையறைக்குட்பட்ட முறையில் நடந்து கொள்வாராயின், அவரது பழைய செயல்களுக்காக அவர் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படாதெனப் பிரிட்டிஷ் ஸ்தானீகர் உறுதி கூறியுள்ளார்.

1864-ம் வருஷத்து அந்நியர் தடைச் சட்டத்தின் 3-வது பிரிவுப்படி ஸ்ரீமான் மணிலால் கோத்தார் மீது பிறப்பித்திருந்த பிரஷ்ட உத்தரவைப் பம்பாய் சர்க்கார் ரத்து செய்துவிட்டனர். 1932-ம் வருஷத்தில் சட்ட மறுப்பு இயக்கம் நடந்தபோது இவர் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் வரக்கூடாதென இவ்வுத்தரவு மூலம் அவர் தடுக்கப்பட்டார்.

* * * *

ஹிந்து மதத்தைத் தழுவிய ஜெர்மன் ஸ்திரீ

எல்ஸ் மெட்கி என்ற ஜெர்மன் ஸ்திரீ ஹிந்து மதத்தைத் தழுவியிருக்கிறார். இது கல்கத்தா ஹிந்து மிஷன் மத்திய காரியாலயத்தில் நடைபெற்றது. உடனே அவர் ஸ்ரீமான் சத்தியேந்திர சந்திர குஹாவிற்கு ஹிந்து நியதிப்படி விவாகம் செய்துகொண்டார். ஹிந்து மதத்தில் சேர்ந்தவுடன் அவருக்கு லீலாதேவி என்ற பெயர் வைக்கப்பட்டது.

* * * *

ஆப்கானிஸ்தானத்தில் அமனுல்லாவின் முயற்சி

ஆப்கானிஸ்தானத்தில் இரான் (பாரசிக) எல்லைப்புறத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதாயும் மாஜி அரசர் அமானுல்லா தம்மால் முன்பு இழக்கப்பட்ட சிம்மாதனத்தைத் திரும்பக் கைப்பற்றுவதற்காகச் சண்டையை ஆரம்பித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது

* * * *

பூட்ஸ் துடைக்கும் பட்டதாரி

பின்கண்ட செய்தி லாகூரிலிருந்து கிடைத்திருக்கிறது:—

படித்த வேலையில்லாதவர்கள் சங்கக் காரியதரிசியான ஜனுப் அசப்ஜலி அலிம்கான் என்பவர் 'பி. ஏ' என்ற வார்த்தைகள் வரையப்பட்ட ஒரு முத்திரையைத் தம்மேல் அணிந்துகொண்டு லாகூர் அனார்க்காலி கடைத்தெருவில் ஒரு பிரபல செருப்புக்கடையில் பகிரங்கமாகப் பூட்ஸ் துடைத்துக்கொண்டு அதற்கு மெருகு கொடுத்துக்கொண்டிருக்கிறார். அவர் அவ்வேலையைச் செய்யப்போவதாகக் கொஞ்ச காலத்திற்கு முன் அறிக்கை விட்டிருந்தார். அவர் பூட்ஸ் துடைப்பதை வேடிக்கை பார்க்க ஏராளமான ஜனங்கள் கூடுகின்றனர். இதன் பயனாக வண்டிப் போக்குவரத்துக்கு அவர் தடை செய்வதாகச் சொல்லிப் போலீஸார் அவர் மீது வழக்குத் தொடுத்திருக்கின்றனர்.

* * * *

மழை பெய்ததால் மகிழ்ச்சி

பூனாவில் பல தினங்களாக மழை பெய்யாமல் சென்ற 19-ந் தேதி மழை பெய்ததால் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவிக்கப் பூனா நகர முனிஸிபல் சபைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் சோதனை

அலஹாபாத்திலுள்ள அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் காரியாலயத்தில் அன்னிய நாட்டுப் பிரிவைப் போலீஸ் டெபுடி சூபரிண்டு சில கான்ஸ்டேபிள்களுடனும் ரகசியப் போலீஸ் உத்தியோகஸ்தர்களுடனும் சென்ற 25-ந் தேதி மாலை ஒரு மணிக்குச் சோதனை போட்டார்.

அன்னியநாட்டுக் காரியாலயத்தில் பல காகிதங்கள் சோதனையின் பயனாகக் கைப்பற்றப்பட்டன. அன்னியநாட்டுப் பிரிவு வெளியீடுகள் சம்பந்தமாக இந்தச் சோதனை நடந்ததெனினும், இன்று வெளியான பிரசுரமும் இதற்கு முன் வெளியான பழைய பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன. அச்சுச் சட்டத்தின் கீழ் இந்தச் சோதனை நடந்தது.

சோதனை காலத்தில் பண்டித ஜவஹர்லால் நேருவும் இந்தப் பிரிவுக் காரியதரிசி ஸ்ரீமான் லோஹியாவும் கூட இருந்தனர்.

* * *

மணிக்கொடி

நான்கு மாதங்களாக வெளிவராமலிருந்த மாதமிருமுறை வெளிவரும் இச் சிறந்த சிறுகதைப் பத்திரிகையின் புதிய மலர் வரப்பெற்றோம். பல சிறுகதைகள் இதில் அடங்கியிருக்கின்றன.

நாட்டு நடப்பு — சித்திரக் கண்ணுடி



கூடலூரில் நடந்த டென்னிஸ் போட்டிப் பந்தயத்தில் டபிள்ஸில் ஜெயித்தவர்களும் (இடதுபக்கமிருந்து ஹனுமந்தராவ், ராமராவ்) அவர்களுடன் ஆடியவர்களும்.



மைசூர் மஹாராஜா பர்லினுக்கு விஜயம் செய்தார். அவருடன் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில் காணப்படுகிறார்.



பூனு தென்னிந்திய சங்க அங்கத்தினர்கள் சமீபத்தில் 'சுபத்ரார்ஜுனு'' என்ற நாடகத்தை நடித்தனர்.

சமீபத்தில் பிரெஞ்சுப் பிரதம மந்திரி ப்ளும் ஒலிபரப்பும் கருவி மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் அவர் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்ததல்லாமல் பிரான்ஸ் தனது சுதந்திரத்திற்காகப் போராடும் என்று குறிப்பிட்டார்.

எதிர்கால சோதிடம்.

ஒரு வருஷத்திற்கு வாரப் பலன் எழுத ரூ. 4. மாதவாரி பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட் பிரகாசர் சோதிடாலயம்.
(கு) புதுச்சேரி.

வெண் குஷ்டம், பெரு வியாதி :

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும் ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram
No, 32/5, P. O. Katrisarai (Gaya)

நரைமயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே **விவலேன்** எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனாம்

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பேனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பேனி. 260, சைனுபஜார் ரோட்,
ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பேனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.
செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பரேக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

வெளியாகி விட்டது! அற்புத நாவல்!!

பத்மராஜு

இனிய துப்பறியும் தமிழ் நாவல்

ஸ்ரீமதி பத்மாவனி எழுதியது.

இது ஒரு நவீனகம். இதில் புத்தி சாதுர்யமாய், அதிகச் சேட்டை விளைக்கும் கொடிய சூழ்ச்சிகளும், அதனுல் நிரபராதிகள் படுந்துயரமும், திடுக்கிடும் பல சம்பவங்களும், துப்பறிவோர் அதி சாமர்த்தியமும், பொதிந்து விளங்குகின்றன காதலர் சந்திப்பு. குதூகலம், உள்ளக் கிளர்ச்சி, சமயோசித வார்த்தையாடல் முதலியவை நன்கு அமையப் பெற்றிருக்கின்றன. பொறுமையால் வருங்கேடு இறுதியில் வெளியாகின்றது. இதைப்படிக்க ஆரம்பித்தால், படித்து முடித்தாலொழிய கீழே வைக்க மனம் வராது. எளிய நடை. இரண்டு கலர்களில் நவீன முறையில் கண்ணைக்கவரும் படத்துடன் அட்டை.

டிம்மி 286 பக்கங்கள் கொண்டது விலை ரூ. 1-8.

'மித்திரன்' ரெயில்வே புத்தகசாலைகளிலெல்லாம் கிடைக்கும்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட் ரோட், மதராஸ்.

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்............22-6-36௳ பம்பாயிலிருந்து எழுதுகிறுர்

"தங்கள் "திபேத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரண்

ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் அன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. **வியாபாரமும், தொழிலும்:**— நிச்சயமான தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. **வியாஜ்யங்கள்:**— இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. **வியாதிகள்:**— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0 5. **உத்தியோகம்:**—வேலையில்லாத திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0 6 **பரீக்ஷைகள்:**- எவ்வித் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0 7. **சத்ருக்களை ஜெயித்தல்:**—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0 8. **கிரஹ தோஷம்:**-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0 9. **ஆரோக்யமும், செல்வமும்:**— எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்து சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினுல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O. SALKIA HOWRAH.

மகாபாரதம்

சாந்தி பர்வம்

——

(மோக்ஷ தர்மம்)

சாஸ்திரங்கள்

"இந்திரியமில்லாதவர்களும் ஆகாரமில்லாதவர்களும் சலனமில்லாதவர்களும் எப்படி ஜனித்தார்கள்? அவர்களுடைய கதியானது எத்தகையது?" என்று யுதிஷ்டிரர் கேட்டார். அதற்குப் பீஷ்மர் பதில் சொன்னதாவது:—இது சம்பந்தமான ஒரு கதையை நாரதர் சந்தனுவுக்குச் சொன்னார். அதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இப்பொழுது அதையே நான் உனக்குச் சொல்லுகிறேன்.

முன்காலத்தில் உபரிசரனென்கிற அரசன் பூமியை ஆண்டுவந்தான். அவன் சூரியனுடைய முகத்திலிருந்து வெளிவந்ததான பாஞ்சராத்ர விதியை அனுசரித்துக்கொண்டு நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்துவந்தான். தர்மத்துடன் அரசுசெலுத்துகிறவனும் சத்ருக்களை வதைக்கின்றவனுமான அவன் பொய்யான வார்த்தையைச் சொன்னதில்லை. மனமும் தோஷமுள்ளதாகவில்லை. ஒரு அணுவளவுகூட பாபத்தைச் செய்யவில்லை. எல்லா ரிஷிகளும் பிராம்மணர்களும் நாராயணரை ஆராதித்து வந்தார்கள். இதனால் அவர் சந்தோஷப்பட்டு முனிவர்களை நோக்கி, "தர்மம் நடத்தற்குக் காரணமானவையும் பிரவிருத்தியிலும் நிவிருத்தியிலும் காரணமாகப் போகின்றவையும் ரிக், யஜுஸ்' ஸாமம், அதர்வணம் என்னும்



ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்துகொள்ள பர்லின் சென்றிருந்த ஹநுமான் வியாயம் மண்டல் கோஷ்டியினர் சென்னை வந்து சேர்ந்தபோது சிவாஜி வியாயம் மண்டல், மஹாராஷ்டிர மண்டல் ஆகிய சங்கங்கள் ஒரு உபசாரப்பு நடத்தின.

வேதங்களோடு கூடினவையும் உலகச் செய்கைகளனைத்துக்கும் ஹிதமும் உத்தமமுமான நூறாயிரம் ஸ்லோகங்கள் செய்யப்பட்டனவல்லவா? என்னுடைய அருளில் உண்டான பிரம்மாவும் கோபத்திலுண்டான ருத்ரரும் என்னால் பிரமாணமாகச் செய்யப்பட்டது போலவே பிரதான புருஷர்களான நீங்களும் பிரமாணம். எல்லாரும் பிரமாணமாயிருப்பது போல உத்தமமான சாஸ்திரமும் பிரமாணமாகும். இது என்னுடைய கட்டளை. பிரம்மாவின் புத்திரரான ஸ்வாயம்புவமனு தாமகவே அதிலிருந்தும் தர்மங்களை எடுத்துச் சொல்லுவார். சுக்ரரும் பிருஹஸ்பதியும் உண்டாகும்பொழுது அவர்கள் உங்களுடைய சாஸ்திரத்தைச் சொல்லுவார்கள். ஸ்வாயம்புவ மனுவினால் சொல்லப்பட்ட தர்மங்களும் சுக்கிரரால் செய்யப்பட்ட சாஸ்திரமும் பிருஹஸ்பதியின் மதமும் உலகங்களில் பரவும்பொழுது வஸுவென்கிற அரசன் உங்களால் செய்யப்பட்ட இந்த சாஸ்திரத்தைப் பிருஹஸ்பதியினிடமிருந்து அடைவான். அவன் என்னுடைய தியானத்தில் பற்றி நின்று என்னுடைய பக்தனுமாவான். அந்தச் சாஸ்திரத்தைக்கொண்டே உலகங்களில் எல்லாக் கிரியைகளையும்



தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ். B 6

செய்வான். அந்த அரசன் மரித்தகாலத்தில் ஸநாதனமான இந்தச்சாஸ்திரமானது முழுதும் மறைந்துவிடும் என்று சொன்னார்.

யுதஷ்டிரரின் வேண்டுகோளின்படி பீஷ்மர் மேலும் தர்மங்களைப்பற்றிச் சொன்னார். அவர் கூறியதாவது:—ஒரு சமயம் நாரதர் இந்திரனிடம் சென்றார். இந்திரன் அவரை வரவேற்று உபசரித்துத் தனக்கு ஏதாவது கதை சொல்லும்படி வேண்டிக்கொண்டான். நாரதரும் இந்திரனின் வேண்டுகோளுக்கிணங்கி பின்வருமாறு ஒரு கதையைச் சொன்னார்:—

ஒரு பிராம்மணனின் சந்தேகம்

கங்காநதியின் தென் கரையில் மஹாஸத்மீ என்கிற பட்டணத்தில் ஒரு பிராம்மணர் வசித்து வந்தார்.. அவர், "எந்தக் கர்மத்தைச் செய்தால் எனக்குச் சுபம் கிடைக்கும்? எது கர்ம ஸாத்தியம்? எது மேலான ஸ்தானம்? என்ற விஷயத்தைப்பற்றிப் பிரதி தினம் ஆராய்ச்சி செய்தும் யாதொரு நிச்சயத்தையும் அடையவில்லை. இவ்விதமிருக்கும் நாளில் ஒரு சமயம் அதிதி ஒருவர் அவர் வீட்டிற்கு வந்தார். அந்த அதிதியைப் பிராம்மணர் நன்கு உபசரித்து மோக்ஷ உபாயத்தைச் சொல்லும்படி கேட்டார். அதற்கு அதிதி கூறியதாவது:—நானும் இந்த விஷயத்தில் மயக்கமுடையவனாகத் தானிருக்கிறேன். சிலர் மோக்ஷத்தைச் சிலாகிக்கிறார்கள். சிலர் யாகத்தின் பயனைப் புகழ்கிறார்கள். சிலர் வானப் பிரஸ்தாஸ்ரமத்தையும், சிலர் கிருஹஸ்தாஸ்ரமத்தையும், சிலர் ராஜ தர்மத்தையும் அடுத்திருக்கின்றனர். சிலர் இகத்திலுள்ள தமது பயனை ஆஸ்ரயித்திருக்கின்றார்கள். சிலர் குருவின் பணிவிடை முதலிய தர்மங்களை அடைந்திருக்கின்றார்கள். சிலர் மௌனத்தை அடைந்திருக்கிறார்கள். சிலர் மாதா பிதாக்களுடைய சிஸ்ருஷையைச்செய்து ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். சிலர் அஹிம்ஸையினாலும், சிலர் ஸத்தியத்தினாலும், சிலர் யுத்தத்தில் கொல்லப்பட்டும் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். சிலர் உஞ்ச விருத்திகளாலே ஸித்தி பெற்று ஸ்வர்க்க மார்க்கத்தை அடுத்தார்கள். சிலர் வேதாத்தியயனத்திற்குரிய விரதங்களில் பற்றுள்ளவர்களும் வேதாத்தியயனத்தில் முயன்றவர்களுமாகி ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். இவற்றால் என் புத்தி கலக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இதையே பத்மன் என்பவனிடம் சென்று கேட்டால் பயனை அடையலாம்.

மிகுந்த தர்ம புத்தியுள்ள அந்த நாகன் கோமதி நதி தீரத்தில் நைமிசமென்கிற வனத்தில் பெரிதான நாகச் சுனை ஒன்றில் வசித்துவருகிறான். அவ்விடத்தில் தேவர்களால் முன்பு யாகம் செய்யப்பட்டது. பத்மனென்று பிரஸித்தி பெற்றவனும் கர்மம் உபாஸனம் ஞானம் என்கிற மூன்று விதமான மார்க்கத்திலும் நிலை பெற்றவனுமான அந்த மஹா நாகனிடம் சென்று உம்முடைய விருப்பத்தைத் தெரிவியும். அவன் தகுந்த தர்மத்தைச் சொல்லுவான்" என்று சொன்னார்.

நாகன் கதை

இவ்வாறு அதிதியிடமிருந்து கேட்ட பிராம்மணன் நாகன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றார். நாகனிருக்குமிடம் வந்து சேர்ந்து விசாரித்ததில் நாகனுடைய மனைவி தன் கணவன் சூர்யனுடைய ரதத்தை வகிப்பதற்காக ஒரு மாஸம் ஸஞ்சரிக்கப் போயிருக்கிறார் என்று சொல்லி அவனை உபசரித்தாள். வீட்டிலேயே இருந்து தங்களுடைய சிஸ்ருஷையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பிரார்த்தித்தாள். ஆனால் பிராம்மணர் நாகன் வருமளவும் கோமதி நதியிலுள்ள ஒரு மணல் திட்டில் வசித்து வருவதாயும் நாகன் வந்தவுடன் தன் வரவைத் தெரிவித்து நாகனைத் தன்னிடம் அனுப்பும்படியும் சொல்லிவிட்டுச் சென்றார்.

சில தினங்களில் நாகனும் திரும்பி வரவே அவனுடைய மனைவி பிராம்மணன் வரவைச் சொல்லிஅவரிடம் செல்லும்படி சொன்னாள். அதன்படியே நாகனும் பிராம்மணனிடம் சென்றான். இருவரும் முதலில்ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டனர். பிறகு பிராம்மணன் "ஒரே உருளையுடைய சூரியனுடைய ரதத்தைவஹிப்பதற்கு நீ போகிறாய். அவ்விடத்தில் நீ ஏதாவது ஆச்சரியமாகவுள்ளதைப் பார்த்திருந்தால் அதைச் சொல்ல வேண்டும்"என்று கேட்டான்.

அதற்கு நாகன் பின்வருமாறு பதில் சொன்னான்:—ஸூர்யன் அநேக ஆச்சரியங்களுக்கிருப்பிடம். அவரால் எல்லாப் பிராணிகளும் பிரவிருத்திக்கின்றன. அவரிடமிருந்து பெரிய வாயுவானது கிளம்பி அவருடைய கிரணங்களை ஆஸ்ரயித்துக்கொண்டு ஆகாயத்தில் விருத்தி யடைகின்றது. பிரஜைகளுடைய ஹிதத்தை விரும்பி அந்த வாயுவைப் பிரித்து வர்ஷா காலங்களில் ஜலத்தை வர்ஷிக்கிறார். அவருடைய மண்டலத்தின் மத்தியிலிருந்துகொண்டு அந்தர்யாமியானவர் பரமமான காந்தியினாலே ஜ்வலித்துக்கொண்டு உலகங்களைப் பார்க்கிறார். அவருக்குப் பாதம் போன்ற சுக்கிரனென்று பெயருடைய வெண்மையான கிரகமானது ஆகாயத்தில் மேகமாகி வர்ஷா காலங்களில் ஜலத்தை விடுகிறது. வர்ஷா காலத்தில் பொழிந்த ஜலத்தைத் திரும்பவும் வெண்மையான கிரணத்தால் எட்டு மாதங்கள் இழுக்கிறார். பூமியும் அவரிடமிருந்து சராசரங்களோடு கூட ஓஷதியைத் தரிக்கிறது.

இதல்லாத மற்றொரு ஆச்சரியமும் இருக்கிறது. முற்காலத்தில் மத்யாந்ந சமயத்தில் வேறொரு ஸூர்யன் போலப் பிரகாசிக்கிறவரான ஒருவர் காணப்பட்டார். அவர் ஆகாயத்தைப் பேதித்துக் கொண்டே சூர்ய மண்டலத்தில் பிரவேசித்தார். அவருடைய தேஜஸானது ஒன்றாகச் சேர்ந்துகொண்டு க்ஷணகாலத்தில் சூரியனாயிற்று. அவர்களுடைய தேஜஸ்ஸுகள் சேருகையில், "இவர்களுள் தேரிலிருந்த சூர்யன் யார்? வந்தவர் யார்?" என்ற சந்தேகம் எங்களுக்கு உண்டாயிற்று அதையும் நாங்கள் ஆதித்தியரிடம் கேட்டோம். அதற்கு சூரியன், "இவர் உஞ்சவிருத்தி விரதத்தில் ஸித்திபெற்ற முனிவர். இவர் ஸ்வர்க்கத்தை அடைந்தார். ஸ்வர்க்கமார்க்கத்தில் முயற்சி செய்த இவர் ஸ்வர்க்கத்தை அடைவதற்குக்காரணரான ஈஸ்வரரை வேதத்தின் ஸம்ஹிதைகளால் துதித்தார். இவர் ஆசையற்றவரும் எந்நாளும் பிராணிகளின் ஹிதத்தில் முயற்சியுள்ளவருமானவர். இப்படிப்பட்டவர்கள் அடைந்த உத்தம கதியை அடைய வேறு யாவரும் சமர்த்தரார்," என்று சொன்னார். ஓ பிராம்மணரே! அந்த மனுஷ்யர் ஸூர்யனோடு சேர்ந்து கொண்டு பூமியைச் சுற்றிவருகிறார்.

இவ்வாறு நாகன் சொல்லியதைக் கேட்ட பிராம்மணர் உஞ்சவிருத்தி விரதத்தை மேற்கொள்ள முடிவு செய்து ச்யவன மஹரிஷியை அடுத்து அவரால் தர்மோபதேசம்செய்யப்பட்டுத் தர்மத்திலேயே நிலைத்திருந்தார். நாரதர் இந்திரனுக்குச் சொன்ன இக்கதையையும் பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் சொன்னார்.

(சாந்திபர்வம் முற்றிற்று.)

(தொடரும்.)

தென்னிந்திய பிரமுகர்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் ஆரம்பித்தனர். இந்த பாங்கியின் ஸ்தாபன விஷயமாக, மிகுந்த உதவி புரிந்தவர் ஸ்ரீமான் வி. ராமசாமி செட்டியார். பாங்கியின் ஸ்தாபனத்தைப்பற்றி ஆலோசித்து வந்தகாலத்திலிருந்தே இவர் அதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தார். இந்தியன் பாங்கியின் ஆரம்பகாலத்தில் அளவிடமுடியாத உதவி புரிந்தவர்களுள் நாம் இவரையும், வி. கிருஷ்ணஸ்வாமி அய்யருடனும் திவான்பஹதூர் ஆதி நாராயணையாவுடனும், ஸ்ரீமான் வித்யாசாகர பாண்டியாவுடனும் பிரதானமாகக் குறிப்பிட வேண்டும். இவர் இப்பாங்கி விஷயமாக சம்பந்தப்பட்டு வந்ததனால், இவரது வகுப்பினர்கள் யாவரும் இப்பாங்கிக்கு விசேஷ ஆதரவு அளித்தனர். இந்த நாட்டுக்கோட்டை செட்டியார்களுடைய ஒத்துழைப்பு இப்பாங்கிக்குக் கிடைத்திராவிட்டால் இப்பாங்கி தற்போதைய ஸ்திதிக்கு எட்டுவது துர்லபமாக விருந்திருக்கும். இவர் பாங்கியின் முதல் டைரக்டர்களுள் ஒருவராகவும் சிலகாலம் இருந்தார்.

"திவான் பஹதூர்" பட்டம்

இவருடைய ஊழியத்தையும் தர்ம சிந்தனையையும் உத்தேசித்து 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் டில்லி தர்பார் விழாக்காலத்தில் இவருக்கு அரசாங்கத்தார் "திவான் பஹதூர்" பட்டத்தை அளித்துப் பாராட்டினர்.

சிதம்பரம், கரூர் முதலிய இடங்களிலிருக்கும் தேவாலய நிர்வாகக்கமிட்டிகளில் திவான்பஹதூர் செட்டியார் இருந்து உழைத்தார். அநேகம் நல்ல சீர் திருத்தங்களையும் இவர் அமுலுக்குக் கொண்டு வந்தார். பல வருஷங்களுக்கு முன்பு இந்தியா கவர்ன்மெண்டார், ஸர் ஹார்கோர்ட் பட்லர் தலைமையில் ஹிந்துமத ஸ்தாபனங்கள் சட்டத்தில் சில திருத்தங்களை அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி ஆலோசிக்க ஒரு ஸ்பெஷல் கமிட்டியை நிறுவினர். இந்த கமிட்டி முன்பு சாக்ஷியஞ் சொல்வதற்காக,இவரைக் கவர்ன்மெண்டார் டில்லிக்கு அனுப்பினர். இவரது சாக்ஷியம் வெகுவாகப் பாராட்டப் பட்டது.

திவான்பஹதூர் ராமசாமி செட்டியார் 1918-ம் வருஷம் அக்டோபர் மாதக் கடைசி தினத்தன்று, சென்னையில் தமது 49-வது பிராயத்தில் சிவலோகப்ராப்தியடைந்தார். இவரது அகால மரணத்தினால் தென்னிந்தியாவும், நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகமும் ஒரு சிறந்த புருஷரை இழந்தன! இப்பெரியார் இன்னும் சிலகாலம் ஜீவித்திருந்தால் நமக்கு நன்மை அதிகரித்திருக்கும் என்பது நிச்சயம்!

தமிழ்நாட்டில்
குறைந்த சந்தா மாதப்பத்திரிகை
"சித்தன்"
ஒன்றே. கட்டுரைகள், கதைகள், ஹாஸ்யம், உலக விநோதம, வைத்தியக்குறிப்பு. சினிமா விமர்சனம், முதலியனகொண்டது. மாதிரிப்பிரதி இனம். 3000 பிரதிகள் வெளியாகின்றன. விளம்பர விகிதம் குறைவு.
சந்தாஉள்நாடுஅணா8. வெளிநாடுரு.1.
மானேஜர், சித்தன், பழனி.

[illegible] தொடர் கதை

ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)

முன் கதைச் சுருக்கம்.

தவமணி, சக்ரபாணி முதலியாரின் குமாரன். முதலியார் இறக்குந்தருவாயில் தம் நண்பர் வேலாயுத முதலியாரிடம் தவமணியையும் தமது திரண்ட சொத்துக்களையும் ஒப்புவித்தார். பிற்காலத்தில் வேலாயுத முதலியார் சொத்துக்களை எடுத்துக்கொண்டு தவமணியை வீட்டை விட்டுச் செல்லும்படிச் செய்துவிட்டார். ஒரு கனவான் ஒரு நாள் தவமணியை மிகவும் கஷ்ட நிலைமையில் கண்டு அவனைப் பராமரித்து வருகிறார்.

ஜம்புலிங்கம் என்பவன் பல கொள்ளைகள் நடத்தி வருகிறான். அவனைப் பிடிப்பது சம்பந்தமாகப் போலீஸ் டேபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் இன்ஸ்பெக்டர் சொக்கலிங்கம் பிள்ளையும் யோசிக்கின்றனர். ஆனால் தன் விஷயங்களில் பிரவேசிக்கவேண்டாமென்று ஜம்புலிங்கம் ஒரு கடிதம் எழுதுகிறான். வேலாயுத முதலியார் தமக்கு ராவ்பகதூர் பட்டம் கிடைத்ததற்காக ஒரு விருந்து நடத்துகிறார். அதற்கு ஜம்புலிங்கம் ஜாலவித்தை காட்டுபவனாகச் சென்று வேலாயுத முதலியார் மனைவியின் ஏராளமான பெறுமானமுடைய நகைகளைத் துப்பாக்கி முனையில் எடுத்துச் செல்லுகிறான்.

ஜம்புலிங்கத்தைக் கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கிய இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணசாமி நாயுடுவும் ராமலிங்கும் அவனிடமே சிக்குகின்றனர். போலீஸ் கமிஷனரின் ஏற்பாட்டின்படி வெளியூரிலிருந்த போலீஸ் அதிகாரியான துரைராஜ் என்பவர் ஜம்புலிங்கத்தைப் பிடிக்க நியமிக்கப்படுகிறார். இவரும் ஜம்புலிங்கத்தினிடம் சிக்கிக்கொள்கிறார். போலீஸ் ஆபீஸிற்கு ஒரு பீரோ வருகிறது. அதில் துரைராஜ் அனுப்பப்படுகிறார்.

ஜெயலக்ஷ்மி உயர் குலத்தில் பிறந்து நடிப்புத் தொழிலில் இறங்கியிருக்கிறாள். ஜெயங்கொண்ட சோழபுரம் உலகநாதம் பிள்ளை இவளை விவாகம் செய்துகொள்ளப்போகிறார்.

XI

ராவ்பஹதூர் வேலாயுத முதலியார், சோமவிலாஸத்தில், தன்னுடைய அறையிலுட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவரது முகம் மிகவும் கவலையையடைந்திருப்பதாகக் காணப்படுகிறது. ஒரு கையில் மூன்றுநாட்களுக்கு முன் ஜம்புலிங்கத்தினிடமிருந்து வந்த கடிதத்தையும், இன்னொரு கையில் ஒரு சிறிய திறவுகோலையும் வைத்துக் கொண்டு, அடிக்கடி எழுந்து அறையைச்சுற்றி உலாவுவதும் உட்கார்ந்து பெருமூச்செறிவதுமாயிருந்ததானது, அவரது மனம் சொல்லொணு வேதனையையடைந்து கொண்டிருந்ததென்று தெரிகிறது. ஜம்புலிங்கம் அவருக்கு, தவமணிக்கு நியாயமாகச் சேரவேண்டிய தொகையை எழுதி அப்பணத்தைத் தயாராய் வைத்திருக்கும்படிக்கும், தான் மறுநாள் மூன்று மணிக்குத்தவருமல் வந்து பெற்றுக்கொண்டு போவதாயும் எழுதியிருந்தான். ஜம்புலிங்கத்தின் சாமர்த்தியத்தை நன்கு அறிந்தவராகையால், தான் எவ்வளவு காவலுக்குள்ளிருந்தாலும் அடித்துக் கொண்டு போய்விடுவானென்று தெரியுமாகையால், என்ன செய்வதென்று தவித்தார். பாங்கியில் முன்னமே கட்டியிருந்திருக்கலாமென்றாலோ, தனக்கு அவ்வளவு தொகை எப்படிவந்ததென்று கேட்டால் என்ன சமாதானம் சொல்வது என்றெண்ணி, அந்த யோசனையைவிட்டுவிட்டார். வெகு நேரம் யோசனை செய்ததின் பேரில் ஒரு யுக்தி தோன்றியது. மதராஸ் பாங்கியில், கஜானு அறையில் அவரவர்களுடைய நகைகள் நிலம் புலம் சம்பந்தமான பத்திரங்கள் முதலிய விலையுயர்ந்த சாமான்களைப் பத்திரமாய் வைத்துக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகச் சிறு சிறு எஃகுப்பெட்டிகள் தயார் செய்து, அவைகளை வேண்டுபவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து வந்தார்கள். இவர்கள் சாமான்களை உள்ளே வைக்க வேண்டுமானுலும் சரி, வெளியே எடுக்கவேண்டுமானுலும் சரி, பாங்கிற்குச் சென்று தங்கள் பெட்டியின் நம்பரைச் சொன்னுல், பாங்கியின் வேலையாள் கூடவே வந்து கஜானு அறையைத் திறந்து விட்டு, இவர்களது வேலை முடியும் வரை காத்திருந்து, அறையைப்பூட்டிக்கொண்டு செல்வார். ஆகையால் தானும் ஒரு பெட்டியை வாடகைக்குப் பிடித்துக்கொண்டு அதில் பணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. உடனே பாங்கிற்குச் சென்று, மானேஜரைக் கண்டு, ஒரு பெட்டியை வாடகைக்கு ஏற்பாடு செய்துகொண்டு, அதில் ரொக்கம், முக்கியமான தஸ்தாவேஜு முதலியவைகளையும், தன்னிடமிருந்த மீதிநகைகளையும் வைத்துப் பூட்டியபின்பு தான் சற்று நிம்மதியடைந்தார். அந்த நிம்மதியும் அதிக நாட்கள் நிலைத்திருக்க முடியவில்லை. ஜம்புலிங்கம், மதராஸ் பாங்கியைக் கொள்ளையிடப் போகிறுனும் என்பதைக் கேட்டவுடனே, முதலியாரைப் பழய கவலை வட்டியும் முதலுமாய்ச் சேர்ந்து வருத்தத் தலைப்பட்டது. தவமணிக்குச் சேரவேண்டியதுடன் நில்லாமல், தன்னுடைய சொந்த ஆஸ்தியும் சேர்ந்து போய்விடுமே என்று பதறினுர். உடனே போய் அவைகளை எடுத்துக் கொண்டு வந்து அன்றைய இராப்பொழுதைக் கழித்து, மறுநாள் கொண்டுபோய்வைத்துக் கொள்ளலாம் என்றாலோ அதற்கும் ஒரு தடையிருப்பதாய் எண்ணினுர். தான் பாங்கியில் கொண்டுபோய் வைத்திருப்பதை ஜம்புலிங்கம் அறிந்துகொண்டு, பாங்கியைக் கொள்ளையிடப் போவதாகச் சொன்னுல், தான் பயந்து தன்னிடத்திற்கு அவைகளை எடுத்து வந்துவிடுவானென்றும் அப்பொழுது சுலபமாய் கொள்ளையடித்துக்கொண்டுபோய் விடலாம் என்றும் எண்ணியே, தான் மதராஸ் பாங்கியைக் கொள்ளையிடப் போவதாய்ப் பகிரங்கப்படுத்தியிருக்கலாமோவென்று

சந்தேகித்தார். ஒருவிதமாகவும் நிச்சயப்படுத்தக்கூடாமல், கடலினலையிலகப்பட்டதுரும்பு போல மனம் உழன்று, கடைசியாக கமிஷனரின் ஆபீசுக்கு டெலிபோன் செய்தார். அங்குள்ளவர்களால், பாங்கியைப் பந்தோபஸ்தாகக் காக்க எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்ட பின்தான், மனதில், கால் பங்கு சமாதானம் ஏற்பட்டது. எப்படியிருந்த போதிலும், தானும் பாங்கியின் பக்கமாய்ப் போய், பத்தரைமணி வரையிலிருந்து நேரில் பார்த்து வந்தால்தான் மனம் ஆறுதலையடையும் என்று நிச்சயித்துக்கொண்டு, ஆகாரம் செய்து கொள்ளச் சென்றார். அப்போதிருந்த நிலைமையில் ஆகாரமே செல்லவில்லை. சாப்பிட்டதாய்ப் பேர் செய்துவிட்டு, தன்னுடைய மோட்டாரிலேறிக் கொண்டு, பாங்கியை நோக்கிப் புறப்பட்டார்.

வண்ணாரப்பேட்டை சோமவிலாசத்தை விட்டுப் புறப்பட்ட வேலாயுத முதலியார், நேராய் வடக்குப் பீச் ரோட்டை யடைந்து, திரும்பியதும் அங்கிருந்த காக்ஷியைக் கண்டு பிரமித்துவிட்டார். இந்தியன் பாங்கியிலிருந்தே ஜனக்கூட்டம் ஆரம்பித்துவிட்டது. மோட்டாரை ஓட்டுபவன் எவ்வளவோ சாமர்த்தியமாய் மோட்டாரைக் கூட்டத்தில் மெதுவாக அப்படியும் இப்படியும் திருப்பித் திருப்பி ஓட்டிப் பார்த்தும் கொஞ்சதூரத்திற்கு மேல் செல்ல முடியவில்லை. கூட்டம் அவ்வளவு அதிகமாயிருந்தது. வேலாயுத முதலியார் மோட்டாரை விட்டிறங்கி மெள்ள கூட்டத்தில் புகுந்து, மதராஸ் பாங்கியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். இப்படியாக, பாங்கியை நூறடி தூரத்தில் நெருங்குவதற்குப் பதினைந்து நிமிஷங்களுக்கு மேலாய்விட்டது. அதற்கு மேல் ஒருவரையும் செல்லவொட்டாமல் ஆயுதந்தாங்கிய போலீஸார், குறுக்கே நின்று வழியை மறித்துக்கொண்டிருந்தார்கள். அப்பக்கமாய்ச் சுற்றிக்கொண்டு சென்று உள்ளே நுழைந்துவிடலாம் என்று ஒரு பக்கமாய்ச் சென்றார். அப்பக்கத்திலும் போலீஸார் நின்றுகொண்டிருந்தார்கள். ஆகவே எப்பக்கத்திலும் போலீஸார் பாங்கியைச் சுற்றி வளைந்து கொண்டிருந்ததைக் காண, தான் உள்ளே நுழைவதற்கில்லையே யென்ற வருத்தம் ஒருபக்கம் ஏற்பட்டாலும், தன்னுடைமையை அவர்கள் அவ்வளவு ஜாக்கிரதையாய்க் காப்பதைப்பற்றி சந்தோஷமே மேம்பட்டிருந்தது. முதலியார் தான் முன்பு நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்தே பாங்கியின் வாயில் நன்றாய்த் தெரிந்ததாகையால், முட்டி மோதிக்கொண்டு அந்தயிடத்திற்கே வந்தார். இத்தனை போலீஸார் காவல்புரிவதைப் பார்த்தும். மணி ஆக ஆக, முதலியாரின் மனத்திலும் படபடப்பு அதிகரித்துக்கொண்டே வந்தது. கூட்டத்தையும், பாங்கியின் வாயிலையும் மாறிமாறிப் பார்த்த வண்ணமாகவிருந்தார்.

இப்படியிருக்கையில் ஒரு மோட்டார் வண்டி, மிகவும மெதுவாய் கூட்டத்திற்குள் நுழைந்து நுழைந்து, கடைசியாய்க் குறுக்கே நிற்கும் போலீஸாரை யணுகியதும் நின்றது. அதிலிருந்து இரண்டு சேவகர்கள் முதலில் இறங்கினார்கள். அவர்களில் ஒருவன் மோட்டாரின் கதவைத் திறந்து பிடித்துக்கொண்டான். அதினின்றும் போலீஸ் கமிஷனர் கீழே யிறங்கினார். இதைக் கண்டதும், பாங்கியின் வாயிலில் நின்றுகொண்டிருந்த இன்ஸ்பெக்டர் டிப்பி, ஓட்டோட்டமாய் வந்து கமிஷனருக்கு சலாம் செய்து நின்றார். இன்ஸ்பெக்டர் டிப்பியும் கமிஷனரும் பாங்கியின் வாயிலை நோக்கி நடந்தார்கள். இன்ஸ்பெக்டர், அதுவரை தான் அங்கு வந்து செய்த ஏற்பாட்டைக் கமிஷனரிடம் ஒன்றையும் விடாது கூறிக்கொண்டிருந்தார். அதுசமயம் மூன்று லாரிகளில் சாதாரண உடையணிந்த போலீஸார் வந்திறங்கி, ஆயுதந்தாங்கிய போலீஸாரைக் கடந்து உட்புறமாக வரிசையாக நின்றுகொண்டார்கள். இவர்கள் வந்ததைக் கண்ட கமிஷனர் இன்ஸ்பெக்டரிடம் ஏதோ சொன்னார். அவர் இவர்கள் நின்றிருநத யிடத்திற்கு வந்து, எல்லோரும் ஆயுதத்துடன் வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அவர்கள் தங்கள் தங்கள் ஜேபியிலிருந்த ரிவால்வரைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே 'ஆம்' என்று தலையை யசைத்தார்கள்.

இன்ஸ்:—சரி; நீங்கள் இப்படியே கட்டிடத்தை வளைந்து நின்றுகொள்ளுங்கள். யாரானும் அன்னியர்கள் உள்ளிருந்தாவது வெளியிலிருந்தாவது உங்களைத் தாண்டிச் செல்ல முயல்வார்களானல் சுட்டுத தள்ளிவிடப் பின்வாங்க வேண்டாம். ஜாக்கிரதை உம்! வளைந்துகொள்ளுங்கள்.

ஆயுதந் தாங்கிய போலீஸாருக்கும், கட்டிடத்திற்கும் இடையே இவர்கள் ஒரு சிறிய வளையமாய்க் கட்டிடத்தை வளைந்துகொண்டார்கள். இன்ஸ்பெக்டர் இவர்கள் நிற்பதை ஒழுங்கு பார்த்துவிட்டு கமிஷனரை யணுகினார். இருவரும் பாங்கியின் பின்புறம் எப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்பதைக் காணச் சென்றார்கள். அங்கும் முன்பக்கத்தைப் போலவே போலீஸார் அணிவகுத்து நிறுத்தப்பட்டு, மிகவும் முடுக்காய் காவலிருப்பதைக் கண்டு திருப்தியடைந்தார். அதைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே முன் பக்கத்திற்கு வந்தார்கள். இரண்டொரு நிமிடங்களுக்கெல்லாம் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் மூன்று கனவான்களும் கமிஷனரை யணுகினார்கள். சப் இன்ஸ்பெக்டர் கமிஷனருக்கு சலாம் செய்து நின்றார். அம்மூவரும் கமிஷனருக்கு வந்தனம் செய்தார்கள். கமிஷனரும் அவர்களுக்குப் பதில் வந்தனம் செய்துகொண்டே அவர்களை நோக்கினார். அவர்கள் மிகவும் சமீபித்ததும் அவர்களை இன்னாரென்று அறிந்துகொண்டார். அம் மூவரில் உயரமாயும் ஒல்லியாயும் இருந்தவர்தான் அப் பாங்கியின் மானேஜிங் டைரக்டர். சற்று தட்டையாயும், பருமனுயுமிருந்தவர் பாங்கியின் கஜான்ஜி. இன்னொருவர் பாங்கியின் மானேஜர். கமிஷனர், "வாருங்கள், வாருங்கள்" என்று அவர்களை வரவேற்றார்.

டைரக்டர்:— அப்பப்பா! என்ன கூட்டம்! என்ன கூட்டம்! தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வீண் மிரட்டல் தானே அல்லவா?

கமி:—எப்படிச் சொல்வது? —உம்?— எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை. எப்படியும் இன்று—

டைரக்டர்:—என்ன! இவ்வளவு கட்டுக் காவல்களைக் கடந்தா! ஒரு ஈ நுழைவதென்றால்கூட முடியாதுபோலிருக்கிறதே! இத்தனையையும் கடந்தா?—

கமி:—ஆம். அதுதானே விசேஷம். அந்தப் பயலை அப்படிச் சாதாரணமாய் எண்ணிவிடுவதற்கில்லையே! அவன் விஷயத்தில், இப்படித்தான் வருவான். இன்னமாதிரியாகத்தான் செய்வான் என்று ஊகிக்க முடிவதில்லை. அதுதான் பெரிய சங்கடம். நாம் ஒன்றை நினைத்துக்கொண்டிருப்போம். அவன் வேறொன்றைச் செய்துவிடுவான். இருந்தாலும், இன்றையதினம் கூடியவரை முன் எச்சரிக்கையாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தனை காவல்களையும் மீறி, உள்நுழை

(38-ம் பக்கம் பார்க்க)



கஜானு அறையினுள் வாடகைக்குக் கொடுக்கப்பட்ட பெட்டிகளில் ஒன்று உடைக்கப்பட்டுக் காலியாய்க் கிடந்தது. சேவகர்கள் ஒரு பக்கம் மயங்கிக் கிடந்தார்கள்.

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனும்!
எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

நோயற்ற வாழ்வு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு பலர் பாலையும் உட்கொள்ளலாம். ஆனால் ஜீரண சக்தி குறைவாயிருக்கையில் அதில் சிறிது எலுமிச்சம் பழ ரஸம் கலநது, கட்டியாகியதும், வடிகட்டி, அந்த நீரை வேண்டியவளவு பருகலாம்.

ஔஷதங்கள்

மதுமேஹிகளிற் சிலர் சிகித்ஸைகளால் முழு குணமும் அடையாமற் போயினும். வியாதி வலுக்காமலும் சீக்கிரத்திற சரீர தாதுகளுக்குச் சிதைவு நேரிடாமலும், ஆகவே ஆயுளுககு அதனால் அதிவிரைவில் அபாயம் ஸம்பவிக்காமலும் செய்ய அனுகூலமான சிகித்ஸைகள் இல்லாமற் போகவில்லை. வியாதி அபாயநிலைமைக்கு வந்துவிட்டதாகக் கருதியநபர்கள்கூடச் சிலசிகித்ஸா விசேஷங்களால் குணமடைந்திருக்கிறார்கள். மேனாட்டு முறையில் டாக்டர் பாண்டிங் என்பவர் கண்டுபிடித்த இன்ஸுலின் என்னும் எருதின் கிலோமாவிலிருந்து (பாங்க்ரியாடிக் க்ளாண்ட்) எடுத்து ஒரு திரவஸத்தை மதுமேஹிகளின் உடலிற் குத்திச் செலுத்தினால், வியாதி தீருவதாக அம்முறையைக் கையாளுபவரிற் பலரது கொள்கை. ஆனால் அது அநேகமாய் தத்கால சாந்தியான ஓர் சரக்கேயன்றி, அதனால் வியாதி நிவாரணமாவதில்லையென்று அம்மேனாட்டுவைத்தியப் பிரமுகர்களிலேயே பலர் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். அபினியும், நாவற்கொட்டை அல்லது பட்டையும் இப்பிணியாளருக்குத் தொடர்ந்தும், முறைப்படியும் கொடுக்கப்பட்டு வந்தால் வெகு திருப்திகரமான பலன் தருவதாகக் கீழ் நாட்டு வைத்திய முறையிலும் மேனாட்டு வைத்திய முறையிலும் ஒரே சீரான அபிப்பிராயமுண்டு.

(1) முதிர்ந்த நாவல் மரத்தின் உட்பட்டையைச் சீவிக்கொண்டு வந்து, உலர்த்தி இடித்துச் சூர்ணம் செய்து வைத்துக் கொள்ளவும். அச்சூர்ணத்தில் ஒரு பல மளவு அரைப்படி ஜலத்தில் இரவில் போட்டு மூடிவைத்து, அதை மறுநாட் காலையில் கொதிக்க வைத்து நாலில் ஒரு பங்காகச் சுண்டிய பின் வடிகட்டிக் கொள்ளவும். அதில் இரண்டொரு குன்றுமணியெடை அபினியைக் கரைத்து உட்கொள்ள வேண்டும். மதுமேஹத்தின் ஆரம்பத்தில் இக்கஷாயத்தைத் தொடர்ந்து, தினத்துக்கு இரு முறையாக ஒரு மண்டலம் உட்கொண்டுவந்தால், நீரில் சர்க்கரை வருவது நிவாரணமாவதாகத் தெரிகிறது.

(2) த்ரிபலாக்வாதம் (நெல்லிக்காய் 4-பங்கு, தான்றிக்காய் 2-பங்கு,கடுக்காய் 1பங்கு வீதம் கூட்டி இடித்துச் செய்யும் கஷாயம்) பிரமேஹத்திற் சிறந்த மருந்தென்றும், அத்துடன் சிலாஜது பஸ்பம் கலந்து உபயோகிப்பதால், பிரமேஹம் நீடித்ததாயிருந்தாலும் தீருமென்றும் சிலாஜது, அஹிபேநம் என்கிற அபினி இரண்டும் சேர்த்துப் பிரயோகிப்பதால் மதுமேஹமும் தீருமென்றுங் கூறப் பிரமாணங்கள் உண்டு.

(3) தசமூலங்களைச் சேர்த்துச் செய்யப்படும் கஷாயத்தையாவது, அரிஷ்டத்தையாவது நாலைந்து குன்றுமணியெடை சதபுடாப்ரக பஸ்மத்துடன் தினத்துக்கு இரண்டு மூன்று முறையாக உட்கொண்டு வந்தால் காலக்கிரமத்தில் நீரில் சர்க்கரை குறைந்து, நாவறட்சி முதலிய துர்க்குணங்களும் தணிவதாகச்சாஸ்திரத்தினால் மாத்திரமல்ல, அனுபவத்தினாலும் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

(4) இவ்வனைத்தையும்விட சிலாஜது பஸ்மம், அப்ரக பஸ்மம், ஜம்புபீஜம் (நாவற்கொட்டை), அபினி ஆகிய சரக்குகளை வகைக்கு இரண்டு அல்லது மூன்றுகுன்றுமணியெடை வீதம் கலந்து நெய்யிற் குழைத்துத் தினத்திற்கு இரண்டு மூன்று முறையாக உட்கொள்வது பலமான மேஹத்திலும் அதிகப் பலன் தரக்கூடியது. முற்கூறிய இச்சரக்குகளையும் நியக்ரோதிகணச்சரக்குகளையும்சேர்த்துத் தயார் செய்த "மது-தமநம்" என்னும் மாத்திரை மதுமேஹத்திற்கேற்ற மருந்தாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது. மதுமேஹமுள்ளவாது ஸந்ததியிற் பிறந்தவருக்கு இவ்வியாதி கண்டால், அது அநேகமாய் அஸாத்யமாகவே ஆய்விடுகிறது. எது எவ்விதமிருப்பினும் வியாதி ஏற்பட்டபிறகு முற்கூறிய ஔஷத முறைகளையும், பத்தியக் கிரமங்களையும் உபயோகித்து வந்தால் வியாதியினால் தொந்தரவுகளிலிருந்து பெரிதும் நிவ்ருத்தியாகாவிட்டாலும்,அநேகவகையில் வியாதிக்குத் தணிவு ஏற்படுமென்பது மாத்திரம் நிச்சயம்.

ரூ. 500 இனாம்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானால்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம் 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

தோலைச் சுத்தமாக்கும் விநோதமான சோப்புக் கட்டி.



உன்னுடையவுடம்பின்தோலை குடிகூரா சோப்புக்கட்டியால் (Cuticura Soap) தினந்தோறும் கழுவவும். அதன் வாசனையுள்ள நுரை ரோமத் துவாரங்களை அழுக்ககற்றி சுத்தி செய்து தோலை மிருதுவாக்கி உல்லாசமுண்டு பண்ணுகிறது. சில நாளைக்குள் உன்னுடைய உடம்பின் தோல் நன்மை அடைகிறதைப் பார்ப்பாய். நீ கரப்பான், பருவுகள் முதலிய தோல் வியாதிகளால் சங்கடப்பட்டால், புண்ணிருக்கிற இடங்களில் குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவவேண்டும். படை, சொரி முதலியவைகள், குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகித்தால், சீக்கிரம் மறைந்துபோய், தோல் மிருதுவாகவும் அழகாகவுமாகும்.

உலகமுழுதலும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் தங்களுடைய உடம்பின் தோலை தெளிவாகவும், சுகமாகவும் வைத்துக் கொள்வதற்காக வருஷமுழுதலும் எல்லாக் காலங்களிலும் குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) உபயோகிக்கிறார்கள்.

குடிகூரா சோப்புக்கட்டி
CUTICURA SOAP

குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) இன்றைக்கே வாங்கு. எல்லா மருந்துகடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.

ஸ்தாபிதம் 1913

சவரன் மாத்து தங்கத்துக்கும், அசல் வெள்ளி சாமான்களுக்கும், மேன்மையான வேலைப்பாட்டுக்கும் உத்திரவாதமுள்ள இடம்.

கரம்சந்த் சபில்தாஸ் & ஸன்

நகை வியாபாரிகள்

175, சைனாபஜார் ரோட் — மதராஸ்.

காட்லாக்குக்கு எழுதவும்.

"உங்கள் வருங்கால அதிர்ஷ்டம்"

பண்டிட் M. R K மூர்த்தி, ஜோதிஷ கலா வல்லபர்

பண்டிட் E. S. K. சுவாமி ஜோதிஷ தத்வ ஞ்யானீ

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 1, ஜாதகத்தின் பேரில் கேள்வி 1-க்கு ரூ. 1, ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 2, நேரில் ஜாதகம் பார்க்க ரூ. 5, ஆயுள் வரை பொதுப் பலன் எழுத ரூ. 10.

"ஜோதிட கழகம்' 14', பிராட்வே, மதராஸ்.

கைரேகை மர்மங்கள்

(சக்திதாஸன் எழுதியது.)

[காப்பிரைட்.]

''சக்திதாச''ஹை மித்திரன் வாசகர்கள் நன்கு அறிவர். சில வருஷங்களுக்கு முன் நமது மித்திரன் வாரப்பதிப்பில் ரேகை சாஸ்திர ஆராய்ச்சியென எழுதி வந்தது ஞாபகமிருக்கலாம். இப்பொழுது அனுடவபாய் ரேகை சாஸ்திரத்தை வாசகர் எளிதில் தெரிந்துகொள்ளும் வண்ணம் புது முறையில் அவர் எழுதிவருவார். இவ்வாரத்தில் சில பூர்வாங்கமான விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.



இரண்டு ஆப்த நண்பர்கள்

உங்கள் இரண்டு ஆப்த நண்பர்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமிராது. இவர்கள் யாவரிலும் சிறந்து, பழமையும் நம்பிக்கையுமுடையவர்கள். உங்கள் வாழ்வில் முதன்மையாய் நின்று உடனிருந்து உதவிபுரிபவர்கள். இவர்கள் உங்கள் கரங்களேயாகும்.

இரு கரங்களிலும் மர்மமான பாஷையொன்று இருந்து வருகிறது. அதுவே ரேகை சாஸ்திரமெனச் சொல்லப்படுகிறது உலகத்திலுள்ள பல தேச மகான்களும் இதன் உண்மையை விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

இந்த இரு கரங்களுக்கும் பந்துத்வமான (7) சப்த கிரகங்களாகிய (குடும்ப) கூட்டத்தாருக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இவர்கள் நெருங்கி வருவதால் ஒரு காலத்தில் சுகமும் மற்றொரு காலத்தில் துக்கமுமுண்டு. இந்தக் கிரகங்கள் சம்பந்தப்பட்டவரை அதி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இவர்கள் காலச் சக்கரமாய் சுற்றி வருகின்றனர். கிரகங்களின ஆட்சிக்குத் தக்கபடி பலாபலன்களுக்குட்பட வேண்டும். அவர்கள் இடம் பெயர்வதால் கர்மங்களும் மாறுகின்றன. இவர்கள் எங்ஙனம் கையை வளைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது படத்தில் பார்க்க விளங்கும். ராகு, கேது இவ்விரண்டும் இருகரங்களாகுமென்றும் ஆக கிரகங்கள் ஒன்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

விரல்களின் அங்குலாஸ்திகள் பன்னிரண்டு இராசிகளாய் அமைந்திருக்கின்றன. படத்தில் பார்க்கவும்.

கைகாட்டியது வழி

அவரவர் கையே அவரவருக்கு வழிகாட்டுவதாயிருக்கிறது. கையில் காணப்படும் பல கோடுகளும் ரேகைகள் எனப்படும். ஒவ்வொரு முக்கிய ரேகைக்கும் தனிப்பெயருண்டு. புருஷர்களின் இடதுகை ரேகை பூர்வாம்சத்தைக் காட்டும். வலதுகை ரேகை அபிவிர்த்திக்கான வழியைக் காட்டும். இன்னும் வினைக்கீடாய் தங்கு தடையும் காணப்படும். கஷ்டகாலத்தில் நோய்க்கிடமானாலும்டணக்கஷ்டமானாலும் கிரகங்களின் அதீதத் தன்மையிலிருந்து நிவர்த்தி செய்துகொள்ள வழிகாட்டும். நோய்வந்தகாலத்து, வைத்தியர்களிடம் சென்று தக்க மருந்தை உட்கொண்டு பத்தியமாயிருப்பது வழக்கமன்றோ! அதுபோல காலச்சக்கரம் மாறிக் கஷ்டத்துக்கான தடைகள் எற்படுபபோது தத்தம் கரத்தின் ரேகைகளின் மர்மங்களை அறிந்து நின்மல நிலையைக் கைப்பற்றவேண்டும். பகுத்தறிவுள்ள மனிதர்கள் இந்த ரேகை ரகஸ்யங்களை அப்போதைக்கப்போது கையைப் பார்த்துத் தெரிந்துகொள்வது சுலபமாகும்.

அதிர்ஷ்டம்

இவ்வுலகிலுள்ள மனிதர்களெல்லாம் சுயம்புவான சுகாதீதத்தை மாயாவசத்தால் மறந்துவிட்டனர். அந்தச் சுகத்தை கர்மத்துக்கீடாக வந்த தேகத்தைக்கொண்டு தேடுகின்றனர். தேகமோ இருவினைக்குட்பட்டுக் காலச்சக்கரத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால் அதிர்ஷ்டமுள்ள காலத்தை எதிர்பார்க்கின்றனர். அதிர்ஷ்டம் நல்லது கெட்டது என்ற இரண்டுக்கும் பொதுவாயிருக்கிறது. எனினும் சுக வாழ்க்கையை நாடுவோர் நல்ல அதிர்ஷ்டத்தையே விருப்புவதாகும்.

கர்மத்துக்கீடாய் கஷ்டப்பட நேருப்போது அதற்குப் பதிலாய் சுகத்தையே விரும்புவது கூடாத காரியம். தகாத வழியில் முயற்சித்தால் வினை அதிகரிக்கும். காலத்தை பொறுமையுடன் எதிர்பார்ப்பது நலமாகும். மேலும் தத்தம் விவகாரங்களை ஒடுக்கி, அடங்கியிருத்தல் கிரகத்துச்கு வணக்கம் செய்ததாகும்.



1. முதல் அங்குலாஸ்தி
2. இரண்டாம் அங்குலாஸ்தி
3. மூன்ரும் அங்குலாஸ்தி
4. சனி வளையம்
5. சுக்கிர வளையம்
6. இருதய ரேகை
7. சதுரம்
8. புத்தி ரேகை
9. முக்கோணம்
10. புதன் ரேகை
11. அருள் ரேகை
12. ஐக்ய ரேகை
13. குழந்தை ரேகை
14. சூரிய ரேகை
15. விதி ரேகை
16. ஆயுள் ரேகை
17. செவ்வாய் ரேகை

ரூ. 100 இனும்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.)Panchpota, BENGAL

நவநாகரீகம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காலையிலேயே போய்விட்டான். சாயங்காலம் வாரானோ ...ன்னவோ!' என்ருள்.

அதற்குள், 'இதோ வந்துட்டானே!! என்ருன் அவளுடைய மகன்.

'என்னடா அருணுசலம்! குழந்தை எப்படி இருக்கு!' என்று எல்லாருமாகக் கேட்டார்கள்.

இப்போ சவுக்கியமாக இருக்குங்கெ. நான் திருப்பதிக்குப் போகணம்! என்ருன். விசாரித்ததில், அவன் ஆறு வருஷங்களுக்கு முன், தன் குழந்தை சிக்காக இருந்தபொழுது, திருப்பதிக்குப் போய், முடி கொடுப்பதாக வேண்டிக் கொண்டானும். அப்பொழுது குழந்தைக்கு ஒரு வயது முடியவில்லே. பிறகு, பல அசௌகரியங்களினுல், பிராத்தனே செலுத்தப்படவில்லே. அன்று அவன் வீடு சென்றபொழுது, இரண்டு நாளாகக் கடும் ஜுரமாக இருந்த குழந்தைக்கு இசிவு போல் கண்டதாம். எல்லாரும் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கும் பொழுது, குழந்தை எழுந்து குதித்துத் தான் திருப்பதி சுவாமி என்றும், பிரார்த்தனையை நினைவு மூட்டவே வந்திருப்பதாகவும் கூறிற்ரும். உடனே அருணுசலம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அன்று புறப்பட்டு மறு நாள் புரட்டாசி சனிக்கிழமைக்கே திருப்பதி வந்து, பிரார்த்தனே செலுத்துவதாகச் சொன்னும் உடனே குழந்தை படுத்துத் தூங்கி, அரைமணி நேரத்துக்கு எல்லாம், ஜுரமில்லாமல் சௌக்கியமாக எழுந்து, பசியுடன் ஆகாரம் சாப்பிட்டதாம்.

'சரித்தாண்டா; என்ன இருந்தாலும் இரண்டு நாள் பார்த்துக்கொண்டு போகப்படாதோ? இப்போதானே ஜுரம் விட்டிருக்கு!' என்று லேடி சின்னேயா என்ன சொல்லியும், எல்லாம் சுவாமி பாரம் என்று அவன் பிடிவாதமாகச் சொல்லி லீவ் வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

'வெங்கடாசலபதி கண் கண்ட தெய்வமன்ரே!' என்ருள் என் அத்தை.

'அதெப்படி இருக்கும்? குழந்தைக்கு ஜுரம் வந்ததும், பிரார்த்தனே செலுத்தாத குற்றமாக இருக்கலாம் என்று வீட்டில் பேசிக்கொண்டிருந்திருப்பார்கள். சில ஜுரங்கள்விடும் முன் ... ஒரு ... காட்டுவதில் ... பேச்சைக் ... டிருந்த கு... ஜுரவே... சோர்... இருக்...

...ஸ்திரீகளுக்கு ... வலி, பேதி ... ல்லேயா. ... களையும் கவ... கேட்டுக் ... உன்னத ... குழந்தை, பல... எல்ல... இப்படிச் ... என்ருள் ... மகள்.

வேலூர் ஸ்திரீகள் சங்க அங்கத்தினர்கள் சமீபத்தில் ஓர் ராஜாகக தர்பார் காட்சி நடத்திய போது எடுத்தபடம்

'அவ்வளவு சுலபமாகச் சொல்லி முடிப்பதற்கு இல்லே. எத்தனேயோ ஆவேசங்கள் வரதில்லேயா? இதெல்லாம் நிர்ணயித்துச் சொல்லுவதற்கு இல்லே' என்ருள் லேடி சின்னேயா.

'இது என்ன அண்ணு, அம்மா இப்படிச் சொல்லுகிருள். பிரார்த்தித்துக் கொண்டால் வியாதி போகுமா என்ன? அப்போ பிரார்த்தித்துக்கொள்ளா விட்டால் வியாதி போகாமலே இருக்குமா? பிரார்த்தனேயால் நோய் போகுமென்ருல் வியாதியே இருக்காதே?' என்று அவள் தன் அண்ணுபக்கம் திரும்பினுள்

விதிப்படி நடக்கும் என்று சொல்லுகிறோம்; அதை முழுக்க நம்புவதாக இருந்தால் நாம் எதற்கும் பிரயத்தனப்படவே வேண்டாம். இல்லேயா, ஆயுசு முடிந்தால்தான சாவான். அனுபவிப்பதை அனுபவித்தே தீர வேண்டும் என்று வைத்தியம் செய்யாமல் விட்டு விடுகிறோமா? இதே போல்தான் பிரார்த்தனே விஷயமும். வியாதி மட்டுமா, எத்தனேயோ காரியங்கள் கைகூடுவதன் பொருட்டுப் பிரார்த்தித்துக் கொள்ளுவதில்லேயா? இதெல்லாம் நம்பிக்கையைப் பொருத்தது. 'கேட்ட வரம் கொடுக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள் நீங்கள் கூட்டோடே எங்கே குடிப் போனீர், பாட்டாய்கேள், செலகாலம் எல்லாம் செலுத்திஞேம், அல்காலம், கல்லாஞேம், செம்பாஞேம் காண்' என்ற பாட்டு, உனக்கு நினைவு இருக்கலாம். நம்பிஞல் உண்டு. இல்லாவிட்டால் இல்லே. ...ந்த நம்பிக்கையே காரியம் ...கூடும் சாதனமாக இருக்க ... நம்மால் அறிய முடி... ஒரு சக்தியாக இருக்க எப்படி அக்கினி குண்டப் பிரவேசம் செய்கிருர்கள்? இதற்குச் சரியான உத்திரம் இன்னும் யாரும் சொன்னபாடில்லே. செய்கிறவர்கள் நாங்கள் வழிபடும் தெய்வத்தின் வன்மையே இது என்கிருர்கள். மற்றவர்கள் காலே சுடும் நெருப்பு இவர்களே ஏன் ஒன்றும் செய்வதில்லே. 'நம் தத்துவத்தில் சொப்பனங்கண்டுகூட அறியமுடியாத அநேக விஷயங்கள் பூலோகத்திலும் ஆகாயத்திலும் இருக்கிறது' என்று படித்தது நினைவில்லேயா? இதற்கெல்லாம் சரியான பதில் எது' என்ருன் ஸர் சின்னேயாவின் மகன்.

ருஷியாவில் சுவாமியே இல்லே என்று சொல்லுகிருர்களாம். இதற்கெல்லாம் வரையறுத்து எப்படி பதில் சொல்லுவது? மொத்தத்தில், நம்பிக்கை உள்ளவர்கள் பாக்கியசாலிகள். அவர்களுடைய நம்பிக்கை ஒரு துணையாக அவர்களுக்கு உதவுகிறது என்றே எனக்குத் தோன்றுகிறது. எல்லாம் காலத்தின் போக்கு. நம்பிக்கை உள்ள நீ இதுவும் ஈசுவரன் இச்சை என்று உன்னுடைய காரியத்தைப் பார்த்துக்கொள். மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

குழந்தைக்கட்டி எனும் ஈரல் பெருக்கம்.

பாலகர்களுக்கு ஏற்பட்டு வரும் கட்டி, பாற்கட்டி, குழந்தைக் கட்டி எனும் இப்பொல்லா வியாதியை வேருடன்களேய இப்புத்தகம் இன்றியமையாத பொக்கிஷம். இதில் இக்கட்டிகளின் உற்பத்தியும் அதற்குரிய காரணங்களும் தாய்மார்கள் இருக்க வேண்டிய அவசியமான முறைகளேயும் பற்றி யாவரும் எளிதில் அறியும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. விலே ரூ. 1—4.

சுதேசமித்திரன் புத்தகசாலே,

சென்னே.

சேலத்தில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட நர்சரி தோட்டம்

3 வருஷத்தில் காய்க்கக்கூடிய ஒட்டு மாஞ்செடிகள், ஒட்டு பழ வர்க்கச்செடிகளும் இன்னும் இதர செடிகளும் கிடைக்கும். இங்கிலீஷ் அல்லது நாட்டுக் காய்கறி இங்கிலீஷ் புஷ்ப விதைகள், 20 சாம்பல் பாக்கெட் வில ரூ. 2-10. சாம்பல் பாக்கெட் விலே ரூ. 1-4 கேட்லாக் இனம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம்.

ஏமாருதீர்கள்!

எங்கள் வைத்தியசாலேயின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானது எனப்பலராலும் புகழப்பட்டு வருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளே எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனே செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலேயிலிருந்து வெளி இடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லே. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் எனறும யாராவது விற்பனே செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெறலுக் கொள்ளுங்கள்.

மலேயப்பசாமி வைத்தியசாலே,
பழனி, S. I.

கையை நீட்டினால் கல்மாரி

பிரோஷ்பூரிலிருந்து பின் கண்ட அதிசயச்செய்தி கிடைத்திருக்கிறது:—

பாகபுரானாவில் இரண்டு சேவகர்கள் சேர்ந்தாற்போல் வசிக்கும் ஒரு வீட்டில் பல தினங்களாகச் செங்கல்கள் மாயமாக விழுந்து வருவது எல்லாரையும் பிரமிக்கச் செய்திருக்கிறது. இம்மாதிரிக் கல் விழுவது ஒரு நாளிரவு ஆரம்பித்தது. கல் எறிந்தது யாரென்று கண்டுபிடிக்க முடியாததால் சேவகர்களின் குடும்பத்தினர் ஒரு நண்பர் வீட்டிற்குச் சென்றனர். பிறகு கல் விழுவது நின்றுவிட்டது. ஆனால், விடியற்காலை குடும்பத்தினர் திருப்பியழைத்து வரப்பட்டதும் கல்மாரி மீண்டுமாரம்பித்துவிட்டது. இது முதல் அந்தக் குடும்பத்தினர் எங்கு சென்றாலும் கல்மாரி தொடருகிறது.

தீர ஆராய்ந்ததில் சேவகர்களில் ஒருவருடைய உறவினரான 9-வயதுள்ள ராஜ் பிபி என்ற சிறு பெண்ணுக்கும் இந்தக் கல்மாரிக்கும் மர்மமான சம்பந்தமிருப்பதாக விளங்கியது. அந்தப் பெண் தன் கையைச் சுழற்றினால் வீட்டில் கற்கள் விழுகின்றன.

பிறகு இன்னொரு மாறுதல் ஏற்பட்டது. அந்தப் பெண் எந்த அறைக்குளாவது சென்றால் அங்குள்ள பாத்திரங்கள் முதலியவை முற்றத்தில் எறியப்படுகின்றன. ஜாடி, பீங்கான் முதலியவை இம்மாதிரித் தூளாக உடைந்துவிட்டன. சேவகர்களில் ஒருவன் வெறுப்படைந்து கற்கள் சின்னவையாயிருப்பதாகக் கூறினான். உடனே இடிந்த கட்டிட பாகம்போல் பெரிதாக வந்து விழுந்தது. இதைப் பார்த்து இன்னொரு மனிதர் கல்லிற்குப் பதில் பணம் விழக்கூடாதா வென்றார். உடனே முற்றத்தில் இரண்டு பைசாக்கள் விழுந்தன.

நிலைமையைச் சமாளிக்க முடியாமல் சேவகர்கள் ஒரு மகமதியபீரை வரவழைத்தனர். அவர் வந்ததும் அந்தப் பெண் முற்றத்தின் மூலைக்குச் சென்று மேலேயுள்ள நீர்த் தாரைக்குழாயைப்பார்த்தாள் வயது சென்ற ஒரு மனிதன் நீல உடை தரித்துக் கையில் தடியுடன் கூரையில் நிற்பதாகக் கூறினாள். எங்களை ஏன் இப்படித் தொந்தரவு செய்கிறாய் என்று அந்தப் பெண் அவ்வுருவத்தைக் கேட்க, "உங்களைவிட அந்தப் பீரையே அதிகமாகத் தேடி வருகிறேன்" என்று அது பதில் கூறியது. இதை யறிந்தவுடன் பீர் ஓட்டம்பிடித்தார். பெண் மயக்கமாக விழுந்தாள்.

மர்மம் இன்னும் விளங்கவில்லை.

இறுதியாக வரத்தயாராயிருக்கிறார் !

விரைவில் இவரை உங்களூர்

தியேட்டரில் தாராளமாய் சந்திக்கலாம்

நடிக மன்னர்
M. K. தியாகராஜ
பாகவதர்

திரைகுயில்
M. S. தேவசேனா
இவர்களிருவரும்
சிறப்புடன் நடிக்கும்

சத்தியசீலன்

அல்லது

தந்தை சொல் மறவாத் தனயன்

ஆம் இவர்தான்
திருச்சி தியாகராஜ
டாக்கீஸாரின் கன்னிப் பேசும்
படத்தில் கதாநாயகனாக வருகிறார்.

- - ஞாபகமிருக்கட்டும் - -

இவரை உங்களூர் தியேட்டரில் சந்திக்க மட்டும் தவறிவிடாதீர்கள்.
பார்க்க வேண்டிய படமிது :

கீழ்க்கண்ட இடங்களில் படம் காட்டப்படும் தேதியை
விரைவில் எதிர்பாருங்கள்

திருச்சி	—வெலிங்டன் டாக்கீஸ்
சேலம்	—சென்ட்ரல் டாக்கீஸ்
ஊர்காம்	—கே தியேட்டர்
பாலக்காடு	—நியூ தியேட்டர்
திருப்பாபுலியூர்	—மார்டன் டாக்கீஸ்
சிதம்பரம்	—நீலன் டாக்கீஸ்
திருவனந்தபுரம்	—நியூ தியேட்டர்

படம் தயாரித்தவர்கள்:—

தியாகராஜா டாக்கீஸ்

கள் நீங்கு
கும். இதை
ாள்ளுங்கள்.
GAL MESM
HOUSE,
)Panchpota, BE

சிறுவர் பகுதி

வேலையின் கூலி

(ஜி. தியாகராஜன் எழுதியது)

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் ஜெயராமன் எனப் பெயருள்ள புத்திசாலியான வாலிபன் ஒருவன் இருந்தான். கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறியிருந்தான். ஆனால் எவ்வளவு புத்திசாலியாயிருந்தாலும் தன் குடும்பத்தை ரக்ஷிக்கப் போதுமான வரும்படி அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவன் மிகவும் வருத்தமுற்றிருக்கும் சமயத்தில் அவன் ஸ்நேகிதன் ஒருவன், அத்தேசத்து ராஜனிடத்தில் சென்று அவன் சபையில் ஏதாவது ஒரு உத்தியோகமடைந்தால் நிறைய சம்பாதிக்கலாம் என்று சொன்னான்.

அதற்குமேல் ஜெயராமன், ராஜசபைக்குச் செல்கிறதென்றும், ஆனால், தான் யோக்கியமாகவே ஒவ்வொரு பைசாவையும் சம்பாதிக்கிறதென்றும் தீர்மானித்தான். அவன் அரண்மனையையடைந்து அரசனைக் கண்டு வணங்கினான். இவ்வாலிபனுடைய அழகிய வதனத்தையும் கம்பீரமான பார்வையையும் புத்திசாலி முகத்தையும் பார்த்து அரசன், அவன் வந்த காரணத்தை விசாரித்தான்.

ஜெயராமன் மிகவும் மரியாதையுடன் ராஜனை வணங்கினான். பிறகு மிகவும் இரங்கின குரலுடன், "நான் மிகவும் ஏழை. வெகு தூரத்திலிருந்து வந்துள்ளேன். ஏதாவது உத்தியோகத்தை வேண்டியே இவ்விடம் வந்திருக்கிறேன். சம்பளமில்லாத வேலையானாலும் சரி; எதைக் கொடுத்தாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

"ஆனால் சம்பளமில்லாத வேலையிருந்தால் உனக்கு எவ்விதத்தில் நல்லது?" என்று ஆச்சரியத்துடன் அரசன் கேட்டான். அதற்கு அவன் "அரசர் பெருமானே, ஒரு புத்தியுள்ள மனிதனுக்கு எவ்வேலையாய் இருந்தாலும் அதற்குத் தகுந்த கூலி கிடைக்கும். நான் வேண்டுவதெல்லாம் தங்களிடம் வேலைக்கமர வேண்டுமென்பதே யொழிய சம்பளம் வேண்டுவதில்லை" என்றான்.

அதற்குமேல் அரசன் சம்பளமில்லாத வேலை என்னவென்று தன் மந்திரிகளுடன் யோசனை செய்து முடிவில் அரண்மனை வாயிலில் கட்டியிருக்கும் 'காரிகானா' என்னும் கோபுரத்தில் ஒவ்வொரு நாளும் மணியைத் தெரியப்படுத்தும் பெரிய கண்டாமணியையடிக்கிற வேலைக்காரர்களின் தலைவனாக ஜெயராமனை நியமித்தான். ஜெயராமனும் அதற்குச் சம்மதித்து, தனக்கு கீழ்ப்பட்டவர்கள் எப்பொழுதும் எவ்வேலையிருந்தாலும் தன் சொற்படி நடக்க வேண்டுமென்கிற ஒரு உத்தரவை அரசனிடம் பெற்றுக்கொண்டு அரச சமூகத்திலிருந்து வெளிக்கிளம்பினான்.

ஜெயராமன் அன்றைய தினமே காரிகானா தலைவன் வேலையை ஒப்புக்கொண்டான். அங்கிருக்கும் வேலைக்காரர்களிடம், (மணியை அடிப்பவர்களிடம்) அரசனுடைய உத்தரவைக் காண்பித்து,

அவர்கள் கண்டிப்பாய்த் தன் உத்தரவுப்படி நடக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். ஜெயராமன் தன் வேலையை எவ்விதம் செய்யலாம் என்று யோசித்துக் கடைசியாக இரவு 9-மணியடிக்கும் சமயத்தில் 12-மணியடிக்க உத்தரவிட்டான். ஆட்கள் பயந்து அப்படியே செய்தார்கள். 12-அடித்த பின் வரிசைக் கிரமமாக ஒன்று முதல் மணியடிக்கச் செய்து விட்டுத் தன்இருப்பிடம் போய்ச் சேர்ந்தான். இம்மாதிரி செய்வதால் ஏதாவது சம்பவிக்காதா என்று எதிர்பார்த்தான் ஜெயராமன்.

அரசனுக்கு இரண்டு பத்தினிகள் உண்டு. அவர்கள் அடிக்கடி அரசனுடைய ஸ்வாதீனத்திற்காகச் சண்டையிட்டுக்கொள்கிறது வழக்கம். இதற்காக அரசன் இரண்டு பெயர்களுக்கும் கோபம் வராமல் பிரதிதினமும் சாயந்திரம் முதற்கொண்டு நடுநிசி வரையில் மூத்தவள் அந்தப்புரத்திலும், 12-மணியிலிருந்து காலை 6-மணி வரையில் இளையவள் மாளிகையிலும் காலத்தைப் போக்குவது வழக்கம். அன்றையதினம் மூத்தவள் சயனக் கிரஹத்தில் அரசன் இருக்கும் பொழுது மணி ஒன்பது ஆகும்பொழுதே காரிகானா மணி 12 அடித்ததால், அரசன் தன் வழக்கம் போல் அவசரமாய் எழுந்திருந்து இளையவள் கிருஹத்திற்குச்சென்றான்.

C.கன்னய்யா கம்பெனி
இரும்பு பெட்டி வியாபாரம்.

நெ.137, பிராட் வே, மதராஸ்

BOERICKE & TAFEL'S

அசல் ஹோமியோபதிக் டைல்யூஷன் மருந்துகள் (உபயோகமற்றவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) டிஞ்சர் நிவாரணிகளும்-½ அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் டிரைசுரேஷன்ஸ் & மாத்திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

YINGLING'S ACCOUCHEUR'S EMERGENCY MANUAL PRICE Rs 4/- ONLY

SETT DEY & CO.,
40-A, Strand Road, Calcutta

மல்லிகாவின் பாக்யமே பாக்யம்!

போன வருடம் ஐயோ! அப்பா! என்று கஷ்டப்பட்டவள் இவ்வருடம் ஒரு குழந்தையை அன்புடன் அணைகிறாள்

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

ஸ்திரீகளுக்கு மாதக்குளி காலத்தில் உண்டாகும் சூதக வாய்வு, சூதக பந்தம், சூதகக்கட்டினால் உண்டாகும் வயிற்று வலி, பேதி, பசியின்மை, வாந்தி, மயக்கம், தலைவலி, ஜ்வரம், உடல் ஸ்தூலித்தல் முதலிய எல்லா கர்ப்பாசய வியாதிகளையும் கண்டித்து மலட்டுப் பூச்சிகளைக்கொன்று, கருப்பைக்கு பலந்தந்து ரக்ஷித்து சந்தான பாக்யத்தையளிக்கும் உன்னத ஔஷதம். பத்தியமில்லை, செட் விலை ரூபா 5.

வேலன்ஸ் மெடிகல் ஹால் 61, காரணீஸ்வரர் கோயில் தெரு மைலாப்பூர், சென்னை

பெரிய ராணி, இவ்வளவு திடீரென்று அரசன் கிளம்பிச் சென்றதற்காக மிகவும் துக்கப்பட்டாள். கண்டாமணி எட்டு அடித்தது அவளுக்குத் தெரியும். ஆனால், அவள் தன் பர்த்தாவின் சிஷ்ரூஷையிலேயே கவனம் செலுத்தினவளாதலால், ஒரு வேளை தன்னையறியாமலே காலம் சென்றிருக்கலாம் என்று நினைத்தாள்.

அன்று இரவு ஏற்பட்ட சம்பவங்களுக்குக் காரணத்தை யோசிக்கலானாள். கடைசியாக மணியடிக்கிறவர்களை இளையராணி லஞ்சம் கொடுத்துத் தன் கக்ஷியில் சேர்த்திருக்கவேண்டுமென்று தோன்றிற்று. மறுநாள் காலையில் அந்த ராணி, தன் அந்தரங்கச் சேடியைக் காரிகானாவிற்கு அனுப்பி உண்மையைத் தெரிந்துகொண்டு ஜெயராமனை வரவழைத்தாள். அவ்வாலிபனும் மிகவும் வணக்கத்துடன் வந்து நின்றவுடன், "அப்பா, என்ன காரணத்திற்காக இரவு 9 மணிக்கு 12 மணியடிக்க உத்தரவு செய்தாய்? ஆகா! இப்பொழுது தெரிகிறது. என் சக்களத்தி இளைய ராணி என் பர்த்தா சீக்கிரமாக அவள் அறைக்குச் செல்வதற்காக உன்னைச் சரிப்படுத்தினாள் போலும். அப்பா, நீ நல்லவன் போல் தோன்றுகிறாய்.

இந்தா! இந்தப் பதினாயிரம் ரூபாயை வைத்துக்கொள். இன்று முதற்கொண்டு இரவு 3 மணிக்கு 12 மணியடிக்கும்படி உத்தரவு செய்" என்றாள். ஜெயராமனும் அவளை வணங்கி அம்மாதிரியே செய்வதாகச் சொல்லி, பணத்தை எடுத்துக்கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டான். அன்றிரவு அம்மாதிரியே நடந்தது.

முன்னாள் இரவு அரசன் அதிசீக்கிரமாக வந்தவன் இன்றைய தினம் வராததற்குக் காரணம் இளையராணிக்குப் புலப்படவில்லை. கடைசியாக மிகவும் சிரமத்துடன் அரசன் அவள் அறையில் நுழைந்தான். இவ்வளவு நேரம் சென்று வந்த காரணத்தைக் கேட்க, தன் மேல் ஒன்றும் பிசகில்லையென்றும், கண்டாமணி 12-அடித்தவுடன் நேரே வந்துவிட்டதாகவும் சொல்லி, நித்திரை போய்விட்டான். இளைய ராணிக்குத் தூக்கமே வரவில்லை. அன்று இரவு முழுவதும் யோசனையிலாழ்ந்து கடைசியாக, மணியடிக்கிறவர்களை மூத்தராணி வசப்படுத்தியிருக்க வேண்டுமென நிச்சயித்தாள்.

மறுநாள் காலையில் அவள் காரிகானாவில் விசாரித்ததில் எல்லாம் ஜெயராமனுடைய வேலை என்று தெரிந்து, அவனைக் கூப்பிட்டு விசாரித்ததில் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், கடிகாரம் சரியாய்ச் செல்லாததினால் அதைத் திருத்த வேண்டியது தன் கடமையாகையால் அதைத் திருத்தியதாகவும் அவன் பயமின்றிப் பதிலளித்தான். அதற்கவள், "என் சக்களத்தி, பெரியராணியா உன்னைக் கைவசப்படுத்தினது? இந்தா! இந்தப் பதினாயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள். இன்று முதல் இரவு 9-மணிக்கே 12-மணியடித்து விடு" என்றாள். ஜெயராமனும் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டுத் தன் இருப்பிடம் சேர்ந்தான். ஆனால், ஜெயராமன் அம்முழுப் பணத்தையும் தானே வைத்துக்கொள்ளாமல் அரசன் கஜானாவில் தன் பெயரால் செலுத்தினான்.

அற்புத

சுவாஸ

நிவாரணி

இவ்வற்புத பெப்ஸ் மாத்திரைகள் உங்கள் மார்புப் பிரதேசத்தினுள்ளும், தொண்டையிலும் பிரசித்திபெற்ற பைன் விருக்ஷக் காற்றைப் புகுத்துகிறது. வாயில் போட்டுக் கரைகையில் பெப்ஸ கிருமிநாச ஆவியை வெளிப்படுத்துகிறது; இது சுவாசாசயத்தினுள் செல்கிறது. இங்ஙனமாக பெப்ஸ் சுவாசாசயத்தைச் சுத்தப்படுத்துகிறது இருமல் ஜலதோஷம், மார்பு நோய் முதலியவற்றை அகற்றுகிறது. பெப்ஸ் தொண்டைக்குச் சமனமூட்டி, கபத்தை அறுத்து, மார்புப் பிரதேசத்துக்கு வலுவூட்டுகிறது.

ஒவ்வொரு பெப்ஸ் மாத்திரையும் வெள்ளிக்கவசம் பூண்டது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் சீல் வைத்த புட்டிகளில் புட்டி 1க்கு ரூ. 1 வீதம் கிடைக்கும்.

பெப்ஸ் கிருமிநாச சுவாச நிவாரண மாத்திரைகளை உட்கொள்க.

பெப்ச் PEPS

அரசனும் இதைக் கேள்விப்பட்டு, இரண்டுநாளில் எப்படி 20 ஆயிரம் ரூபாய் சேர்த்தான் என்று ஆச்சரியப்பட்டு ஜெயராமனை வரவழைத்துக் கேட்டான். அவனும் உள்ளதை ஒன்றும் விடாமல் சொன்னான். அதைக் கேட்டு அரசன் நகைத்து, "போதும், போதும், உனக்குக் கொடுத்த இவ்வேலை எனக்குப் பிராணாபத்தாயிருக்கிறது" என்று சொல்லி, ஜெயராமனுடைய தைரியத்திற்காக இருபதாயிரம் ரூபாய் கொடுத்தான். அவைகளை வாங்கிக்கொண்டு ஜெயராமன், "மஹாராஜா! புத்தியுடையவர்களுக்கு எந்த வேலையாயிருந்தாலும் அதற்குத் தகுந்த கூலி கிடைக்கும் என்று நான் முன்னாலேயே சொல்லவில்லையா? தங்களுக்கு இவ்வளவு சிரமம் ஏற்படுத்தியதற்காக என்னை மிகவும் மன்னிக்க வேண்டுகிறேன்" என்றான்.

இதைக்கேட்டு அரசனும் மிக்க திருப்தியடைந்து, அவனுக்குத் தன்

சமஸ்தானத்தில் ஓர் உத்தியோகத்தைக் கொடுத்தான். ஜெயராமன் பெரிய பதவிக்கு வந்தோம் என்று அகம்பாவம் கொள்ளாமல், தன்னுடைய நுட்ப புத்தியால், தன் வேலையை நன்றாக நடத்தி வந்தான்.

சுத்த மைசூர் பட்டு நூல் — வெளி நாட்டு பட்டு நூலே கிடையாது

வெள்ளை ஸில்க் கோட்டு துணி	புதிய மோஹினி, இந்திராணி கரை போட்ட பூனா தலைப்பு தர்மாவரம் சரிகைச் சேலைகள்	டென்னிஸ் மேல் அங்கவஸ்திரம்.

D. R. NARAYANASWAMY & SONS., Darmavaram (Anantapur Dt.)

மல்லிகா

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தைத் திருப்பிக்கொண்டாள் மல்லிகா!

நீலகண்டன்:—என் கண்ணே மல்லிகா! என் பிழையைப் பொருத்தருள மாட்டாயா? என் வஞ்சத்திற்குத் தகுந்த பலனை அநுபவித்து விட்டேன். இவ்வவமானம் ஒன்றே எனக்குப் போதும். மனம் இரங்கலையா; என் முகம் பார்த்து உன் அமுத வாய் திறந்து "மன்னித்தேன்" என்று ஒரு வார்த்தை சொல்லாயா?

மல்லிகா:—திரும்பியும் பார்த்தாளில்லை. "மன்னிப்பா; என் போன்ற எத்தனை கன்னியர்கள் உன்னால் கெடுக்கப்பட்டிருக்கின்றனர்களோ? உனக்கு சத்தியம் வேறு, சட்டப் பரீக்ஷைக்குப் படித்த மேதாவி; இம்மாதிரி தூர்த்தர்கள் சட்ட நிபுணர்களாக வந்தால் உலகத்துக்கு வேறு கேடு வேண்டியதே இல்லை. தாய்மார்களே! சகோதரிகளே! இக்கயவனைப் போல் உள்ள வஞ்சகர்களால் பெண்கள் படுந்துயரம் நேரில் அறிந்துகொண்டீர்கள்; இதன் முக்கியக் காரணம் ஸ்திரீகளும் ஆடவர்களின் உண்மை காதலை அறியுமுன்பே அவர்களுடன் நெருங்கிப் பழகுவதுதான்.

மேனாட்டு நாகரீகப்பழக்கம் தான் முக்கியக்காரணம். நம் மதக்கல்வி தேசியக் கல்வியை விட்டுவிட்டு அன்னியரின் அடிமைக் கல்வியை முதன்மையாகக் கொண்டதே நாம்படும் அவதிக்குக்காரணம். சகோதரிகளே! என்னையே உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். உண்மைக்காதலை உணர்ந்த போதிலும் விவாகத்துக்கு முன் உடலை மட்டும் காதலர் வசம் ஒப்புவிக்காதீர்கள். நம்மை நாமே சீர்திருத்தம் செய்து கொள்ளவேண்டும். வஞ்சக ஆடவர்கள் நம்மாலே தான் சீர்திருந்தவேண்டும்" என்று ஆவேசத்துடன் உரத்த குரலில் பேசினாள்.

கேட்டிருந்தவர்கள் எல்லாரும் மௌனமுற்றிருந்தனர்.

நீலகண்டன் கண்ணீர் சோர விட்டுக்கொண்டே, "மல்லிகா! போதும் போதும். எனக்கு புத்திவந்துவிட்டது! என்னை மன்னித்து ஆட்கொள்ளுவாய்" என்று நாக்குழற உரைத்தான்.

விவரிக்கின் மிகையாகும். நீலகண்டன் பெற்றோர்களும் மற்ற பந்துக்களும் மல்லிகாவை சமாதானம்செய்தார்கள். வனஜாவும் . தேற்ற மல்லிகா நீலகண்டனை மணம் செய்து கொள்ள உடன்பட்டாள்.

மறு தினம் சுப வேளையில் அந்தமணப்பந்தலில், மல்லிகா, நீலகண்டனையும், வனஜா, பத்மநாபனையும் விவாகம் செய்து கொண்டனர்.

ஓராண்டு சென்றது மல்லிகா மடியில் ஒரு ஆண்குழந்தை தாயின் முகத்தைப்பார்த்தவாறு சிரித்துக்கொண்டிருக்கின்றது. நீலகண்டன் அருகே அமர்ந்து ஆநந்தம் அனுபவித்திருக்கின்றான். மல்லிகா குழந்தையைப் பார்த்தவாறு "செல்லம்; உனக்கு தகப்பனறியா பிள்ளை என்ற பட்டம் சூட்டப் பார்த்தனரே உன் தந்தை" என்று புன்முறுவலுடன் உரைத்தாள்.

நீலகண்டன்:—என் ஆருயிரே! இன்னும் என்னை அகௌரவப் படுத்த வேண்டுமா? உன்னைப் போலும் வீர, தீர பெண்மணிகள் நம் நாட்டினின்றும் மறைந்து விட்டகாலல்லவோ, என்போலுள்ள யுவர்கள் வஞ்சகர்களாகத் திரும்பி விட்டனர்.

மல்லிகா:—அன்பரே, வருத்தம் வையாதேயுங்கள். நம் செல்வனின் சந்தோஷத்தில் ஈடுபட்டதால் பழைய ஞாபகம் வந்து விட்டது. உங்கள் மனம் போல் என்னைத் தண்டியுங்கள்.

நீலகண்டன் உவகைப் பூத்தான். 'இது தான் உனக்குத் தண்டனை' என்று உரைத்துக் கொண்டே முகத்தோடு முகம் வைத்தான். இதழுடன் இதழ் சேர்ந்தன.

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி ; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
„ 3 புட்டிகள் ரூ. 2-10.

வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMBAY 2.

டாக்டர் ஜம்மி வெங்கடராமணய்யாவின்

லிவர்க்யூர்

குழந்தைகள் ஈரல், குலைகட்டிகளுக்கு நிகரற்றது என்று டாக்டர்களாலும், பெற்றோர்களாலும் போற்றப்பட்டது.

அநேக கண்காட்சிகளில் தங்கமெடல்களும், நற்சாட்சி பத்திரங்களும் பெற்றது

ரங்கூன் ஏஜெண்டு:—ரிலையன்ஸ் பார்மசி, 125-12, பின்னட் வீதி—ரங்கூன்.

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைக் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ. 5; தபால் செலவு 7-அணா

சென்னையில் எல்லா பிரபல மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும். அல்லது,

MAHAMBS TRADING COMPANY OF ASIA, Indian Depot, P O Box 2186 Bombay.

ஜம்புலிங்கத்தின்

திருவிளையாடல்கள்

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து, அடித்துக்கொண்டு போய் விடுவதென்றால், கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடக் கூடிய சக்தி அவனுக்கிருந்தாலொழிய முடியாதென்று நினைக்கிறேன்.—உம்—இருந்தாலும் எதற்கும் உள்ளேயும் போய் ஒருதரம் சுற்றிப் பார்த்துவிடுவோம். சாவி யிருக்கிறதா?

பாங்கியின் மானேஜர், "ஓ! இருக்கிறது" என்று சொல்லி, பாங்கியின் பெரிய வெளிக் கதவைத் திறந்தார். கமிஷனர், சப் இன்ஸ்பெக்டர், பாங்கியின் அதிகாரிகள் ஆகிய இவர்கள் உள்ளே சென்றார்கள். உள்ளே இரவு காவற்காரன் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் வாயிலிலேயே தங்கி விட்டார்.

அக்காவற்காரனைக் கண்டதும் மானேஜர், "விசேஷம் ஒன்றுமில்லையே? எல்லாம் ஒழுங்காய்த் தானேடா—?"

காவற்காரன்:—அதெல்லாம் ஒன்றுமில்லிங்கோ, அல்லாம் சரியாய் இருக்குதுங்கோ.

கமிஷனர் தன் கை கடியாரத்தைப் பார்த்தார். மணி ஒன்பதரையாயிருந்தது. சப் இன்ஸ்பெக்டரிடம் என்னமோ சொன்னார். அவர் சலாம் செய்து வெளியே சென்றார். கமிஷனர் மற்றவர்களைநோக்கி, "சற்று இருங்கள். உதவிக்கு ஆட்களை அழைத்து வரச் சொல்லியிருக்கிறேன். ஒருக்கால் எங்கேனும் பதுங்கிக் கொண்டிருந்தாலும்—"

என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, வெளியே சென்ற சப் இன்ஸ்பெக்டர், ஆறு சேவகர்களுடன் உள்ளே வந்தார். ஒவ்வொருஇடமாகக் கட்டிடம் முழுதும் தேடினார்கள். கஜானா அறையைக் கூடத் திறந்து பார்த்தார்கள். அன்னியர்கள் ஒருவருமில்லை. கதவுகளை முன் போலப் பூட்டிக் கொண்டு வாயிலை நோக்கி வந்தார்கள்.

கமி:—உங்களிடம் துப்பாக்கிகள் கெட்டிக்கப்பட்டுத் தயாராயிருக்கின்றனவல்லவா?

சேவகர்களும் சப் இன்ஸ்பெக்டரும் 'ஆம்' என்று தலையை யசைத்தார்கள்.

சரி, சப் இன்ஸ்பெக்டர்! ஜாக்கிரதையாய் இந்த ஆறு ஜவான்களையும் காவற்காரனையும் வைத்துக்கொண்டு சுற்றிக்கொண்டிரும். மேலே ஜன்னல் பக்கமாய் ஒருவன் போகட்டும். மேல்மாடிக்கு ஒருவன் போகட்டும். கதவை உட்பக்கம் பூட்டிக்கொள்ளுங்கள். சந்தேகத்துக் கிடமான நபரையோ, அல்லது நபர்களையோ, யார் எங்கு கண்டாலும், உடனே ஜேபியிலிருக்கும் ஊது குழலை எடுத்து ஊதுங்கள்; தெரிந்ததா?

சப்-இன்ஸ்:—தெரிந்தது. [என்று சலாம் செய்தார்].

கமி:—சரி! ஜாக்கிரதை.

என்று மற்றவர்களை யழைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

மானே:—ஜம்புலிங்கம் சொல் தவறாமல் வருபவனாயிருந்தால், மணி ஆகி விட்டதே! இன்னும் ஐந்து நிமிஷங்கள் தானே யிருக்கின்றன. ஏது! இன்று வருவான் என்று தோன்றவில்லை.

ஒருவரும் பதிற் சொல்லவில்லை. அவரவர்கள் எதெதையோ யோசித்துக் கொண்டிருந்ததைப் போலத் தோன்றியது. இன்ஸ்பெக்டரும் கமிஷனரை யணுகி, அவருடைய வாயிலிருந்து பிறக்கும் உத்திரவை எதிர்பார்த்தவராய்ச் சற்று எட்ட நின்றுகொண்டிருந்தார். இப்படியாகச் சுமார் இரண்டுநிமிஷங்கள் கழிந்திருக்கும். ஒரு சேவகன் ஓட்டோடியும் வந்து, இன்ஸ்பெக்டரிடம்,

"தங்களை உடனே சார்ஜெண்ட் அழைத்து வரச் சொன்னார். யாரோ ஒரு ஆசாமி, பின் பக்கம் அவர்களைத் தாண்டிச் செல்ல முயன்றானும். அவனைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்ல, இன்ஸ்பெக்டர் பாங்கியின் பின்புறத்தை நோக்கி விரைந்து சென்றார்.

கமி:—கடைசியில்—ஜம்புலிங்கம் எப்படியும்—வருவானென்றே—

என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே பாங்கியின் கதவு திறக்கப்பட்டு, உள்ளிருந்து சப் இன்ஸ்பெக்டர், கமிஷனரை நோக்கி வெகு வேகமாய் ஓடி வந்தார்.

கமி:—[சற்று கடுகடுப்பாய்] ஏன், என்ன ஓட்டம்?

சப்-இன்:—உள்ளே தயவு செய்யவேண்டும். அங்கு எப்படியோ யிருக்கிறது.

என்று இரைக்க இரைக்கச் சொன்னார்.

கமி:—என்ன சங்கதி என்று அதட்டினார்.

சப் இன்:—இன்னதென்று சொல்லமுடியவில்லை. அவர்கள் தங்களால் அங்கு சரியாய் மூச்சு விடமுடியவில்லை என்கிறார்கள். எனக்கும் கூட எப்படியோயிருக்கிறது.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்துபணத்தைமீதிசெய்யலாம்!

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு. இத்துடன் வேதுமதிகள்:—1 பாக்கெட் ஆல்கனெட் ரூட் (எண்ணெய்க்கு கலர் கொடுக்க) வாசனை திரவியம் தயாரிக்கும் விதம் 1936ம் வருஷத்திய ஒரு பாக்கட் காலண்டர் இவைகள் தரப்படும்.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

சாம்பாக்	ரூ. 2-0	போகுல்	ரூ. 1-8
காஷ்	,, 2-0	ஹீனா	,, 1-8
கொயிரோ	,, 2-0	லில்லி	,, 1-0
மஸ்க்	,, 2-0	தாமரை	,, 1-0
கதம்பம்	,, 1-8	கோலாபீ	,, 1-0
மல்லிகை	,, 1-8	மோடியா	,, 1-0
ரோஸ்	,, 1-8	ஸ்வீட்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாக கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு.

S PAUL & Co, Perfumers, (Dept. S. W.) 4, Hospital Street, Dharamtola, Calcutta.

வெண்குஷ்டம் பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும், எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,

KAMALA WORKS (S. M.)
Panchpota—Bengal, India.

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,
திருத்தணி, S. இந்தியா.

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு
பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி!!

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்.

14, ஸசா அவுஸ், மாடுங்கா, பம்பாய்.

ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜன மாத்திரை

"பாலக்ஸ்" பேதி மாத்திரை
"யூனிகான்" டானிக்

ஸ்தாபிதம் 1910

5 வருஷ உத்திரவாதம். 800 ரூபா மதிப்புள்ளது.

22 காரட் ரோல்டுகோல்டு தங்க ஒட்டியாணங்கள்

விலைகள் சாசமுள்ளதாயும் 300 கெஜ்ஜைகள் கட்டியதும் அசல் சவரன் பொன்னுக்கு ஒப்பானதாக எமது கம்பனியில் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தங்கத்தினால் செய்த ஒட்டியாணத்திற்கும் இதற்கும் யாதொரு வித்தியாசப்படாமல் தயாரித்துள்ளோம். இதை சிறுவர் முதல் பெரியோர் வரையிலும் அணியக்கூடிய

ஜாலர் ஒட்டியாணம் 1-க்கு ரூ 6-8-0; டிசின்னது 1-க்கு ரூ. 5-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் முதல் நெம்பர் 1-க்கு ரூ 5-8-0; 2-ம் நெம்பர் 1-க்கு ரூ. 3-8-0; 3-ம் நெம்பர் 1-க்கு ரூ. 2-8-0. கைவளையல் பெரிய ஜதை 1-க்கு ரூ 2-8-0; சின்ன ஜதை 1-க்கு ரூ 1-8-0; கழுத்து செயின் சரம் 1-க்கு ரூ. 3-8-0 வி. பி. தபால் சார்ஜ்வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனாபஜார்ரோடு, மதராஸ்.

இதைக்கேட்டதும், கமிஷனர் பெரிதும் வியப்படைந்தவராய், பாங்கியின் உத்தியோகஸ்தர்களுடன், உள்ளே சென்றார். சப்இன்ஸ்பெக்டரும் பின்தொடர்ந்தார். உள்ளே நுழைந்து தாழ்வாரத்தையடைந்தார்கள். அங்கு ஒருவரையும் காணவில்லை. அதைக் கடந்து இன்னும் உட்பக்கஞ் சென்றார்கள். ஓர் மூலையில ஏதோகருப்பாய்த் தென்பட்டது அதைச் சமீபிக்க, அப்படியே பிரமித்துவிட்டார்கள்! அப்படிக்கிடந்தது இரவு காவற்காரனே. கமிஷனர் குனிந்து அவனைக்கவனித்தார். ஸ்மரணையற்றிருந்த போதிலும ஸ்வாசம் வந்துகொண்டிருந்ததைக் காண, உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லை யென்று கண்டார். "சப் இன்ஸ்பெக்டர்!" என்று திரும்பினர். சப்இன்ஸ்பெக்டரைக்காணவில்லை. 'நம்முடன் வந்த சப்இன்ஸ்பெக்டரெங்கே?" யென்று பாங்கி உத்தியோகஸ்தர்களைக் கேட்டார். அவர்களும், தாங்கள் உள்ளேவந்தபின் சப் இன்ஸ்பெக்டரைக் காணவில்லை என்றார்கள். "முட்டாள்! எங்கு போயிருப்பான்!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே உள்ளே இன்ஸ்பெக்டர் டிப்பி வந்தார். கமிஷனர் அவரை என்ன சங்கதி என்று கேட்கும் பாவனையாய்ப் பார்த்தார்.

டிப்பி:—ஒன்றுமில்லை, வேண்டும் என்றே என்னைத் தங்களிடமிருந்து பிரிக்கும் பொருட்டுச் செய்த வேலை. அந்தப் பக்கம் அப்படி யொன்றுமே நேரவில்லை.

கமிஷனர்:—காவற்காரனைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, உள்ளே வாரும் என்று அவரிடம் சொல்லிவிட்டு, இன்னும் உள்ளே என்ன நடந்திருக்கிறதோ என்று பார்க்கமுன் ஜாக்கிரதையாய் அவ்விடத்தைக் கடந்து சென்றார்கள். சற்று தூரம் சென்றபின் காவற்காரனைப் போலவே இரண்டு சேவகர்கள் ஒருபக்கம் பயங்கிக் கிடந்தார்கள். மீதி நான்கு சேவகர்களையும் காணவில்லை உடனேநேராய்க் கஜானுவுக்குச் சென்றார்கள் கஜானுக் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது! கதவில் பூட்டிருந்த இடத்திற்குச் சரியாய் அறையடி அளவுள்ள வட்டமான துவாரம் காணப்பட்டது! கஜானு அறையினுள் சென்றார்கள் அங்கே தரையில், வாடகைக்கு கொடுக்கப்பட்ட பெட்டிகளில் ஒன்று, உடைக்கப்பட்டுக் காலியாய் கிடந்தது. அதைத் தவிர வேறு விசேஷம் ஒன்றும் காணப்படவில்லை. கஜான்ஜி குனிந்து பெட்டியைப் பார்த்தார். "ஆச்சரியம், வெகு ஆச்சரியம்!" என்று வாய் விட்டுத் தனக்குத் தானே கூறிக் கொண்டார்.

மற்றவர்கள்:—அது ஆச்சரியம்? என்ன ஆச்சரியம்?

கஜான்ஜி:—[அந்தப் பெட்டியைச் சுட்டிக் காண்பித்து] மூன்று நாட்களுக்கு முன் தான் ராவ் பஹதூர் வேலாயுத முதலியார் இப் பெட்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். அவர் அச்சமயம் மிக்க கலவர மடைந்திருந்தவராய்க் காணப்பட்டார். அதற்கேற்றாற் போல அவருடைய பெட்டியிலுள்ளவையே களவாடப்பட்டிருக்கின்றன. அதுதான் ஆச்சரியம் என்றேன்.

மானேஜர்:— கடைசியில்—ஜம்புலிங்கம் சொன்னபடியே செய்து விட்டான் போலிருக்கிறதே!—எப்படி இது—நடந்திருக்கும்!—உம்? — இத்தனை காவல்களையுங் கடந்து!—உம்?

கமி:—அயோக்யப் பயல்! சப் இன்ஸ்பெக்டரைப் போலவும், அவன் ஆட்களில் சிலர் கான்ஸ்டேபில்களைப் போலவும் தோன்றி வேலையை முடித்துக்கொண்டுபோய் விட்டிருக்கிறான். போலீஸ் உடையிலிருந்ததினால் அவர்களை யொருவரும் தடுக்கவில்லை.

XII

மதராஸ் பாங்கியில் கொள்ளை நடந்து இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன! ராயப்பேட்டையில், மாடர்ன் ஹிண்டு ஹோட்டலில், ஓர் அறையில் ஜெயங்கொண்ட சோழபுரம், உலகநாதம்பிள்ளை உட்கார்ந்திருக்கிறார். ஹோட்டல் வேலையாளில் ஒருவன் வந்து அவரை யாரோ டெலிபோனில் கூப்பிடுவதாய்ச் சொன்னான். உடனே எழுந்து டெலிபோனிருந்த அறைக்குச் சென்றார்.

"ஆம்! நான்தான்.—யார் அது?—ஓ! சரி —நேற்றுப் பேசினோமே அந்த சங்கதியைப்பற்றித் தானே?—சரி.

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.



ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 4. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 6-க்கு ரூ. 1. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
நெ. 2 (ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை.

நீலகிரி
காப்பிக் கொட்டை

கீழ்கண்ட ரகங்களை சகல சார்ஜூம் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்கு தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் வி. பி. ரெயில்வே பார்சல் (Passenger Train) மூலமாய் அனுப்பப்படும்.

10 ℔ எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக் கொட்டை	ரூபா	5	7	0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)				
1 × 30 ℔ மூட்டை நீலகிரி "O" சைஸ்	,,	15	1	0
1 × 30 ℔ மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு	,,	13	3	0

இன்னும் இதர காப்பிப் பொடி டின்களின் விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-T. ஸ்டேன்ஸ்; & Co. Ltd, கோயம்புத்தூர்

Tel:—"SIMILICURE" Pox 643 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை
தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co,
Economic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

முக்கிய அறிவிப்பு.

அமிர்தாஞ்சன் டிப்போவின் படை மெழுகு

இதுவரையில்
ராஜா-ராணி, வியாபாரக் குறியுடன்விளங்கிய எமது வில்லியம் அண்டு கம்பெனியின் படை மெழுகு இப்பொழுது கீழ்க்கண்ட வகையில் மாற்றப்பட்டிருக்கிறது.

அமிர்தாஞ்சன் டிப்போவின் மூவர்ண 'உதய சூர்யன்'

மேற்படி தகவலையறியும்படி முக்கியமாக எமது வாடிக்கைக்காரர்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். வியாபாரக் குறியில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே தவிர எமது மருந்தின் தயாரிப்பில் எவ்வகை மாறுதலுமில்லையென்று உறுதி கூறுகிறோம்.

அமிர்தாஞ்சன் டிப்போ பம்பாய், மதராஸ், கல்கத்தா

ஸ்டாக் செய்பவர்கள்:—எ. பி. பரேக், சைனா பஜார் ரோட், மதராஸ்
ஷியாம் & கம்பெனி, பந்தர் தெரு, மதராஸ்.



ஹைகோர்ட் ஜட்ஜ்களாலும் ஆககிலேயர்களாலும் ஜமீந்தார்களாலும் உயர்தர உத்தியோகஸ்தர்களாலும் பிரபல தனவைசியர்களாலும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று கவர்ன்மெண்டு 26 ஜில்லாக்களுக்கும் போர்டு மூலமாய் சப்ளை செய்து கொண்டு வரப்பட்ட உறுதியான இரும்புப் பெட்டிகளும் நயமான இரும்பு பீரோக்களும் எங்களிடம் சரஸமான விலைக்குகிடைக்கும்



ஸ்தாபிதம
1885.

பழ. மு. முத்தய்யா செட்டியார் & ஸன்ஸ்,
இரும்பு பெட்டி வியாபாரம்.
1, திருவொற்றியூர் ஐரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, மதராஸ்.
பிராஞ்சு ஆபீஸ்,—1/135. பிராட்வே, மதராஸ்.

சரி.—உப்-இதோ வருகிறேன் — ஆபீசுக்குத்தானே? — ஓ! பங்களாவுக்கா—சரி. வேலையொன்றுமில்லை. இதோ வருகிறேன்,''

என்று டெலிபோனை வைத்துவிட்டு, தன் அறைக்குச் சென்று உடுத்திக்கொண்டு வெளியே சென்றார். இவர் டெலிபோனை வைத்த அரை நிமிடத்திற்கெல்லாம், வேறோரிடத்தில் இருவர் டெலிபோனில் பேசிக்கொண்டனர்.

செ 19.—உலகநாதம் பிள்ளை மாடர்ன் ஹிண்டு ஹோட்டல், கமிஷனரால் அழைக்கப்பட்டு, அவருடன் பேச அவர் பங்களாவிற்குப் போகிறார்'' என்பதே அவர்கள் பேசிக்கொண்டது.

சுமார் இருபது நிமிடங்கள் கழிந்திருக்கலாம். கமிஷனர், தன்னுடைய பங்களாவில், மேன்மாடியில், நீண்ட தாழ்வாரத்தில், ஒரு சாய்வான நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கிறார். அங்கிருந்து பார்த்தால், தோட்டம், வெளி கேட்டும் நன்றாய்த் தெரியும். கைகடியாரத்தைப் பார்த்தார். தனக்குள் "என் இன்னும் வரவில்லை? அவர் சொன்னதைப் பார்த்தால் இதற்குள் வந்திருக்கவேண்டுமே!" என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே கேட்டைத் தாண்டி, உள்ளே ஒரு மோட்டார் வண்டி நுழைந்து வருவதைக் கண்டார். அடுத்த நிமிஷம் உலகநாதம் பிள்ளை மாடிப்படிகளின்மீதேறி இவரை நோக்கிவந்தார். சாய்ந்து கொண்டிருந்த கமிஷனர், சற்றே நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "வாருங்கள்! அந்த நாற்காலியை இப்படியருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்காருங்கள்'' எனவும் உலகநாதம் அவரருகில் உட்கார்ந்து கொண்டார்.

கமி:—நேற்று உங்களைக் கண்டபின் ஐ. ஜி. யோடு கலந்து பின் ஹோம் மெம்பரையும் கண்டு, ஏற்பாடுகளைச் சொன்னேன். அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். நாங்கள் போலீஸார், ஒன்றும் செய்வதற்கில்லை. அதைத் தான் நேற்று சொன்னேனே. எல்லாம் உம்மால்தானிருக்கிறது. நீர் எப்படிச்செய்யலாம் என்று யோசித்திருக்கிறீர்?

உலக:—ஜம்புலிங்கத்தின் விஷயத்தில் இப்படிச் செய்யவேண்டும் என்று முன்னதாகவே தீர்மானஞ் செய்துகொண்டுபிரவேசிப்பதற்கில்லை: அந்த விஷயத்தில் எனக்குப் போதிய அநுபவம் ஏற்பட்டிருக்கிறது

என்று சொல்லிக்கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து கமிஷனரிடம் நீட்டினான். கமிஷனர் அதை ஆவலோடு வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அதில்

"இருபத்திநான்கு மணி நேரம் உனக்கு அவகாசம் தருகிறேன். அதற்குள் உன்னுடைய ஊரைப் பார்த்துப் போய்விடவும். வீணாய்த் தலையிட்டுக்கொள்ளாதே ஜம்புலிங்கம்,''

என்றிருந்தது. இதைப் படித்த கமிஷனர் திகைத்துப் போனார்.

கமி:—இது எப்பொழுது—?

உலக:—நேற்று என் சிநேகிதர் மூலம் தங்களுக்கு அறிமுகமாக்கிவைக்கப்பட்டுப்பேசிக் கொண்டிருந்துவிட்டுச் சென்றேனல்லவா? தங்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, நேராக நான் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றேன். என் மேஜையின்மீது, நன்றாய்த் தெரியும்படியாக வைக்கப்பட்டிருந்தது. அது அங்கு எப்படி வந்தது? யார் கொண்டு வந்து வைத்தார்கள் என்பதை அறிந்துகொள்ளக் கூடவில்லை. எல்லோரையும் விசாரித்துப்பார்த்தாய்விட்டது. ஜம்புலிங்கத்தின் கடிதப்படி எனக்கு இன்னும் மூன்று மணி நேரமே அவகாசமிருக்கிறது.

கமி:—ஆனால் நீங்கள்—இது விஷயத்தில்—?

உலக:—இது கிடக்கிறது, நான் சொன்ன விஷயத்திற்கு நீங்கள் இணங்கியிராவிட்டால் கூட நான் அவனை இத்தடவை ஒரு கை பார்ப்பதே சரி என்று தீர்மானஞ் செய்துகொண்டே வந்தான். போன தடவை என்னை ஏமாற்றிவிட்டதாகக் கொஞ்சம் இறுமாப்பு அடைந்திருக்கிறான். அப்பொழுது எனக்கு அவ்வளவு அனுபவம் போதாது. இப்பொழுது பார்ப்போம். கட்டாயம் அந்தப் பயலை என்னால் கூடியவரை ஒரு கை பார்த்தேவிடவேண்டும். இதற்கெல்லாமா அஞ்சிவிடுவது?

கமி:—நீங்கள் சிறியவர்களாயிருந்தாலும், நல்ல உற்சாகமும், தைரியமும் உடையவர்களாயிருப்பதைக் காண நான் மிக்க சந்தோஷமடைகிறேன். ஏதோ, ஜெயமடைந்து திரும்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

உலக:—சரி. ஆனால், நான் உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

என்று எழுந்தவரை நோக்கிக் கமிஷனர் "இதை வாங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு இந்த விஷயத்தில் எவ்வளவு உதவி வேண்டியிருந்தாலும் இதைக் காண்பிப்பீர்களானால், நான் உள்பட இந்த போலீஸ் படை முழுதும் திரண்டு வந்து கீழ்ப்படிந்து நடக்கும். கைச் செலவிற்கு—''

என்று மணிபர்ஸை எடுக்க உலகநாதம் பிள்ளை "அதெல்லாம் இப்பொழுது ஒன்றுந் தேவையில்லை. தற்சமயம் என்னிடம் போதிய பணமிருக்கிறது. பின்னால், வேண்டியிருந்தால் பார்த்துக்கொள்ளுவோம்'' என்று சொல்லி, அவர் கொடுத்த கடிதத்தை வாங்கி பத்திரமாய் வைத்துக் கொண்டு கீழே யிறங்கினார். இரண்டு படிகளிறங்கியிருப்பார். அதற்குள் பின்னால், கமிஷனர் கூப்பிட்டுக்கொண்டு வருவதைக் கண்டு நின்றார் கமிஷனர். இவரை நெருங்கிச் சற்று தாழ்ந்த குரலில்,

"நேற்று உங்கள் சிநேகிதர் ஒருவரை வரும்படியாகத் தந்தியடிக்கப் போவதாய்ச் சொன்னீர்களே. அவர் வந்துவிட்டாரா?'' என்று கேட்டார்.

உலக:—ஆம், தியாகராஜன், வந்துவிட்டிருப்பான். என்னைச் சந்திக்க வேண்டாம் என்று சொல்லி, வேறொரு ஆள்மூலம், நான் அவனுக்குச் சொல்லவேண்டிய சங்கதிகளை எழுதியனுப்பிவிட்டேன். அவன் ஒரு பக்கத்திலிருந்து வேலை செய்வான். நான் ஒரு பக்கத்திலிருந்து வேலை செய்வேன். எங்கள் நடுவிலிருந்து தப்பிக்கொள்ளட்டும் அவன், பார்ப்போம்.

என்று பதிலளித்து விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

(தொடரும்.)

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

"ஸங்கீத அபிமானி''

சென்ற இரண்டு வருஷமாக ஸங்கீதத்துக்கென்றே நடத்தப்பட்டு வரும் ஒரு உயர்தர மாதாந்தப் பத்திரிகை.

உள்நாட்டு வருடச் சந்தா ரூ. 1—8.
வெளிநாட்டு ,, ரூ. 3—0.

1935-ம் வருஷத்திய காலிகோ பயிண்ட் செய்த வால்யூம் விலை ரூ. 3

ஸங்கீத அபிமானி ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

ஸாமவேதம்.

பரிபூரண தமிழ் மொழி பெயர்ப்பு வேதோபநிஷத் ஆசிரியர் ஜம்புநாதர் எழுதியது. அடக்க விலை பதிப்பு. விலை ரூ. 1 அணா. 8.

JAMBUNATHAN,
Suk Nivas, Khar, Bombay 21.

HAVE A SOUND SLEEP



By using our Indian-made Mosquito curtains, highly approved by persons of every rank for their strong netting, durability and beautiful finishing.

PRICES.

				Ordi-nary.	Supe-rior.	Best	
6'	x 3½'	x 3½'	Re.	1- 0	1- 4	1- 8	each
6'	x 4'	x 4'	"	1- 4	1- 8	1-12	"
6½'	x 4½'	x 4½'	"	1- 8	1-12	2- 0	"
7'	x 5'	x 5'	"	1-12	2- 0	2- 4	"
7½'	x 6'	x 6'	"	2- 0	2- 4	2- 8	"

Purchaser of three will get one curtain 6' x 4' x 4' free. Packing Free.
POSTAGE EXTRA.

PRABHAT TRADING CO.,
12, Sikderpara Lane, Barabazaar,
CALCUTTA.

நஞ்சன்கூடு பல்பொடி ப்ராக்டெரியின்
கூடலாயில்
சிறந்தஸ்நானத் தைலம்
அணா 3 யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதறாஸ் ரூ. 1.
(முக்கிய ஊர்களில் டிப்போ ஏற்படுத்துகிறோம்.)

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத்தூளை
உபயோகியுங்கள்.

TRADE MARK

1 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8

ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர் முகம் அண்டு கம்பெனி,
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்

இந்திய மக்களுக்கு

இந்திய

தேயிலை

பானம்

தேயிலை பானம் அருந்துவோரின் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது. ஜாதி மத பேதமன்னியில் ஒவ்வொருவரும் மென்மேலும் தேயிலையைப் பற்றிப் புகழ்கின்றார்கள். உண்மையாகவே ஆதரிக்கக்கூடிய அறிகுறிகளிருக்கின்றன. இதற்கிடான பானம் வேறெதுவுமில்லை யென்று இந்திய மக்களில் புதிதாகத் தேயிலை பானம் செய்ய ஆரம்பித்தவர்களும் உணருகிறார்கள்.

உலகிலேயே சிறந்தது இந்தியாவில் உண்டாகிற தேயிலையைவிட வேறொன்றுமில்லை. உற்சாகமான மனதையும் ஆரோக்கியமான சரீரத்தையும்பெற இந்தியத் தேச பானமான இந்தியத் தேயிலை பான வழக்கத்தை விடாது பழக்கிக் கொள்ளுங்கள்.

தேத்தண்ணீர் தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவை. உலர்ந்த பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் நல்ல இந்தியத் தேயிலையைப் போட்டுக் கொதிக்கும் ஜலத்தைவிடு. ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டிப் பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக்கொள்ளவும்.

உண்மையான ஸ்வதேசி சரக்கு - இந்திய தேயிலை

IK 35

Regd. No. 2514.

ஸர்வ ஜன ரஞ்சகமான ட்ராமா ஸெட்

ஸம்பூர்ண ராமாயணம்

10 ரிகார்டு ஸெட் (C. A. 1071-80)

S. Alamelu. S. Alamelu.

ஸீதாக்னிப்ரவேச கட்டம்

ஸீதை:—பாதிவ்ருத்யமிருந்தும் கணவனால் கைவிடப்பட்ட எனக்கு அக்னி தான் கதி..................

இந்த பாகத்தைக் கேட்டு மனமுருகி கண்ணீர் விடாமலிருக்க முடியாது.

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras—*Editor* C. R. Srinivasan B. A.